# அசையா விளக்கு

(சிறு கதைகள்)

XKVJ:58
1079

★

கி. வா. ஜகந்நாதன்

★

அமுத நிலையம் பிரைவேட் லிமிடெட்
தேனாம்பேட்டை :: சென்னை-18

உரிமை பதிவு

அமுதம்-136
முதற் பதிப்பு: டிசம்பர், 1959

1079

**விலை ரூ. 2-50**

நேஷனல் ஆர்ட் பிரஸ்,
தேனாம்பேட்டை, சென்னை—18.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | அசையா விளக்கு | 1 |
| 2. | நேர்மை | 15 |
| 3. | வைதாரையும் | 24 |
| 4. | சந்திர மண்டலம் | 36 |
| 5. | புரிந்தது | 47 |
| 6. | சாமி பாறை | 57 |
| 7. | தாய் இல்லாப் பிள்ளை | 68 |
| 8. | பின் பாட்டுக்காரர் | 80 |
| 9. | துறவிலும் துறவு | 96 |
| 10. | துளசி மாடம் | 113 |
| 11. | முருகன் பணம் | 125 |
| 12. | என்ன குற்றம்? | 131 |

# குறிப்பு

இதற்கு முன் வெளியாகியுள்ள என் கதைத் தொகுதிகளைப்போல இதுவும் அவ்வப்போது எழுதிய கதைகளின் தொகுதி. இது ஒன்பதாவது கதைத்தொகுதி. இதில் உள்ள பன்னிரண்டு சிறு கதைகளும் வெவ்வேறு போக்கை உடையன.

"காந்தமலை"<br>சென்னை-28<br>20-12-59

கி. வா. ஜகந்நாதன்

# அசையா விளக்கு

## 1

காவேரிக் கரையில் உள்ள மோகனூர் ஒரு சிவத் தலம். அதற்குத் தேவாரம் இருந்திருக்க வேண்டுமென்றும், மறைந்து போன பதிகங்களில் அந்தத் தலத்துத் தேவாரமும் போய்விட்டதென்றும் புலவர்கள் சமாதானம் கூறுவார்கள். தட்சிண வாகினியாக ஓடும் அகண்ட காவேரியின் கரையில் மேற்கு நோக்கியது இறைவன் சந்நிதி. ஆடி மாதம் காற்று அலை மோதும். ஆனாலும் கர்ப்பக் கிருகத்தில் சுவாமிக்குப் பின்னால் இருக்கும் விளக்குச் சிறிதும் அசையாது. இந்தக் காரணத்தால் அந்தச் சுவாமிக்கு அசல தீபேசுவரர் என்று பெயர் உண்டாயிற்று; வடமொழிப் புராணத்தில் நிச்சல தீபேசுவரர் என்று வருகிறதாம். கோயில் பழையது; சுவாமியும் பழையவர்; அவர் பேரும் பழையதுதான்.

இந்தக் கோயிலில்தான் உமாபதி குருக்கள் பூசை செய்து வந்தார். பரம்பரை பரம்பரையாக அசல தீபேசுவரரை வழிபடும் குடும்பத்தில் பிறந்தவர் அவர். வலிமை பெற்ற உடற் கட்டுள்ளவர். பூசா விதானங்களை நன்றாக அறிந்தவர். தம்முடைய தந்தையாரிடம் பூசைக்குரிய மந்திரங்களையும் வாழும் வகையையும் நன்றாக உணர்ந்து கொண்டவர். ஒழுக்கத்தைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்ற கருத்துடையவர். திருமணமாகி ஒரு குழந்தை கூட இருக்கிறது. அவர் அர்ச்சனை செய்யும் போது கேட்கவேண்டும்; வெண்கல மணி அடிப்பது

போல இருக்கும் அவர் குரல். மந்திரங்களைத் தெளிவாகச் சொல்வார். கடவுள் மாத்திரம் அவற்றைக் கேட்டால் போதும் என்று திருப்தி அடைகிறவர் அல்லர் அவர். மனிதர்களும் கேட்கவேண்டும் என்று இனிமையான குரலிலே அர்ச்சனை செய்வார். அதில் ஒரு விதமான இசை இழையோடும். இதற்காக அர்ச்சனையையே பாட்டுக் கச்சேரி ஆக்கிவிட மாட்டார். அப்படி ஆக்கிவிட விரும்பினால் அவர் செய்திருக்கலாம்; ஏனெனில் அவருக்குச் சங்கீதம் நன்றாகத் தெரியும்.

அந்தக் காலத்தில் புதிய சட்டங்கள் வரவில்லை. கோயில்களில் தட்டெடுக்கவும் பாட்டுப் பாடவும் சதிராடவும் தாசிகள் இருந்தார்கள். அவர்கள் பொட்டுக் கட்டிக் கொண்டார்கள். நவராத்திரி காலங்களில் அவர்களுடைய பாட்டும் கூத்தும் நிகழும்.

★

தாசி மாணிக்கம் அன்று யாரோ புதிய பெண் ஒருத்தியை அழைத்துக்கொண்டு வந்திருந்தாள். மாணிக்கம் வயசானவள். உமாபதி குருக்களுடைய தந்தை காலத்திலிருந்தே கோயிலுக்குச் சேவகம் செய்கிறவள். அவளுடன் வந்திருந்த பெண் வேறு ஊர்க்காரி. அவளுக்குச் சிங்காரி என்று பெயர் வைத்திருந்தார்கள். அவள் அழகியென்று தெரிந்து வைத்த பெயர் அது என்று சொல்ல முடியாது. பெயர் வைத்ததற்குத் தக்கபடி அழகியாக வளர்ந்துகொண்டிருந்தாள். மாணிக்கத்துக்கு ஒன்று விட்ட தமக்கையின் பெண் அவள்.

குருக்கள், மாணிக்கம் அழைத்து வந்திருந்த சிங்காரியைப் பார்த்தார். அவள் அழகு அவருக்குக் கொஞ்சம் போதையை ஊட்டியது. "யாரடி, இந்தப் பெண்?" என்று மாணிக்கத்தைக் கேட்டார்.

"இவள் சேந்தமங்கலம்; எங்கள் அக்காள் மகள்; நன்றாகப் பாடுவாள்" என்றாள் மாணிக்கம்.

"இதுவரைக்கும் வந்ததில்லையே! நவராத்திரிக்கு யார் யாரோ வருகிறார்கள். இவளைப் பார்த்ததில்லையே! ஏன் நீ அழைத்து வரவில்லை?"

அவர் சிங்காரியின் உருவம் முழுவதும் பரந்திருந்த பெருவனப்பை அள்ளிப் பருகிக்கொண்டே பேசினார்.

"இத்தனை அழகாக இருக்கிறவளை நீ கண்ணிலே காட்டாமல் இருந்துவிட்டாயே!" என்று குருக்கள் சொன்னபோது மாணிக்கத்துக்குத் துணுக்கென்றது; அதே சமயத்தில் மகிழ்ச்சியும் உண்டாயிற்று.

உமாபதி குருக்கள் அழகைப் பார்க்கிறவர் அல்லர்; அவர் சிறந்த ஒழுக்கம் உடையவர் என்பது ஊர் அறிந்த செய்தி. அவர் இப்போது இவள் அழகைப் பார்க்கிறார்! இதுதான் மாணிக்கத்துக்குத் துணுக்கைத் தந்தது. தங்கள் கூட்டத்தினருடைய வலையில் விழாமல் தப்பி நிற்கும் இவரை வசமாக்க ஒருத்தி கிடைத்தாளே என்ற நினைப்பில் அவளுக்கு மகிழ்ச்சி உண்டாயிற்று. அவருக்கு உள்ள பெருமையைக் குலைப்பதில் அவளுக்கு என்ன திருப்தியோ தெரியவில்லை!

"ஆமாம்; இவள் நல்ல அழகி என்பதைச் சேந்த மங்கலம் ஜமீன்தார்கள் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு எட்டாத கனியாக இவள் இருக்கிறாள்."

குருக்கள் அழகைப் பற்றிப் பேசினவுடனே மாணிக்கத்துக்குத் துணிவு பிறந்து விட்டது. இல்லாவிட்டால் அந்தச் சந்நிதியில் இப்படியெல்லாம் பேசுவாளா?

"இவள் பாட்டை நான் கேட்க வேண்டுமே!"

"ஆகா, நீங்கள் கேட்பது அவளுக்குப் பாக்கியம் அல்லவா?"

இதற்குள் சிங்காரியே பேசலானாள்; "இந்த வெள்ளிக் கிழமை பாடுகிறேன்" என்றாள்.

"இன்றைக்கே இங்கேயே பாடேன். உன் குரல் இனிமையை இவர் தெரிந்து கொள்ளட்டுமே!" என்ருள் மாணிக்கம்.

"சே, சே, இப்படித் திடீரென்று புதிய இடத்தில் பாடச் சொன்னல் இசைவாக வருமா? அவள் விருப்பப் படியே விட்டு விடு."

"உங்கள் விருப்பம் இவளுக்குத் தொந்தரவு கொடுக் கக் கூடாதென்று இருக்கும்போது நான் கட்டாயப்படுத்த வில்லை" என்று சொல்லி மாணிக்கம் ஒரு புன்முறுவலை நழுவ விட்டாள். அதற்கு என்ன பொருளோ தெரிய வில்லை.

"அப்படியானல்..." குருக்கள் பேசினர்.

"இன்னும் இரண்டுநாள் பொறுங்கள்; வெள்ளிக் கிழமை யன்று இங்கே ஒரு பாட்டுக் கச்சேரியே வைத்து விடலாம், பககவா த்தியங்களுடன்."

"வேண்டாம், வேண்டாம். ஊரைக் கூட்ட வேண் டாம். சும்மா ஒரு தம்புரா இருந்தால் போதும். எனக்கு வேண்டிய இரண்டு பேர்களை வைத்துக்கொண்டு இவள் பாட்டைக் கேட்போம்."

குருக்கள் சொன்னதைச் சிங்காரி ஆமோதித்தாள்; "அதுதான் சரி, சின்னம்மா!" என்ருள்.

குருக்கள் வைத்த கண் வாங்காமல் சிங்காரியைப் பார்த்துக் கொண்டிருந்தார். சிங்காரியோ கர்ப்பக்கிருகத் தையே பார்த்துக் கொண்டிருந்தாள். மாணிக்கம் இந்த இரண்டு பேர்களுடைய பார்வைகளையும் கவனித்துக் கொண்டிருந்தாள். குருக்களுடைய உள்ளத்தில் ஏதோ ஒரு வகையான வேதனை; கலக்கம். சிறிதே தென்றல் வீசியது; உடனே புயலாக மாறியது. ரோஜாவின் மணம் வீசுவதுபோல ஒரு பிரமை; அடுத்த கணமே ஏதோ காட்டுப் பூவின் நெடி. சிங்காரி இந்த மோனத்தைக் கலைத்தாள். "சின்னம்மா, இந்தச் சாமி விளக்கு ஆடா

தாமே; அசையாதாமே! அம்மா சொல்லி யிருக்கிருள். அது உண்மையா?"

குருக்கள் பின்னே திரும்பி அசையா விளக்கைப் பார்த்தார்.

"ஆமாம். எங்கள் ஊர்ச் சுவாமி மகத்துவம் இது. எத்தனை காற்று அடித்தாலும் சுவாமிக்குப் பக்கத்தில் இருக்கும் இந்த விளக்கு அசையாது அதனுல்தான் அசல தீபேசுவரர் என்ற திருநாமம் இவருக்கு வந்தது."

இப்போது அந்த அசையா விளக்கையும் முன்னே நின்று ஒளிவிடும் அழகு விளக்கையும் மாறி மாறிப் பார்த்தார் குருக்கள்.

## 2

குருக்கள், பரிசாரகர், குருக்கள் வீட்டுக்குப் பக்கத்து வீட்டுக்காரர், குருக்களுக்கு வேண்டிய செட்டியார் ஒருவர்.—இந்த நாலு பேருக்கு முன்னுலே சிங்காரி பாடினுள். மாணிக்கம் வந்திருந்தாள். கோயில் நாயனக்காரர், தவில்காரர், அவர்களைச் சேர்ந்த இரண்டு பேர்கள் வந்திருந்தார்கள். மொத்தம் ஒன்பது பேர்கள்; பாடுகிறவளையும் சேர்த்தால் பத்து.

முன்னுலே தீர்மானித்தபடி தம்புராச் சுருதி மாத்திரம் வைத்துக்கொண்டு சிங்காரி பாடினுள். அதையும் அவளே மீட்டிக்கொண்டு பாடினுள். இதற்கென்று அவள் ஒன்றும் சிறப்பாக அலங்காரம் பண்ணிக்கொண்டு வரவில்லை. ஆனுலும் குருக்களுடைய கண்களில் அவள் முற்றிழை யணிந்த மோகனுங்கியாகவே தோன்றினுள்.

அவள் பாட்டா பாடினுள்? தேனையே வடித்து ஊற்றினுள்; அமுதத்தைப் பாட்டாக்கிப் பொழிந்தாள். அவள் பாடிய ராகம் மனத்தை அலை வீசாத கடலாக ஆக்கியது; இல்லை, இல்லை. மனமென்னும் ஊர்க்குருவி

கருடனாகிப் படபடப்பு இல்லாமல் மெல்ல மெல்லப் பறந்தது. மேலே, மேலே, இன்னும் மேலே; இதற்கு முன் போகாத, எட்டாத உயரத்திலே பறந்தது. அது பறந்ததா, மிதந்ததா, தூங்கியதா?—எப்படியும் சொல்லலாம்.

அவள் சுரம் பாடியபோது உள்ளம் அதற்கு ஏற்றபடி குதித்தது. அலை புரளும் கடலாக ஆரவாரம் செய்தது துள்ளியது.

இப்படி எல்லோரும் அநுபவித்தார்கள் என்று திட்டமாகச் சொல்ல முடியாது. குருக்கள் மனம் இப்படி இருந்தது. தேவலோக மோகினி ஒருத்தி எழிலும் குரலும் அமுதத்தால் படைத்து வந்திருக்கிறாள் என்றே கற்பனை செய்தார் அவர்.

பாட்டு முடிந்தது. "அற்புதம்! அற்புதம்!" என்று கூவினார் குருக்கள்.

"உங்கள் ஆசீர்வாதம் இருந்தால் இவள் நல்ல நிலைக்கு வருவாள்" என்றாள் மாணிக்கம்.

"நிச்சயமாக இவள் முன்னுக்கு வந்து விடுவாள்" என்று குருக்கள் ஆசீர்வாதம் செய்தார்.

சிங்காரி எழுந்து குருக்களை வணங்கினாள்; மாணிக்கம் சொல்லித்தான். "கோயிலில் கடவுளைத்தான் வணங்க வேண்டுமே யன்றி மற்றவர்களை வணங்கக் கூடாது!" என்ற குரல் குருக்களுக்குள்ளே கேட்டது.

ஆம்; அந்தக் குரல் காலஞ்சென்ற அவருடைய தந்தையார் குரல். அவர் தந்தையார் அர்ச்சனை செய்துவிட்டு விபூதி ருத்திராட்சம் அணிந்த கோலத்தோடு மகா மண்டபத்துக்கு வந்தபோது, யாரோ பக்தி நிறைந்த பெண்மணி அவரைக் கண்டு தன் மனத்தில் உண்டான பெருமதிப்பினால் வணங்கினாள். அப்போது அவர் தடுத்து அந்த வார்த்தைகளைச் சொன்னார். இப்போது உமாபதி குருக்களுக்கு அந்தக் குரல் கேட்டது.

"உங்கள் தயை இருக்கவேண்டும்" என்று மாணிக்கம் சொன்னாள். சிங்காரி அசையா விளக்கைப் பார்த்துக் கொண்டு நின்றாள். வெளியே சில்லென்று காற்று வீசியது. அதனால் அவள் உடம்பு சிறிதே நடுங்கியது. "இந்தக் காற்றிலும் உள்ளே விளக்குச் சிறிதும் அசையவில்லையே, சின்னம்மா?" என்று அவள் கேட்டாள்.

"இந்தக் கோயிலின் பெருமையே அதுதானே? மற்றச் சமயங்களில் எல்லாக் கோயில்களிலும் விளக்கு அசையாமல் இருக்கும்; ஆனால் கடுமையாக வெளியே காற்று வீசினாலும், இந்த மகா மண்டபத்தில் காற்று அடித்தாலும் உள்ளே விளக்கு அசையாது அங்கே."—இது மாணிக்கத்தின் விளக்கம்.

## 3

எல்லோரும் போய்விட்டார்கள். சிங்காரியின் உருவமும் அவள் பாட்டும் இப்போது குருக்கள் உள்ளத்தில் நின்றன. வேறு ஒன்றும் நிற்கவில்லை. அந்த உள்ளம் படாத பாடு பட்டது. பெரிய போராட்டம் தொடங்கியது. சிங்காரி தாசி என்ற நினைவை அடிக்கடி அவர் தம் மனத்திலே கொண்டுவந்து நிறுத்தினார். எப்படியாவது அவளைத் தன்னுடையவளாக்கிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் கணத்துக்குக் கணம் வலிமை பெற்றது. பஞ்சாக இருந்த அது திரியாகி நூலாகிக் கயிறாகித் தேர் வடமாய் அவர் உள்ளப் பெருந்தேரை இழுத்தது. அந்தத் தேரில் சிங்காரி வீற்றிருந்தாள்!

அவருக்கு அன்று முழுவதும் ஒன்றும் ஓடவில்லை. அர்ச்சனை செய்யும் போதே நாமங்கள் மறந்து போயின. வாய் மந்திரத்தைச் சொல்லும்; கை மலரைப் போடாது. கை மலரைப் போடும்; வாய் மந்திரம் சொல்லாது; மனம் சிங்காரியின் திருவடியிலே போய்ப் புரளும். இப்படி

ஒரு நிலை உண்டென்பதைக் கனவிலும் அவர் நினைத்தறியார்.

அவருக்குத் திருமணம் ஆன புதிதில் பெண்டாட்டியிடம் ஆசையாக இருந்தவர்தாம். இன்றும் என்ன, அந்த மனைவியிடத்தில் அன்பு குறைவா? ஆனாலும் இந்த மோகினியை நினைத்தாலே அவருக்கு உலகம் மறந்து போகிறது. அன்றைப் போதை எப்படியோ அவர் கழித்து விட்டார். இராத் தூக்கம் இல்லை. மனத்தில் எண்ணங்கள் போராடின. அவள் அவருக்கு உரியவளாவது அவளுக்குப் பெருமைதான். ஆனால் அவர் அவளுக்கு உரிமையாவது அவருக்குப் பெருமையா? அது முறையா, தருமந்தானா?— இதுதான் போராட்டத்துக்குக் காரணம்.

மறுநாள் பகல் முழுவதும் மதங் கொண்ட யானை போல அவர் மனம் கட்டுக்கடங்காமல் அட்டகாசம் செய்தது. அன்று இரவு மாணிக்கத்தின் வீட்டுக்குப் போகத் துணிந்து விட்டார் அவர். இரவு ஒன்பது மணி. உணவு கொண்டு வெளியே புறப்பட்டார். இரண்டு அக்கிரகாரங்களையும் தாண்டி நடுவிலே உள்ள வாழைத் தோட்டச் சாலையைத் தாண்டிக் கடை வீதியையும் தாண்டிச் சென்றார். சொல்வது எளிதாக இருக்கிறதே யொழிய அவர் நடந்து சென்றது அவ்வளவு எளிதாக இல்லை. தம்முடைய தெருவின் முனையை அடைந்ததுமே அவர் திரும்பி வீடு சென்று விடலாம் என்று எண்ணினார்; திரும்பினார்; நின்றார். மறுபடியும் திரும்பி நடக்க ஆரம்பித்தார். இப்படிச் சுவாமிக்கு அங்கங்கே மண்டபப்படி நடக்கிற மாதிரி அவர் நின்று நின்று சென்றார். பாவம்! தவறு செய்யும் வீரம் அவருடன் பிறக்கவில்லை!

கடைசியில் அந்தத் தெருவை மிதித்து விட்டார். அப்போது, அவருக்கு என்னவோ செய்தது. புல்லரித்தது. அடுத்த கணமே அது நடுக்கமாக மாறியது. அவருக்கு

மாணிக்கத்தின் வீடு தெரியும். சிறிய கூரை வீடு. அந்தக் காலத்தில் மச்சு வீடுகளே குறைவு.

திருடன் ஒளிந்து ஒளிந்து செல்வது போலப் போனார். நல்ல வேளை! வீதியில் யாருடைய நடமாட்டமும் இல்லை; அந்தக் காலத்தில் அது சின்ன ஊர்தான். மெல்லச் சமாளித்துக் கொண்டு அந்த வீட்டுத் திண்ணையில் அமர்ந்தார். கதவைத் தட்டலாமா, வேண்டாமா? கனைத்தால் போதுமா?—என்ன செய்வது என்று தெரியவில்லை. பெயரைச் சொல்லிக் கூப்பிட்டால்?—ஆம்; மாணிக்கத்தையே கூப்பிடலாம். அவர் குரல் அவளுக்குத் தெரியும். அவரை அந்த நேரத்தில் கண்டால் அவள் ஊகித்துக் கொள்ள மாட்டாளா? அதிகமாகப் பேச வேண்டியதே இல்லை. "சொல்லித் தெரிவதில்லை மன்மதக் கலை" என்று பாரதியாரே பாடியிருக்கிறாரே!

திண்ணையிலிருந்து எழுந்தார். கால் வெட வெடவென்று நடுங்கியது. கதவை நோக்கி ஓர் எட்டு வைக்கிறதற்குள் கால் மலையாகக் கனத்தது. அடுத்த கணம் அது காற்றாக மாறி நிற்கவே முடியாமல் கீழே தள்ளியது. எப்படியோ கதவருகில் சென்று விட்டார். தட்டுவதா, அழைப்பதா? மூச்சுவிடக் கூட அவருக்குத் தைரியம் இல்லை. பிராணாயாமம் செய்ய வழி தெரியாமல் மூக்கைப் பிடித்துக் கொண்டவனுக்கு மூச்சு முட்டி உடம்பு நடுங்கி வேர்க்குமே, அப்படி ஆயிற்று அவருக்கு. உடம்பு முழுதும் வேர்வை. மூச்சே வரவில்லையோ!

காது இப்போது கூர்மையாகி விட்டது. உள்ளே மெல்ல யாராவது மூச்சு விட்டாலும் கேட்டது. தூங்குகிறார்கள் போல இருந்தது. தூங்குகிறவர்களை எழுப்பலாமா?

அப்போது ஏதோ வெளியிலே சர சரவென்று சத்தம் கேட்டது. யாரோ வீதியில் நடந்து வருவதுபோலத் தோன்றியது.

இந்த நிலையில், வருகிறவர் அவரைத் தெரிந்து கொண்டால்?—அவர் உடம்பு கட்டுக் கடங்காமல் ஆவேசம் வந்தவனைப்போல் நடுங்கத் தொடங்கியது. வீதியிலே போகிறவன் குருடனாக இருக்கக் கூடாதா? அப்படியே திரும்பிப் போய்விடக் கூடாதா? அவரைப் பார்க்காமலே போகக்கூடாதா?

"யார் அங்கே?"—இப்போது குருக்கள் பேயடித்தவர் போலவே ஆகிவிட்டார். ஆனால் நல்ல வேளை! வீதியிலே வந்தவர் இரண்டு வீடுகளுக்கு முன்னால் தம் வீட்டுக் கதவைத் தட்டிய குரல் அது. கதவு திறந்த ஓசையும் மறுபடி மூடிய ஓசையும் கேட்டன. அதுவரையில் கால் நடுங்கக் கை நடுங்க உடல் நடுங்கக் கதவோடு ஒட்டிக் கொண்டிருந்தவர், மெல்லத் திண்ணை யோரத்துக்கு வந்து எட்டிப் பார்த்தார். "யார் அங்கே?" என்று கேட்டவர் இப்போது வெளியில் இல்லை யென்று திட்டமாகத் தெரிந்து கொண்டார்.

உடனே குறட்டிலிருந்து கீழே இறங்கினார். வந்த வழியே வாயு வேகம் மனோ வேகமாக நடை போட்டு வந்தார். ஓடி வந்திருப்பார். யாராவது ஏதாவது நினைத்துக் கொள்வார் என்று அப்படிச் செய்யவில்லை. வீட்டுக்கு வந்து கதவைத் தட்டினார். "யார் அங்கே?" என்று உள்ளிருந்து வந்த கேள்விக்குச் சரியாகவே பதில் சொல்ல முடியவில்லை; குழறினார்.

மனைவியிடம் அதிகமாகப் பேசாமல், குளிராக இருக்கிறது என்று சொல்லிப் படுக்கையில் விழுந்து உள்ளங் கால் முதல் உச்சிவரைக்கும் போர்வையால் போர்த்துக் கொண்டார்.

## 4

இரவில் உலகமே தூங்கியது. அவர் தூங்கவில்லை. செய்யத் தகாத காரியம் செய்தவரைப் போல அவர்

உள்ளம் நடுங்கியது. தம்மைத் தாமே வைது கொண்டார். இரவு முழுவதும் அவருக்குத் திடீர் திடீரென்று தூக்கிப் போட்டது. அடிக்கடி அசல தீபேசுவரர் சந்நிதியை நினைவிலே கொண்டுவந்து நிறுத்தினர்.

விடிந்தது. மார்கழி மாத மாதலால் தனுர் மாத பூசை செய்ய இன்று விரைவிலே அவர் எழுந்துவிட்டார். நீராடி விட்டுப் புறப்பட்டார். பரிசாரகர் தூங்கிக்கொண்டிருந்தார். அவரை எழுப்பினர்.

"ஏது இன்று இவ்வளவு சீக்கிரம்?" என்று அவர் கேட்டார்.

"கொஞ்சம் வேலை இருக்கிறது" என்று ஏதோ காரணம் சொன்னர்.

கோயிலுக்குள்ளே போனர். அபிஷேகம் செய்தார். தீபங்களைப் போட்டார். "சுவாமி, நான் பாவி!" என்று இரங்கினர். இன்னும் முதல் நாள் இரவு ஏற்பட்ட நடுக்கம் அவரிடம் இருந்தது. 'அந்தக்கரணம் தூயதாக இல்லாத என் பூசையை இறைவன் ஏற்பானு?' என்ற நினைவால் அவர் நடுங்கினர். அவர் கால் நடுங்கியது. அவர் கண் நடுங்கியது.

கர்ப்பக் கிருகத்துக்கு முன் சிறிய மண்டபம்; அதற்கு அப்பால் உள்ள மண்டபத்தில் நடராஜா முதலிய விக்கிரகங்கள் இருந்தன. அங்கே விளக்குப் போட்டார். போட்டு விட்டு அங்கே நின்றபடியே கர்ப்பக் கிருகத்தைப் பார்த்தார். "ஐயோ! என்ன இது?" என்று நடுங்கிப் போனர். ஒரு நாளும் அசையாத விளக்கு அசைந்து கொண்டிருந்தது!

அப்போது அவருக்குள்ளே ஒரு குரல் எழுந்தது. என்றே ஒரு நாள் அவர் தந்தையார் கூறிய விளக்கக் குரல் அது: "உமாபதி, இந்த அசையா விளக்கின் மகிமையை நீ தெரிந்துகொள்ள வேண்டும் பெரும் புயல் வீசினலும் இது அசையாது. இந்த அசையா விளக்கும்

அசையும்படி யாரோ ஒரு பாவி செய்தானும்.''—இது அவர் தந்தையார் குரல்.

அப்போது உமாபதி, ''எப்படி அசைந்தது?'' என்று ஆவலோடு கேட்டார்.

''இது கேள்விதான்; நான் பார்த்ததில்லை. எப்போதோ ஒருவன் அயலூரிலிருந்து வந்தவன் சுவாமிக்கு அர்ச்சனை செய்தானும். அவனும் குருக்கள் சாதியிலே பிறந்தவனும். அவன் அர்ச்சனை செய்தபோது விளக்கு நடுங்கியதாம். அதைக் கண்டு நடுங்கிப் போன என் முன்னோர் என்ன என்னவோ பிராயச்சித்தம் செய்தாராம். அந்தப் பேர்வழி ஒழுங்கப் பிசகுள்ளவன் என்பதைத் தெரிந்துகொண்டு வருந்தினாராம். நல்லவர் பொல்லாதவர்களைக் காட்டிக் கொடுக்கும் அற்புத விளக்கு இது என்ற உண்மையையும் அவர் தெரிந்து கொண்டாராம். அன்று முதல் தெரியாத மனிதர் யாரும் கர்ப்பக் கிருகத்துக்குள் நுழைவதில்லை.''

இது உமாபதி குருக்களின் நினைவுக்கு வந்தது. அந்த அற்புத அசையா விளக்கு இப்போது அசைகிறது. அவர் உடம்பு நடுங்கியது; கண் நடுங்கியது; விளக்கு அதிகமாக நடுங்கியது. 'ஐயோ, நான் ஒழுக்கம் பிறழ்ந்து விட்டேனா? பாவியாகி விட்டேனா?'

அப்போது பரிசாரகர் அங்கே வந்தார். ''ஏன் இங்கேயே நின்று கொண்டிருக்கிறீர்கள்? என்ன இப்படி நடுங்குகிறீர்கள்?''

''அங்கே பார்; அந்த விளக்கைத்தான்.''

''அதற்கு என்ன?''

''அது நடுங்கவில்லையா?''

''என்ன பைத்தியக்காரத்தனமாகப் பேசுகிறீர்கள்? உலகம் நடுங்கினாலும் அசல தீபேசுவரர் விளக்கு அசையுமா? எவ்வளவு நன்றாகச் சுடர் விட்டுச் சிறிதும் அசையாமல் எரிகிறது! நன்றாகப் பாருங்கள்!''

குருக்கள் பார்த்தார். அதற்குள் பரிசாரகர் அவர் உடம்பைத் தொட்டுப் பார்த்தார்.

“இவ்வளவு குளிரில் விரைவாக ஏன் எழுந்து வந்தீர்கள்? உங்கள் உடம்பு நடுங்குகிறது. அதனால் விளக்கு நடுங்குவதுபோலத் தோன்றுகிறது. விளக்கிலே நடுக்கம் இல்லை; உங்கள் உடம்பிலேதான் நடுக்கம்.”

என்ன அருமையான விளக்கம்! அவர் உடம்பிலே உள்ள நடுக்கத்தைத்தான் பரிசாரகர் பார்த்தார். உள்ளத்தில் உள்ள நடுக்கத்தை அவர் பார்க்க முடியுமா?

குருக்கள் நின்று நிதானித்தார். “அப்படியானால் விளக்கு அசையவில்லை என்று சொல்கிறாய்?”

“இதென்ன கேள்வி? அசல தீபேசுவரர் என்ற பெயரை மாற்றி வைக்க முடியுமா?”

“அப்பாடி!” குருக்கள் பெருமூச்சு விட்டார்.

பரிசாரகருக்கு ஒன்றும் விளங்கவில்லை. “கொஞ்ச நேரம் அந்தச் சப்பரத்திலே சாய்ந்துகொண்டு இருங்கள்; சரியாகி விடும்” என்றார்.

“பரவாயில்லை; இப்போது தேவலை.”

ஆம்; இப்போது அவர் நடுக்கம் குறைந்தது. “கடவுளே, இனி என் மனத்திலும் நடுக்கம் இல்லாமல் இருக்க நீ அருள வேண்டும். உன்னுடைய அசையா விளக்குப் போல அது இருக்க உன் கருணையை வழங்கு” என்று சொல்லிக் கண்ணீர் வாரக் கீழே விழுந்து வணங்கினார். எழுந்து நின்று கண்ணைத் துடைத்துக் கொண்டு பார்த்தார்; அமைதியான உள்ளத்தோடு பார்த்தார். எப்போதும் போல அசல தீபேசுவரருடைய விளக்கு அசையா விளக்காகவே இருந்தது.

உள்ளே போனார். வாயார அர்ச்சனையைச் சொல்லி மலர் தூவினார். ஏதோ புதுப் பிறவி எடுத்தவர் போல் ஆகிவிட்டார். புறத்தே என்ன புயல் அடித்தாலும் அசையா விளக்காக அவர் மனம் ஆகிவிட்டது.

காலை ஐந்தரை மணி. வழக்கமாக விடியற்காலையில் வருகிறவர்கள் தரிசனத்துக்கு வந்து போய்க் கொண்டிருந் தார்கள். அபூர்வமாக இன்று தாசி மாணிக்கம் வந்தாள்; சிங்காரியும் வந்தாள். என்ன ஆச்சரியம்! குருக்கள் அவளைப் பார்த்தார்; ஆனால் மனத்தில் சலனம் உண்டாக வில்லை.

"இவளை உடனே அனுப்பும்படி ஆள் வந்திருக்கிறது. பத்து மணிக்குப் புறப்படப் போகிறாள். அதற்குள் சுவாமி தரிசனம் செய்துகொண்டு உங்கள் ஆசீர்வாதமும் பெற்றுக்கொண்டு போகலாமென்று வந்தோம்."

"அசையாத விளக்கு என் கண்முன்னே நிற்கிறது. இதை மறக்க மாட்டேன்" என்று சிங்காரி பேசினாள்.

"தங்கச்சி, நீ சங்கீதத்தில் இன்னும் பயிற்சி பெற்று ஆண்டவன் புகழைப் பாடும் தொண்டில் ஈடுபட்டால் உனக்குப் புகழும் மதிப்பும் உண்டாகும்" என்று நேரே அந்தச் சிங்காரியைப் பார்த்து ஆசீர்வாதம் செய்து கொண்டே அவர் திருநீற்றை வழங்கினார். வழங்கித் திரும்பிப் பார்த்தார். ஆம்! இப்போது அவர் மனம் நடுங்கவில்லை. அந்த அசையா விளக்குப் போலவே அவர் உள்ளம் ஒளியையும் சலனமற்ற திண்மையையும் பெற்று விட்டது.

# நேர்மை

"கிழவி, காலணா கொத்துமல்லி, காலணா கறிவேப் பிலை" என்று குழந்தை அரையணாவை நீட்டினான்.

கிழவி அவனைக் கண்டவுடன், "வாடா, கண்ணு" என்று சொல்லிக்கொண்டே அந்த அரையணாவை வாங்கிக் கண்ணில் ஒற்றிக்கொண்டாள். "நீயே ஒரு கற்றை கொத்துமல்லி எடுத்துக்கொள், கண்ணு" என்று சொல்லிக் கறிவேப்பிலையை மாத்திரம் ஒரு கொத்து எடுத்துக் கொடுத்தாள். குழந்தை முருகன் தன் இடக் கையால் கீழே சாக்கின்மேல் பரப்பி வைத்திருந்த கொத்துமல்லிக் கட்டில் ஒன்றை எடுத்துக்கொண்டு போய்விட்டான்.

காய்கறி விற்கும் மார்க்கட்டில் அந்தக் கிழவி கடை போட்டிருந்தாள். வாழைக்காய், வெண்டைக்காய், கத்தரிக்காய், தக்காளிப்பழம் எல்லாவற்றையும் விற்று வந்தாள். வீசை வீசையாகக் காய்கறி வாங்க அவளிடம் பல தாய்மார்கள் வருவார்கள், ஆடவர்கள் வருவார்கள். எல்லோருக்கும் ஒரே விலை. நேர்மையாக நிறுத்துப் போடு வாள். மற்ற இடங்களில் பேரம் பேசுவதைவிட அவளிடம் நறுக்கென்று வேண்டியதைச் சொல்லி அவள் சொன்ன காசைக் கொடுத்துவிட்டு, வாங்கிக்கொண்டு போகிறவர்கள் பலர். எதற்கெடுத்தாலும் பேரம் பேசும் சில பெண்மணிகளுக்கு அந்தக் கிழவியைக் கண்டால் பிடிக்காது. "அதென்ன அது? தான் சொன்ன விலையே கொடுக்க வேண்டும் என்று முரட்டுப் பிடிவாதம் பிடிக் கிறாள்! அரசாங்கத்தில்கூட இவ்வளவு கண்டிப்பு இல்லையே" என்று அந்தப் பெண்கள் சொல்லுவார்கள். அவர்களுக்குச் சரக்கின் தராதரமோ, காலத்தின்

அருமையோ தெரிவதில்லை. சொன்ன விலைக்குக் குறைவாகப் பேரம் பேசி வாங்கிச் செல்வதில் ஒரு திருப்தி; ஏதோ பெரிய காரியத்தைச் சாதித்துக் கொண்டது போன்ற எண்ணம்!

முருகன் பக்கத்துத் தெருவில் இருக்கும் குழந்தை; ஆறு வயசு. அவனுடைய அம்மா ஏதாவது பண்டிகையானல் காய்கறி வாங்கத் தானே நேரில் வருவாள். நாள்தோறும் வேண்டியவற்றிற்கு முருகனை அனுப்புவாள். பையையும் பணத்தையும் கொடுத்து வேண்டியதைச் சொல்லி அனுப்பினல் குழந்தை முருகன் நேரே கிழவியிடம் போய் நிற்பான். அவனைக் கண்டாலே அவளுக்கு ஆனந்தம். "வாடா கண்ணு, வாடா ராசா" என்று அருமையாக அழைத்து வேண்டியதைக் கொடுத்தனுப்புவாள். அவள் நேர்மை தவறி நடக்கமாட்டாள் என்று முருகனுடைய அன்னைக்கு நன்ருகத் தெரியும்.

ஒவ்வொரு நாளும் கொத்துமல்லி கறிவேப்பிலைக்கு வந்து நிற்பான் குழந்தை. இரண்டும் காலணுவுக்கு வாங்குவான். சில நாள் தனித்தனியே காலணுவுக்கு வாங்குவதுண்டு. அவனுக்கு இடக் கை வாகு. கிழவி, "நீயே எடுத்துக்கொள்" என்னும்போதெல்லாம் தன் இடக்கையால் வேண்டியதை எடுத்துக் கொள்வான். வேறு ஒருத்தியாக இருந்தால், "என்ன இந்தக் கையிலே எடுக்கிருய்?" என்று கோபித்துக் கொள்வாள். கிழவி அப்படிச் சொல்லமாட்டாள். அந்த இளங் குழந்தையின் குஞ்சுக் கை பட்டால் தனக்கு அதிக வியாபாரம் ஆகும் என்பது அவள் நம்பிக்கை. காக்கை ஏறப் பனம் பழம் விழுந்த கதையாக அப்படியும் சில சமயங்களில் நடந்துவிடவே, அந்த நம்பிக்கை உறுதியாகிவிட்டது.

கிழவிக்கு ஒரு மகன் இருந்தான். அவன் ஏதோ கம்பெனியில் இராக் காவற்காரன். இருபத்தைந்து வயசுள்ள அவனுக்கு ஒரு கல்யாணம் பண்ணி வைத்தாள் கிழவி.

கல்யாணம் ஆன ஆறு மாதம் கழித்து ஒரு நாள் தன் மருமகளைக் கிழவி காய்கறிக் கடைக்கு அழைத்து வந்தாள். பக்கத்தில் இருப்பவர்களுக்குத் தன் மருமகளை அறிமுகப்படுத்தி வைத்தாள். பெண்கள் காய்கறி வாங்கும் போது, "இந்தா, அதில் ஒரு வீசை போடு" என்று ஏவினாள். "இவள் யார்? உன் மகளா?" என்று அந்தப் பெண்மணிகள் கேட்டார்கள். "என் மருமகள்; இவள்தான் எனக்கு மகளுங்கூட" என்றாள். காய்கறி வியாபாரம் மருமகளுக்குச் சுவாரசியமாக இருந்தது. மற்றக் கடைகளையும் கவனித்தாள். அங்கெல்லாம் வாங்குகிறவர்கள் சிறிது நேரம் நின்று பேரம் பேசுவதைக் கண்டாள். தன் மாமியார் வெட்டொன்று துண்டு இரண்டாகப் பேசி வியாபாரம் செய்வதைக் கவனித்தாள். கிழவி செய்வது அவளுக்குப் பிடிக்கவில்லை. பேரம் பேசுபவர்களிடம் விலையைக் கூட்டிச் சொல்லிப் பிறகு குறைத்துக் கொடுப்பதால், தம்முடைய முயற்சி வெற்றிபெற்றதென்ற எண்ணத்தோடு பெண்கள் மற்றக் கடைகளில் வாங்க முந்துகிறார்கள் என்பதை அந்தப் பெண் கண்டுகொண்டாள். அத்தகைய வியாபாரத்தைத் தன் மாமியார் இழந்துவிடுவதாக அவள் எண்ணினாள். பாவம்! அவளுக்கு உண்மை தெரியவில்லை. நாலணாவுக்கும் ஆறணாவுக்கும் வாங்குபவர்களே அவர்களிடம் போய்ப் பிசுகிறார்கள். இங்கேயோ நாலு வீசை அஞ்சு வீசை வாங்குபவர்கள் வந்து விரைவில் வேண்டியவற்றை வாங்கிச் சென்றார்கள். வேலையின்மேல் கவனம் உள்ளவர்கள், சுறுசுறுப்பு உள்ளவர்கள், நேர்மையை விரும்புகிறவர்கள் கிழவியை நாடி வந்தார்கள்.

★

அன்று அவசர அவசரமாக முருகன் வந்து கையில் இருந்த காலணாக் காசைப் போட்டுவிட்டுத் தன் இடக் கையினால் ஒரு கட்டுக் கொத்துமல்லியை எடுத்தான். அப்

போது கிழவி வேறு பக்கம் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் மருமகள் வந்திருந்தாள். அவள் முருகன் கையை ஒரு தட்டுத் தட்டிவிட்டு, "என்ன இது, இடக் கையில் யாரையும் கேட்காமல் எடுக்கிறாயே!" என்று அதட்டி னாள். குழந்தை இதை எதிர்பார்க்கவில்லை. அப்படியே கலங்கி நின்றுவிட்டான். அதற்குள் திரும்பிய கிழவி முருகனைப் பார்த்து, "என்ன கண்ணு?" என்று கேட்டாள். குழந்தைக்குப் பேச வரவில்லை. கண்ணில் நீர் ததும்பியது. "ஆமாம்; கண்ணு! கோட்டான்! திருட்டுப் பயல்! நீ அந்தப்புறம் பார்த்துக் கொண்டிருந்தபோது இவன் இடக் கையால் இதை எடுக்கிறான்" என்றாள்.

கிழவிக்கு உண்மை புலப்பட்டது. "இந்தா, வாயை மூடு! என்ன பேச்சுப் பேசுகிறாய்? என் ராசாவை அப்படி யெல்லாம் சொல்லலாமா? அவன் கை வைத்தால் இன்று நல்ல லாபம் கிடைக்கும். குழந்தையோ தெய்வமோ என் பார்கள். இந்தத் தெய்வத்தின் மகிமை உனக்குத் தெரி யாது. நீ சும்மா இரு" என்று தன் மருமகளை அடக்கி விட்டு அவன் கையில் கொத்துமல்லியைக் கொடுத் தனுப்பினாள்.

அதுமுதல் முருகன் காய்கறி வாங்க வந்தால் கிழவியின் மருமகள் அருகில் இருக்கிறாளா என்று கவனிப்பான். அவள் இருந்தால் மெல்லக் கிழவியிடம் வேண்டியதைச் சொல்லுவான். அவள் இல்லாவிட்டால் வழக்கம்போல உரிமையோடு தானே எடுத்துக்கொள்வான்.

★

அன்று கிழவிக்கு ஏதோ சற்றுத் தலைவலியாக இருந்தது. அவள் மருமகளுக்கு ஒரு வகையாகக் காய்கறி வியாபாரம் அற்றுப்படியாகி யிருந்தது, அவளுக்குத் தெரி யும். ஆகவே அன்று அவளைத் தனியாக அனுப்பிப் பார்க் கலாம் என்று தீர்மானித்தாள் கிழவி.

மருமகளின் பெயர் கல்யாணி; அவள் அன்று தனியே போய் வியாபாரம் செய்தாள். காய்கறியின் விலையை விசாரிப்பவர்களைவிடக் கிழவி வரவில்லையா என்று விசாரிப்பவர்களே அதிகமாக இருந்தார்கள்.

சுதந்தரமாக வியாபாரம் செய்ய வகை உண்டானவுடன், அந்தப் பெண்ணுக்கு ஒரு பைத்தியக்கார யோசனை தோன்றியது. மற்றக் கடைக்காரர்களைப்போலப் பேரத்துக்கு இடம் கொடுக்க வேண்டும் என்று எண்ணினாள். சில காய்களுக்கு விலையைக் கூட்டிச் சொன்னாள். ஆனால் வந்தவர்கள் பேரம் பேசாமல் அவள் சொன்ன விலையையே கொடுத்து வாங்கினார்கள்; இதைக் கண்டு அவள் தன் சாமர்த்தியத்தால் அதிக லாபம் சம்பாதிப்பதாக எண்ணி மகிழ்ச்சியுற்றாள்.

அன்று மற்றொரு காரியமும் செய்தாள். முருகன் அன்று நாலணாவுக்கு வாழைக்காய் வேண்டுமென்று கேட்டான். காய் மலிவாக இருந்த காலம். ஆறு காய் கொடுத்து வந்தார்கள், நாலணாவுக்கு. முருகன் வந்து நாலணாவை நீட்டியவுடன், அவளுக்கு ஓர் எண்ணம் உண்டாயிற்று. 'ஒரு காய் குறைத்துக் கொடுத்தால் இந்தக் குழந்தைக்கு என்ன தெரியப் போகிறது? வீட்டில் உள்ளவர்கள் ஒன்றும் விசாரிக்கப்போவதில்லை. நமக்குக் கூடுதலான லாபம்' என்று கருதினாள். முருகனிடம் நாலணாவை வாங்கிக்கொண்டு ஐந்து காய்களைக் கொடுத்தனுப்பினாள். அவள் எதிர்பார்த்தது போலவே வீட்டுக்காரர்கள் ஒன்றும் கவனித்ததாகத் தெரியவில்லை.

இதனால் லாபத்தோடு மற்றொரு திருப்தியும் அந்தப் பேதைப் பெண்ணின் மனத்தில் உண்டாயிற்று. ஒருநாள் அந்தக் குழந்தைக்காகப் பரிந்து கொண்டு நாலுபேர் முன்னிலையில் கிழவி கல்யாணியைக் கடிந்துகொண்டாள் அல்லவா? அன்றுமுதல் முருகனைக் கண்டால் அவளுக்குப் பிடிப்பதே இல்லை. அவனுக்கு இப்போது குறைத்துக்

கொடுப்பதால், தான் பட்ட அவமானத்துக்கு ஈடு செய்வது போன்ற உணர்ச்சி அவளிடம் எழுந்தது. தான் வியாபாரம் செய்யும்போது அவன் வந்தால் சிறிது நேரம் கழித்தே கொடுப்பது, எல்லோருக்கும் கொடுப்பதில் ஒரு காயாவது குறைவாகக் கொடுப்பது, இப்படியாக அவள் தன் அவமானத்துக்குக் கழிவு தேடிக்கொண்டாள்!

அன்று வியாழக்கிழமை. மறுநாள் ஏதோ பண்டிகையாதலால் வியாபாரம் சுறுசுறுப்பாக நடைபெற்றது. குழந்தை முருகனும் அன்று வந்தான். அவன் தாய் வந்திருக்கலாம்; ஏதோ அதிக வேலை; அவனை அனுப்பினாள். வாங்க வேண்டிய காய்கறிக்கு வள்ளிசாக ஒரு ரூபாய் கையில் கொடுத்து, "நாலணு அவரைக்காய், நாலணு தக்காளிப்பழம், நாலணு வாழைக்காய், நாலணு சேனைக் கிழங்கு" என்று சொல்லி அனுப்பினாள்.

"பாக்கிக் காசு?" என்று கேட்டான் குழந்தை.

"பாக்கிக் காசு இருக்காது, காய்களை மாத்திரம் வாங்கிக்கொண்டு வா. இந்தா, இந்தப் பையில் போட்டுக் கொண்டு கீழே போடாமல் கொண்டுவா" என்று சாக்கிரதைப்படுத்தி அனுப்பினாள்.

கூட்டம் நெரிந்தது. அவன் சிறிது நேரம் காத்திருந்து ரூபாயைக் கொடுத்துக் காய்கறிகளைக் கேட்டான். இன்னும் நாலைந்து பேர் நின்று கொண்டிருந்தார்கள். ஒரு முழு ரூபாயைக் கண்டவுடன் முருகனுக்கு வேண்டிய காயை கல்யாணி நிறுத்துக் கொண்டிருந்தாள். அதற்குள் சிலர் அவசரப் பட்டார்கள். காய்களை எல்லாம் கொடுத்து, அவசரத்தில் கணக்குத் தெரியாமல் நாலணு நாணயம் ஒன்றையும் முருகன் கையில் கொடுத்துவிட்டு வேறு வியாபாரத்தைக் கவனித்தாள். குழந்தை முருகன் காய்களை எல்லாம் பையில் போட்டுக்கொண்டான். நாலணுவைச் சட்டைப் பையில் போடப்போனான். 'அம்மா பாக்கி ஒன்றும் இல்லை என்று சொன்னாளே?' என்ற எண்ணம்

வந்தது. சிறிது தூரம் நடந்தான். நாலணுவைக் கையிலே எடுத்துக்கொண்டான்; நின்முன். யோசனை செய்தான். தான் பாக்கியுண்டா என்று கேட்டபோது ஒன்றும் இல்லை என்று அம்மா சொன்னது அவனுக்கு நன்முக நினைவுக்கு வந்தது. 'பின்னே, எப்படி இந்தக் காசு மிஞ்சியது? இதை யாரிடம் கேட்பது?' அவனுக்கு இன்னும் ரூபாய் அணு பைசாக் கணக்கு நடக்கவில்லை. தயங்கித் தயங்கி நின்முன். மறுபடியும் காய்கறிக் கடைக்கு வந்தான். அங்கே கூட்டம் குறையவேயில்லை. அவன் அங்கே நின்று, "இங்கே பார்" என்று அவள் கவனத்தைத் திருப்ப முயன் முன். அவளோ தன் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தாள்.

சிறிது நேரம் அந்தக் குழந்தை அப்படியே நின்முன். அவனுக்கு எதையோ திருடிவிட்டது போன்ற உணர்ச்சி தலைப்பட்டது. "அம்மா வந்து இது வேண்டாம் என்று சொன்னுள்" என்று மெல்லக் கூறினுன். பாக்கி வேண் டாம் என்று சொன்னதை நினைத்தே அப்படிச் சொன்னுன். கல்யாணியோ வாங்கினதை வேண்டாம் என்று குழந்தை சொல்வதாக எண்ணிக் கொண்டாள். "திருப்பி வாங்கிக் கொள்ளமாட்டேன். போ; இனிமேல் உனக்குக் காய்கறியே கொடுப்பதில்லை" என்று கோபத்தோடு இரைந்தாள்.

குழந்தை அதைக் கேட்டு நடுங்கினுன். அவன் கண் களில் நீர் வந்துவிட்டது. "இல்லை; இந்தக் காசு..." என்று இழுத்தான்.

"அது செல்லாதா? அப்போதே பார்த்து வாங்கிக் கொள்வதற்கு என்ன? இப்போது தரமாட்டேன்" என்று புரிந்து கொள்ளாமல் கத்தினுள்.

அருகில் இருந்த ஒருவர் முருகனிடம் இரக்கம் கொண்டு, "என்ன குழந்தை, சொல்கிறுய்?" என்று கேட்டார்.

"வந்து, வந்து...அம்மா பாக்கிக் காசு இருக்காது, வேண்டாம் என்று சொன்னுள். இவள் இந்தக் காசைக்

கொடுத்தாள். இது வேண்டாம் என்று கொடுக்க வந்தேன்" என்று தயங்கித் தயங்கி முருகன் விடை கூறினான்.

"இதோ பார் அம்மா, காசு செல்லவில்லை என்று சொல்ல வில்லை. ஏதோ கணக்குப் பிசகாய் இருக்கும் போலிருக்கிறது, பார்" என்றார் அவர். அவர் அடிக்கடி காய் வாங்குகிறவர் ஆகையால் அவரைக் கோபிக்கலாமா? "என்ன கணக்கு?" என்று கோபக் குரலைச் சிறிதே அடக்கிக் கொண்டு அவள் கேட்டாள்.

குழந்தை தான் வாங்கினவற்றையும், ஒரு ரூபாய் கொடுத்ததையும் சொன்னான். தன் கையிலுள்ள நாலணா நாணயத்தைக் காட்டி, "இது வேண்டாம்" என்றான்.

தவறிப்போய் நாலணா பாக்கி என்று எண்ணிக் கல்யாணி கொடுத்து ஏமாந்துபோனது அவருக்கும் தெரிந்தது; அவளுக்கும் தெரிந்தது.

"அட! என்ன உத்தமமான பிள்ளை!" என்று வியந்து கொண்டார் அவர். அவளுக்கோ ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை. தான் கோபித்துக் கொண்டதற்கு வெட்கினாள்.

அவள் உள்ளத்தே தன் மாமியார் முருகனைப்பற்றிச் சொன்னது நினைவுக்கு வந்தது. அந்தக் குழந்தையைக் கல்யாணி சிலகாலமாக ஏமாற்றிக்கொண்டு வருகிறாள். காயைக் குறைத்துக் கொடுக்கிறாள். அந்தக் குழந்தை பேசாமல் வாங்கிக்கொண்டு போகிறான். இன்று அவள் ஏமாந்தாள். அவள் கொடுத்த நாலணாவை அவன் வீட்டுக்குக் கொண்டுபோயிருக்கலாம். அதனால் அவளுக்குப் பெரிய நஷ்டம் ஒன்றும் வரப்போவதில்லை. ஆனால் அந்தக் குழந்தை எதையோ தவறாகச் செய்துவிட்டதுபோல வாடித் தயங்கி நின்றானே!

அவள் சிந்தனை இன்னும் என்ன என்னவோ எண்ணியது. "என் ராசா! அந்த நாலணாவைக் கொடு"

என்று சொல்லி அதை வாங்கித் தன் கண்ணில் ஒற்றிக் கொண்டாள். "இந்தா, இதைக் கொண்டுபோய் உங்கள் அம்மாவிடம் கொடு" என்று நாலு தக்காளிப் பழத்தை அவன் பையில் போட்டு அனுப்பினாள்.

அன்று கல்யாணிக்கு மனசு சரியாகவே இல்லை. வீட்டுக்குப் போனவுடன் நேரே தன் மாமியாரிடம் போனாள். எதையோ சொல்ல வந்தவள் சொல்ல முடியாமல் அழுதாள். "நான் பாவி!" என்று விம்மினாள். கிழவிக்கு ஒன்றும் விளங்கவில்லை. நடந்ததைச் சொன்னாள் மருமகள். "இனிமேல் அந்தக் குழந்தை வந்தால் நான் இதுவரையில் வஞ்சித்ததற்கு அபராதம் செலுத்தப் போகிறேன். ஒரு காய் கூடவே கொடுக்கப் போகிறேன்" என்று சொன்னாள்.

"அப்படிச் செய்வது நல்லதுதான். அதுதான் நேர்மை" என்று அந்தக் கிழவியும் ஆமோதித்தாள்.

# வைதாரையும்...

## 1

தான் நட்டு வளர்த்த வாழை மரத்தின் அடியில் குந்தியபடியே அவன் குருட்டு யோசனை பண்ணிக்கொண்டிருந்தான். வாழை மரம் தளதளவென்று வளர்ந்திருந்தது. இப்போதுதான் சிறு கன்றை நட்டதுபோல் இருக்கிறது; இந்தச் சில மாதங்களில் அது எவ்வளவு நன்றாக வளர்ந்து விட்டது! நீண்டு அகன்ற இலைகள்; பளபளவென்ற அடி மரம்; அழகான குருத்து. இன்னும் இரண்டு மூன்று மாதங்களில் அது கண்ணாடி இலையை விடும்; பிறகு பூ மலரும்; பிறகு வாழைக்குலை தோன்றும். மண்ணில் நட்டுத் தண்ணீர் விட்டுக் கொஞ்சம் குப்பையைப் போட்டது தான்; வாழை வளமாக வளர்ந்து நிற்கிறது! அவன் அதிக மாகக் கைவருந்தி உழைக்கவில்லை. ஆனாலும் மண்ணின் உரம் அதற்கு வளப்பத்தைத் தந்தது. காற்றும் வெயிலும் அதற்கு எழிலை ஊட்டின. அவ்வப்போது பெய்த மழை அதற்கு மெருகு ஏற்றியது.

அவன் கண்ணும் கருத்தும் வாழை மரத்தின் எழிலிலே ஈடுபட்டிருந்தன. அப்போதுதான் வீட்டுக் குள்ளே அந்தக் குரல் கேட்டது. "உனக்குக் கண் இல்லையா? பார்த்து நடக்கக் கூடாது?" என்று வீட்டுக்கார அம்மாள் இரைந்தது கேட்டது.

அவன் அதைக் கேட்டவுடன் திடுக்கிட்டான்; அவன் உடல் குலுங்கிற்று. மெல்ல ஜன்னலுக்கு அருகில் சென்று எட்டிப் பார்த்தான். தேய்த்துக் கொள்ள இருந்த எண்ணெயை வீட்டுப் பெண் கொட்டிவிட்டாள்.

காலை நேரம் அது. எட்டு மணி இருக்கலாம். வாசலில், "அம்மா பிச்சை!" என்று இரண்டு குரல்கள் கேட்டன. ஒன்று முதிர்ந்த தொண்டையிலிருந்து வந்த கரகரப்பான குரல்; மற்றொன்று இளந்தொண்டையிலிருந்து வந்த கீச்சுக் குரல். அவன் வாசல் பக்கம் போய்ப் பார்த்தான். வாசல் 'கேட்டு'க்கு வெளியே அந்த இரண்டு பெண்களும் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களைக் கண்டவுடன் அவனுக்குத் தூக்கிப் போட்டது. அவர்களில் கிழவி கண் இல்லாதவள். அவளுடன் வந்த சிறுமிக்குப் பதின் மூன்று வயசு இருக்கும்.

"நீ யார்? புதிய பிச்சைக்காரியாக இருக்கிறாயே!" என்று கேட்டான் கந்தன்.

"ஆமாம், இந்தப் பக்கம் புதிய வீடுகள் கட்டியிருக் கிறார்கள் என்று இப்போதுதான் தெரிந்தது. இன்றைக் குத்தான் முதல் முதலாக வருகிறேன்" என்று கிழவி விடை அளித்தாள்.

"நீ ஏன் பிச்சை எடுக்கிறாய்?" என்று கேட்ட கந்தன் பின்பு நாக்கைக் கடித்துக் கொண்டான். ஏன் கேட்டோம் என்று ஆகிவிட்டது.

"பின்னே என்ன செய்கிறது ஐயா?"

கிழவியின் கேள்விக்கு அவனால் விடை ஒன்றும் சொல்ல இயலவில்லை. அந்தக் கேள்வியை அவன் கவனித்த தாகவே தெரியவில்லை. அவர்கள் இருவரையும் அவன் கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டு நின்றான்.

அரிசி கொண்டு வந்து போட்ட வீட்டுக்கார அம் மாள், "என்ன கந்தா, உனக்கு இந்தப் பிச்சைக்காரப் பிணங்களோடு என்ன பேச்சு?" என்று சொல்லி உள்ளே போய்விட்டாள். அரிசியை வாங்கிக் கொண்ட அவ்விரு வரும் அடுத்த வீட்டுக்கு நடந்தனர். கந்தன், 'பிச்சைக் காரப் பிணங்கள்' என்ற விமரிசனத்தை எண்ணி எண் ணிப் பெருமூச்சு விட்டான்.

அடுத்த நாள் கந்தன் அவர்களை எதிர்பார்த்தான். ஆவலோடு எதிர்பார்த்தான் என்றே சொல்லவேண்டும்; அன்று அவர்கள் வரவில்லை. மறுநாளும் எதிர்பார்த்தான்; வரவில்லை. மூன்ருவது நாளும் போயிற்று. நான்கு, ஐந்து, ஆறு நாட்கள் கடந்தன. அவன் அநேகமாக அவர்களை மறந்து போயிருப்பான். சரியாக எட்டாவது நாள், அதே திங்கட்கிழமை அவர்கள் வந்தார்கள். அவர்கள் வருவதைக் கந்தன் கண்டான். வாசலுக்கு வந்து பார்த்தான்.

வரும்போதே, "அந்த வீடு எங்கே?" என்று கிழவி கேட்கச் சிறுமி, "இதோ அடுத்த வீடுதான்" என்று கூறியது அவன் காதில் விழுந்தது. அவனுக்கு என்னவோ புரியாத கிளுகிளுப்பு உண்டாயிற்று. ஆனால் இது என்ன? அவர்கள் அந்த வீட்டில் நிற்கவில்லை. அடுத்த வீட்டுக்குப் போய் நின்ருர்கள்.

ஏன்? அவனுக்குக் காரணம் தெரியவில்லை. 'ஒரு கால்—' அவன் சிந்தனையில் ஆழ்ந்தான். அவர்களின், "அம்மா, பிச்சை" என்ற இரட்டைக் குரல் கேட்ட பிறகே தெளிந்து தான் இருந்த வீட்டின் ஓரமாக வந்து அடுத்த வீட்டில் நின்ற அவர்களை, "என்ன, சௌக்கியமா?" என்று கேட்டான்.

"யார் அது?" என்று கிழவி சிறுமியைக் கேட்டாள்.

"அந்த வீட்டுக்கார......" மேலே அவளுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. கந்தன், "தோட்டக்காரன்" என்று அந்த வாக்கியத்தை முடித்தான்.

"ஓ! இவர்தாம் ஏன் பிச்சை எடுக்க வேண்டுமென்று கேட்டவரோ?" கிழவிதான் கேட்டாள்.

அட! கிழவிக்கு இவ்வளவு நினைவு இருக்கிறதா? அப்படிக் கேட்டது அவளை உறுத்தி விட்டதோ? அதனால் தான் அவள் பிச்சை கேட்க அந்த வீட்டுக்கு வரவில்லையோ? அல்லது—

அது முதல் ஒவ்வொரு திங்கட்கிழமையும் அந்தத் தெருவுக்கு வந்தார்கள். முன் வீட்டுக்குப் போனார்கள்; அடுத்த வீட்டுக்குப் போனார்கள். அந்த வீட்டுக்கு மட்டும் வருவதில்லை. இது கந்தனுக்கு விளங்காத புதிராக இருந்தது. அதற்குக் காரணத்தைத் தெரிந்து கொள்ளா விட்டால் அவனுக்குத் தூக்கமே வராது போலாகி விட்டது.

ஒரு நாள் அவன் துணிந்து ஒரு காரியம் செய்தான். அந்தத் தெருவின் கடைசி வீட்டில் அவர்கள் பிச்சை வாங்கிக் கொண்டு வேறு இடத்துக்குப் போகும்போது அவர்களைச் சந்தித்து, "ஏன் நீங்கள் எங்கள் வீட்டுக்கு வருவதில்லை?" என்று கேட்டான்.

"யார் அது?"—கிழவியின் கேள்வி.

"அதுதான் அந்தப் பிண வீடு!"—சிறுமியின் விடை.

கந்தனுக்குக் கோபம் வந்தது. "என்ன அப்படிச் சொல்கிறாய்?" என்று அதட்டிக் கேட்டான்.

"ஏன் தம்பி, நீ கோபித்துக் கொள்கிறாய்? இவள் சொல்லத் தெரியாமல் சொல்கிறாள். முதல் முதலாக அங்கே வந்தபோது, பிச்சைக்காரப் பிணங்கள் என்று அந்த அம்மாள் வாழ்த்தினாளே, அதனால் அங்கே வருகிறதில்லை."

"என் மேலே ஒன்றும் கோபம் இல்லையே!"

"உன் மேலே கோபப்பட என்ன இருக்கிறது? கோபம் கொள்ளும்படி எங்களுக்கு என்ன பதவி வந்து விட்டது?"

அது பிச்சைக்காரி பேச்சாக இல்லை; மானம் மரியாதை தெரிந்தவர் பேச்சாக இருந்தது.

"அன்றைக்கு அம்மாவுக்கு யார் மேலேயோ கோபம். அதனால் அப்படிப் பேசினார்கள். அவர்கள் மிகவும் நல்லவர்கள். நீங்கள் அந்த வீட்டுக்கு வந்தால் அரிசி போடுவார்கள்."

இந்தச் சமாதான ஏற்பாட்டிலே கந்தன் வெற்றி அடைந்து விட்டான். அடுத்த வாரம் முதல் திங்கட் கிழமை தோறும் அந்தக் கிழவியும் சிறுமியும் அந்த வீட்டுக்குப் பிச்சைக்கு வரலானார்கள்.

## 2

அது பங்களாவும் அல்ல; சிறிய வீடும் அல்ல; சுமாரான வீடு; நாலு புறமும் விசாலமாக இடம் விட்டுக் கட்டிய வீடு. வீட்டின் இருமருங்கும் இருபதடி இடம் விட்டிருந்தார்கள். அங்கேதான் பூச்செடிகளும் வாழை மரங்களும் காய்கறிப் பயிரும் போட்டிருந்தார்கள். கந்தன் அந்த வீடு கட்டிக் குடிபுகுந்த புதிதிலே வந்து ஒட்டிக் கொண்டான். அவனை அவர்களுக்குப் பிடித்துப்போய் விட்டது. இருபது வயசுப் பிள்ளை உடம்பால் உழைத்தால் என்னதான் செய்ய முடியாது? வீட்டுக்கார முதலாளியும் அவர் மனைவியும் அவனிடம் மிகவும் அன்போடு பழகினார்கள்.

அந்தப் பிச்சைக்காரர்கள்: அவள் தாய்; சிறுமி அவள் மகள். தாய்க்குக் கண் இரண்டும் இல்லை. மகளே அவளுக்கு ஊன்றுகோலாக உதவினாள். வாரத்தில் ஒவ்வொரு நாள் ஒவ்வொரு பேட்டை என்று முறை வைத்துக் கொண்டு போனார்கள். திங்கட்கிழமை யன்று கல்யாண நகர் வந்தார்கள்.

கந்தனுக்கு அந்த இரண்டு பேரிடமும் இரக்கம் உண்டாயிற்று; இரக்கம் என்று சொல்வதைவிட அன்பு என்று சொல்வதுதான் பொருத்தம். அதாவது அவர்கள் தன்னை விட இழிந்தவர்கள் என்ற மனோபாவத்தோடு உண்டான உணர்ச்சி அன்று அது.

"ஏன் அம்மா, உன் மகளை ஏதாவது கூலி வேலை செய்து பிழைக்கச் சொல்லக்கூடாதா? இந்தப் பிச்சைத் தொழில் எதற்கு?" என்று கந்தன் கேட்டான்.

"இவளுக்கு என்ன வேலை செய்யத் தெரியும்? இவளை யார் வேலைக்கு வைத்துக் கொள்வார்கள்? அப்படி ஏதாவது செய்தாலும் எங்கள் இரண்டு பேருக்கும் போதுமானபடி கிடைக்க வேண்டுமே! நானோ கண் இல்லாத கபோதி; ஒரு வேலைக்கும் துப்பு இல்லாதவள்."

அவளுக்கு என்ன சமாதானம் சொல்வதென்று அவனுக்குத் தெரியவில்லை ஆனாலும் அவன் மனத்துக்குள், முயன்றால் முடியாதது இல்லை என்ற உறுதி இருந்தது. அவன் உள்ளம் நெகிழ்ந்தது.

அந்த வீட்டு வேலைக்காரிக்குப் பிரசவ காலம். அவள் நாலு மாதம் வரமாட்டேன் என்று சொல்லிவிட்டாள். வேறு வேலைக்காரி தேடவேண்டும் என்று வீட்டுக்கார அம்மாள் சொல்லிக் கொண்டிருந்தாள். "நான் பார்த்து அமர்த்துகிறேன்" என்று முன்வந்தான் கந்தன். அவனுக்குப் பிச்சைக்காரச் சிறுமியை எப்படியாவது முன்னேற்ற வேண்டும் என்ற ஆவல். வீட்டுக்கார அம்மாள் அவளைப் பார்த்தபோது, "இவளா?" என்று ஆச்சரியப்பட்டாள். "நீங்கள் இவளைப் பற்றி ஒன்றும் பயப்பட வேண்டியதில்லை. யோக்கியமாக நடந்து கொள்வாள். எனக்கு இவளை நெடுங்காலமாகத் தெரியும்" என்று அடித்துச் சொன்னான். வள்ளிக்கு - அந்தச் சிறுமிக்கு - அதைக் கேட்டு ஆச்சரியம் தாங்கவில்லை; 'என்ன பொய் கூறுகிறார்!' என்று எண்ணினாள்.

பிச்சைத் தொழிலை விட்டுவிட்டு வள்ளி புது வாழ்வில் புகுந்தாள். பழைய வேலைக்காரி வரவே இல்லை. வீட்டுக்கார அம்மாளிடம் கந்தன் சிபாரிசு செய்து நாள்தோறும் மிஞ்சின சோற்றை வாங்கித் தருவான். கிழவி எங்கோ ஓரிடத்தில் இருந்தாள். அவளுக்குச் சோறு போட்ட பிறகே வள்ளி உண்பாள்.

வள்ளி சிறுமியாக இருந்தவள் இப்போது இளம் பெண் ஆகிவிட்டாள். "இனிமேல் நீ வேலைக்குப் போக

வேண்டாம் என்று அம்மா சொல்லுது'' என்று கந்தனிடம் அவள் மெல்லச் சொன்னாள். அவனுக்குக் காரணம் புரிந்தது. ''உன் அம்மாவை உன்னோடு அழைத்து வா; வீடு திரும்பும்போது அவளோடு போ'' என்று ஒரு தந்திரம் சொல்லித் தந்தான் அவன். அது நல்ல தந்திரமாகவே இருந்தது. கிழவி அவளுக்குப் பாதுகாப்பாக வருவாள். அவள் வேலை செய்யும்போது தோட்டத்தில் குந்தி யிருப்பாள். பிறகு அவளை அழைத்துக் கொண்டு போய்விடுவாள்.

தோட்டத்தில் குந்தியிருப்பவள் சும்மா இருப்பதில்லை; கண் இல்லாவிட்டாலும் தட்டித் தடவி ஏதாவது வேலை செய்வாள். கொத்திய பாத்திகளில் உள்ள கற்களைப் பொறுக்கி எறிவாள். கீரையை ஆய்வாள். நாளடைவில் வீட்டில் கூடத்தில் இருந்தபடியே காய்கறி நறுக்குவாள். புதுப் புளி வந்தால் கொட்டை எடுப்பாள். அந்த இரண்டு பேரும் வீட்டுக்கார அம்மாள் உள்ளத்தில் இடம் பிடித்துக் கொண்டார்கள்.

வள்ளியின் வளர்ச்சியும் வாழையின் வளர்ச்சியும் கந்தன் கண்ணைக் கவர்ந்தன. கிழவி அடிக்கொரு முறை கந்தனைப் புகழ்ந்து பேசுவாள். அவனை ஐயா என்று முதலில் சொல்லி வந்தாள். கந்தன் அப்படிச் சொல்வதை ஏற்கவில்லை. கடைசியில் தம்பி என்ற வழக்கே நிலைத்து விட்டது. ''தம்பி, என்னுடைய வாழ்வு இன்னும் கொஞ்ச காலந்தான். என் பிச்சைப் பாத்திரத்தை உடைத்த உங்களால் இவளுக்கு ஒரு வழி பிறந்தது. ஆனால் இவள் பெண் ஜன்மமாயிற்றே!''

'இவள் என்ன சொல்கிறாள்? ஒருகால்......' அவன் திடுக்கிட்டான். ''என்னை முன்பே உனக்குத் தெரியுமா?'' என்று கேட்டான்.

''எப்படித் தம்பி தெரியும்?'' என்ற கிழவியின் பேச்சைக் கேட்டு நீண்ட பெருமூச்சு விட்டான்.

## 3

அவனை அவர்கள் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. "நாங்கள் இருக்கும் இடம் எப்படித் தெரிந்தது?" என்று வள்ளி கேட்டாள்.

"விசாரித்துக் கொண்டு வந்தேன்" என்றான்.

கிழவி அவன் வருகையைப் புரிந்துகொண்டாள். "வாங்க தம்பி" என்று மரியாதையுடன் வரவேற்றாள்.

"உன்னுடன் இன்று துணிச்சலாக ஒரு சமாசாரம் பேச வந்திருக்கிறேன்" என்றான் கந்தன்.

"என்ன தம்பி அது? இந்தப் பிள்ளை ஏதாவது தவறு செய்துவிட்டதோ?" என்று அச்சத்துடன் கேட்டாள் கிழவி.

"ஆமாம்; பெரிய தவறு செய்துவிட்டாள்" என்றான்; அவன் அதைக் கூறிப் புன்னகை பூத்ததைப் பார்க்க அவளுக்குக் கண் இல்லை. வள்ளிக்கு இருந்தது.

"என்ன தம்பி, பெரிய பாறாங்கல்லைத் தூக்கிப் போடுகிறீர்களே! நீங்கள் வைத்த மரம். நீங்களாக வெட்டி எறிந்தாலும் கேட்பார் இல்லை. ஆனாலும் தான் வளர்த்தது நச்சு மரம் ஆனாலும் அதை அழிக்கமாட்டார்கள்."

"நீ ஒன்றும் பயப்பட வேண்டாம். இவள் என் மனசைத் திருடிக்கொண்டு விட்டாள்."

வள்ளி விழித்தாள். கிழவி யோசனையில் ஆழ்ந்தாள். கந்தன் முறுவல் பூத்தான். "இவள் பெண் ஜன்மம் என்று அன்று நினைப்பூட்டினாயே, நினைவு இருக்கிறதா? இவளுக்கு ஒரு வழி வேண்டுமென்று சொன்னாயே, அந்த வழியை நானே காட்ட வந்திருக்கிறேன்."

"என்ன தம்பி சொல்கிறீர்கள்? நாங்கள் பிச்சைக்காரர்களாகத் திரிந்தவர்கள், உங்களுடைய பெரிய மனசால் வயிறாரச் சோறு குடிக்கிறோம். இதுவே போதும். இதற்கு மேல் ஆசைப்படுவது அநியாயம்."

"நான் ஆசைப்படுவது அநியாயம் என்று சொல்கிறாயா?"

"இல்லை தம்பி; நீங்கள் பூடகமாகச் சொல்வது எனக்குப் புரிந்தும் புரியாமலும் இருக்கிறது. என்ன பேசுவதென்றே தெரியவில்லை."

"இனித் தெளிவாகவே சொல்லி விடுகிறேன். நான் இவளைக் கட்டிக்கொள்ளத் தீர்மானித்து விட்டேன்."

"ஆ!" கிழவி சிறிது நேரம் மூர்ச்சை போட்டவளைப் போலானாள். வள்ளிக்கு ஏதோ கண்ணில் ஊற்றுப் புறப்பட்டது. அவனால்கூட அப்போது பேசமுடியவில்லை.

கிழவி இரண்டு முறை எச்சிலை விழுங்கிக் கொண்டாள். வார்த்தை வெளிப்பட மறுத்தது. தொண்டை அடைத்தது. "எங்கள் குடியைக் காக்க வந்த தெய்வமே! எஙகளை அபசாரத்துக்கு ஆளாக்கக் கூடாது" என்று கதறினாள்.

"இது ஒன்றும் ஆச்சரியமான காரியம் அன்று. நானும் உங்களைப் போலப் பிச்சைக்காரனாக இருந்தவனே. நான் உங்களுக்குத் தெய்வம் அல்ல. நீ தான் எனக்கு உபதேசம் செய்த குரு. என் வாழ்க்கையை மாற்றிய உபகாரி. பிச்சைத் தொழிலையும் சோம்பேறி வாழ்க்கையையும் போக்கிய உத்தமி!" அவன் உணர்ச்சி வசப்பட்டுப் பேசினான். வள்ளிக்கு ஒன்றுமே விளங்கவில்லை. கிழவியோ தடுமாறினாள்.

"என்ன தம்பி பேசுகிறீர்கள்?" என்று தழுதழுத்த குரலிலே கேட்டாள்.

"என்னை இனி நீங்கள் என்று சொல்ல வேண்டாம். தாயன்போடு நீ என்று சொல். என்னை வாழ்விக்க வந்த தெய்வம் நீ! இதோ உன்னை வணங்குகிறேன். உன் பெண்ணைத் தா என்று கேட்கிறேன்."

என்ன அது! அவன் கிழவியின் காலில் நெடுஞ்சாண் கிடையாக விழுந்தான். வள்ளி சட்டென்று அவனை எடுக்

கப் போனுள். அதற்குள் கிழவியே அவனை மெல்லத் தடவி எடுத்தாள்.

"இதெல்லாம் என்ன தம்பி? தலைகீழ்ப் பாடமாக இருக்கிறதே! நான் சொல்ல வேண்டியதை யெல்லாம் நீங்கள் சொல்லுகிறீர்களே!"

"ஐயோ! அந்த நீங்களை விட்டொழியுங்கள் அம்மா! என்னை நீ என்று சொல்லுங்கள். என் அன்னையையே மீண்டும் காண்பது போன்ற இன்பத்தைப் பெறுவேன்."

"நாங்கள் உனக்கு என்ன நன்மை செய்தோம்? இப்படி யெல்லாம் பேசுகிறுயே, தம்பி?"

"அப்படிக் கேளுங்கள் சொல்கிறேன். கொஞ்சம் நிதானமாகக் கேளுங்கள்."

## 4

மார்கழி மாதம்; மயிலை பக்தஜன சபையில் தனுர் மாத பஜனையைத் தவருமல் ஒவ்வொரு நாளும் நடத்தினுர்கள். மயிலாப்பூர் மாட வீதிகள் நாலையும் சுற்றி வந்தார்கள். மார்கழி முடிந்து தை மாத ஆரம்பத்தில் ராதா கல்யாணம் நடத்தினுர்கள். கிரமப்படி பாகவதர்களை அழைத்துப் பஜனை செய்து பத்ததி தவருமல் ராதா கல்யாணம் நடத்தினுர்கள். அந்தச் சபையினர் எந்த நிகழ்ச்சி நடத்தினுலும் ஏழைகளுக்கு உணவளிப்பதை இன்றியமையாத காரியமாகக் கொண்டிருந்தார்கள். அதன்படி ராதா கல்யாணத்தன்று இரண்டாயிரம் ஏழைகளுக்கு உணவு வழங்கினுர்கள். சாம்பார் சாதம், தயிருஞ்சாதம் இரண்டையும் விநியோகித்தார்கள். மயிலை பக்தஜன சபையில் ராதா கல்யாணம் என்ருல், சென்னையிலுள்ள பாகவதர்களுக்குத் தெரியுமோ, தெரியாதோ, ஏழைகளுக்குத் தெரிந்துவிடும். பிச்சைக்காரர்களும், ரிக்ஷாக்காரர்களும், கூலி வேலை செய்பவர்களுமாக வந்து கூடிவிடுவார்கள்.

வரிசையாக உட்காரச் சொல்லி இலை போட்டுச் சோற்றை வைப்பார்கள். எத்தனை சொன்னாலும் ஏழைகள் ஒழுங்காக இருந்து சாப்பிடுவதில்லை. ஒரே கூச்சல். சாதத்தை மூட்டை கட்டுவார்கள். பாத்திரத்திலே போட்டுக் கொண்டுபோய் வைத்துவிட்டு மறுபடியும் வருவார்கள். உணவு வழங்க ஆரம்பித்தால் கணக்காக இத்தனை பேர் வருவார்கள் என்று திட்டம் சொல்ல முடியுமா? எல்லாம் போட்டுப் பாத்திரம் காலியான பிறகு கூடப் பத்து இருபது பேர் வருவார்கள். "சாமி, சாமி!" என்று கத்துவார்கள்.

இத்தகைய நாள் ஒன்றில் வள்ளியும் அவள் தாயும் வந்து சேர்ந்தார்கள். கிழவி கையில் ஒரு வாணாய் இருந்தது. இலையிலே வைத்துச் சாப்பிட்டால் கண் இல்லாதவள் வேகமாகச் சாப்பிட முடியாது. அதில் சோற்றை வாங்கிக் கொள்ளலாமென்று எடுத்து வந்திருந்தார்கள். உணவு வழங்கும்போது இருவரும் தின்னும் வரைக்கும் தின்றார்கள். கையில் இருந்த வாணாயில் குழம்புஞ் சாதத்தை வாங்கிக்கொண்டு போனார்கள். உணவு வழங்குவது முடிந்துவிட்டது.

ஆனாலும் சில பேர்கள் அந்த இடத்தை நோக்கி வேகமாக ஓடி வந்தார்கள். அப்படி வரும்போது ஒருவன் அந்தக் கிழவியின் மீது மோதிக் கொண்டான். அவள் கையில் இருந்த வாணாய் வேகமாகத் தூரப் போய் விழுந்து உடைந்தது. அங்கே இருந்த நாய் அதில் வாய் வைத்து உண்ணத் தொடங்கியது.

வாணாய் சிதறின அந்தக் கணத்தில் சிறுமி வள்ளி, "அட பாவி!" என்று கதறினாள். "அட, உனக்குக் கூடவா கண் இல்லை?" என்று கிழவி கூவினாள். தட்டினவன் வலுவுள்ளவனாக இருக்க வேண்டும் என்று ஊகித்துக் கொண்ட அவள், "இந்த உடம்பை வைத்துக்கொண்டு பிச்சைச் சோற்றுக்குப் பேயாய்ப் பறப்பானேன்?" என்று கத்தினாள்.

வாணையைச் சிதறச் செய்த அவன் வேகம் தடைப் பட்டது. வாணாய் விழுந்ததைப் பார்த்தவுடனே நின்றான். மேலே வள்ளி கூறிய வசவு அவன் காதில் விழுந்தது. கிழவியின் கேள்வியையும் நன்றாகக் கேட்டான். அவன் ஓடவில்லை; நடக்கவுமில்லை; நின்றான். ஒரு முறை அந்த இருவரையும் ஏற இறங்கப் பார்த்தான். பேசாமல் வந்த வழியே அடிமேல் அடி வைத்து நோயாளியைப் போல நடந்து ஒரு ரோடு மதகண்டை வந்து அமர்ந்தான். அவன் கண்ணில் என்றும் இல்லாதபடி நீர் துளித்தது.

'ஆம், இந்த உடம்பை வைத்துக்கொண்டு நாம் பிச்சைச் சோற்றுக்குப் பேயாய் அலைகிறது உண்மைதான். அவள் கண் இல்லாதவள்; நான் கண் உள்ளவன். அவள் வலிவில்லாதவள்; நான் பலம் உள்ளவன். ஆனால் அவளி னும் கேடு கெட்டவனாக, அவளுக்குக் கிடைத்தது கூடக் கிடைக்காதவனாகி விட்டேன். அது மட்டுமா? அவள் கைக்கு எட்டியதையும் வாய்க்கு எட்டாதபடி செய்து விட்டேன். நான் பாவி!'—இப்படி நினைத்து ஒரு மண்டு அழுதான். அன்றே அவன் தன் பிச்சை வாழ்க்கைக்கு முடிவு கட்டினான். உழைப்பினால் உயரவேண்டும் என்ற உறுதி பூண்டான்.

★

இந்தக் கதையைக் கூறி, "என் மனத்தை உசுப்பி விட்டு, பிச்சை வாழ்வை உதறித் தள்ளும்படி செய்த உங்களை நான் குருவென்று வணங்குகிறேன்; தெய்வ மென்று வாழ்த்துகிறேன்" என்று முடித்தான் கந்தசாமி.

"அட! பாவி என்று வைதேனே, அவரா நீங்கள்?"

"அன்று எங்கள் வழியை மறித்தவனா நீ?"

இரண்டு கேள்வியும் ஒரே சமயத்தில் எழுந்தன.

# சந்திர மண்டலம்

விமானத்திலிருந்து இறங்கினபோது காலெல்லாம் சில்லென்றிருந்தது. தட்ப வெப்பத்துக்கு ஏற்ற காலுறையை அணிந்துகொண்டிருந்தாலும், அந்தக் குளிர்ச்சியின் தாக்குதலை உணர்ந்தேன். என்னுடன் அமெரிக்கர்களும், ரஷ்யர்களும் இறங்கினார்கள். ஆங்கிலேயர்கள் அதிகம் இல்லை. விமானத்தில் புறப்பட்டபோது, 'ஏறுங்கள்' என்ற ஒலி கேட்டது. அவ்வளவுதான்; 'இறங்குங்கள்' என்ற ஒலி கேட்டதும் இறங்கினோம். இடையில் எத்தனை நாள் பிரயாணம், என்ன என்ன இடங்களைக் கடந்தோம், என்ன காட்சிகள் வந்தன—ஒன்றுமே தெரியாது. விமானத்தில் ஏறியதும் இன்பத் துயில் கண்ணைக் கவ்வியது. வசதியாகப் படுக்கை இருந்தது. படுத்தது தான் தெரியும். நான் மாத்திரமா? எல்லோரும் இப்படித் தான். விமானப்பயணம் பண்ணிய நாட்கள் எல்லாம்-இரண்டு, மூன்று நாட்களாவது ஆகியிருக்குமென்று ஊகிக்கிறேன்-நாங்கள் இன்பத் துயில் மயக்கத்தில் இருந்தோம்.

விமானம் இறங்கும் இடத்தைத் தொட்டதுமே எங்களுக்கு விழிப்பு உண்டாகிவிட்டது. விமானச் சூழ்நிலையை அப்படி வைத்திருந்தார்கள். இப்போது ஒரு புதிய உலகத்துக்கே வந்துவிட்டோம்.

உலகமென்று சொன்னேன்? பூமியைத்தானே உலகம் என்று சொல்வார்கள்? இது பூமி அல்லவே! நான் இப்போது வந்து இறங்கியிருப்பது-அதாவது, பூமியிலிருந்து ஏறி வந்திருப்பது-சந்திர மண்டலம் அல்லவா? இதை உலகம் என்று எப்படிச் சொல்வது?

அது கிடக்கட்டும். சந்திர மண்டலத்தின் அற்புதக் காட்சிகளைக் காணும் ஆவலில் புறப்பட்டவன் நான். இப்போது இங்கே நிற்கிறேன். குளிர் காற்றுச் சில்லென்று வீசியது. அது காற்றுத்தானு? இங்கே அதற்கு என்ன பெயரோ? காற்றிலே ஒலிகூடக் கலந்திருந்தது. அந்தக் காற்றிலே மிதந்து செல்லலாம் என்று தோன்றியது. ஆம்; உடம்பின் கனம் தோன்றவே இல்லை. இதென்ன இது? எல்லோரும் தரையின்மேல் கால் பாவாமல் தாவித் தாவிப் பறக்கிறார்களே! பூலோகத்திலே பறவைகளே இப்படி நடை போடும்.

நேரே எனக்கென்று அமைத்திருந்த மாளிகைக்குப் போனேன். அதை மாளிகை என்று சொல்வது தவறு. அதற்கு மேற்கூரையே இல்லை. வெயில் அடிக்காதோ? பிறகுதான் தெரிந்தது; அங்கே மழையும் இல்லை; வெயிலும் இல்லையாம்! எப்போதுமே இனிய ஒளி படர்ந்தபடியே இருக்கும். காலை இல்லை, நண்பகல் இல்லை, மாலை இல்லை; இரவும் இல்லை.

தூக்கம்? அதுகூட இல்லை. அங்கே தூக்கமே வரவில்லை. உண்மையைச் சொல்லப்போனுல், இமை ஒன்றோடு ஒன்று இணைந்ததாகவே நினைவு இல்லை. 'நெடுந்தூரம் வந்திருக்கிறோமே! நீராட வேண்டாமா?' என்று நினைத்தேன். அந்த மண்டலத்தின் புதுமை பிறகே தெரிய வந்தது. அங்கே யாரும் நீராடுவதில்லை; அதற்கு அவசியமும் இல்லை.

"நீரா? இங்கே அந்தப் பொருள் எதற்கு?" என்று ஒருவர் கேட்டார்.

"குடிப்பதற்காவது வேண்டாமா?" என்றேன்.

"குடிப்பது எதற்காக?" என்று அவர் கேட்டார். அதிகமாகப் பேசினுல், நம்முடைய முட்டாள்தனத்தை வெளிப்படுத்தி விடுவோம் என்று பேசாமல் இருந்து விட்டேன்.

அங்கே பசி இல்லை; தாகம் இல்லை. வெயில் இல்லை; மழை இல்லை. பனி இல்லை; புயல் இல்லை. மூச்சு மட்டும் விட்டார்கள். அங்கே சுவாசிக்கும் காற்றே போதுமான தாக இருந்தது. அதுவே உடம்பை வளரச் செய்தது; உடம்புக்குப் பொலிவை ஊட்டியது.

ஒருவாறு எனக்காகத் தந்த இடத்தில் அமர்ந்தேன். என்னைப் பார்க்க ஒரு பெண்மணி வந்தாள். அவள் நன்றாகத் தமிழில் பேசினாள். அந்த மண்டலத்தில் யார் எந்த மொழி பேசினாலும் தெரிந்து கொள்வார்களாம். தம் எதிரே இருப்பவர்களிடம் அவர்கள் தாய்மொழியிலேயே பேசும் சக்தி வந்துவிடுமாம். அவரை விட்டுப் போனால் அந்த மொழி மறந்து போகும். ஆனால், கருத்து மாத்திரம் நினைவு இருக்கும். இதனால், ஏதோ புதிய மொழி பேசுகிறோமே என்ற நினைப்பே உண்டாவதில்லை

"பொழுது எப்படிப் போகும்?" என்று பெரிய சந்தேகம் தோன்றிவிட்டது எனக்கு.

எனக்குத் துணையாக இருந்த பெண்மணி, "என்ன அப்படிக் கேட்கிறீர்கள்? இங்கே பார்த்து மகிழவும், கேட்டு மகிழவும் எவ்வளவோ இருக்கின்றனவே!" என்றாள்.

அவளைப்பற்றிச் சொல்லவில்லையே! அவள் சந்தன வண்ணம் உள்ளவள்; உடம்பு முழுவதும் தந்தப்பொம்மை போல இருந்தது; சிறிதும் நாணம் இல்லாமல் பழகினாள். அவள் நினைக்கும்போதெல்லாம் ஆடையை மாற்றிக் கொண்டாள்; எங்கும் போய் மாற்றிக் கொள்வதில்லை, சிறிதே பெருமூச்சு விடுகிறாள்; அவ்வளவுதான்; அவள் அலங்காரம் மாறிவிடுகிறது! இந்த வித்தையை அவள் எனக்கும் கற்றுக் கொடுத்தாள்.

"பூமியைப்பற்றி உனக்கு ஏதாவது தெரியுமா? நீ அங்கே வந்திருக்கிறாயா?" என்று அவளைக் கேட்டேன்.

அவள் சிரித்துக்கொண்டாள். "நான் கீழே இறங்காத குலத்தைச் சேர்ந்தவள்" என்றாள்.

"அதென்ன, புதுமையாக இருக்கிறது?"

"நான் இங்கே இருந்தாலும், என்னைச் சேர்ந்தவர்கள் வேறு இடத்தில் இருக்கிறார்கள். இது சந்திர லோகம். இதிலேயே அமுத மண்டலம் என்ற இடம் இருக்கிறது. என்னைச் சேர்ந்தவர்கள் அங்கே இருக்கிறார்கள். பூலோகத்திலிருந்து வந்தவர்கள் இங்கே குடியேறிய பிறகு, அவர்கள் அங்கே போய்விட்டார்கள்."

"நீமட்டும் ஏன் இங்கே இருக்கிறாய்?"

"பூமியிலிருந்து வந்த ஒருவர் கையில் ஒன்றைக் கொண்டுவந்தார். அதைப் பழம் என்று சொன்னார். வாயால் கடிக்கச் சொன்னார். பேசத்தான் வாய் இருக்கிறது. ஆனால் அவர் கடிக்கச் சொன்னார், கடித்தேன். அதன் மணம் என் வாயை விட்டு நீங்கவில்லை. அதனால் நான் இங்கேயே இருக்கிறேன். என்னைப்போல வேறு சிலரும் இருக்கிறார்கள். அந்த மணம் வாயை விட்டுப் போனால், நானும் அமுத மண்டலத்துக்குப் போய் விடுவேன்."

அவள் பேசப் பேச எனக்கு ஆச்சரியமாக இருந்தது. "எனக்கு உதவி செய்யும்படி யார் உனக்குக் கட்டளை இட்டார்கள்?" என்று கேட்டேன்.

"யாரும் கட்டளை இடவில்லை. பூலோகத்திலிருந்து வருபவர்களில் சிலரை எங்களுக்குப் பிடிக்கும். அங்கே இந்தியா என்று ஓரிடம் இருக்கிறதாம். அங்கிருந்து வருகிறவர்களுக்கு நாங்கள் தொண்டு செய்வோம். அவர்கள் நல்லவர்களாம்."

அதைக் கேட்டபோது எனக்குப் பெருமையாகத் தான் இருந்தது.

"உன் பெயர் என்ன?" என்று கேட்டேன்.

"அமுதவல்லி" என்றாள்.

"சரி, எனக்கு இந்த மண்டலத்து அதிசயங்களை யெல்லாம் காட்டவேண்டும்."

"எல்லாம் காட்டுகிறேன். ஆனால் ஓர் எச்சரிக்கை: நான் சில இடங்களில் உங்களுடன் பேசமாட்டேன். அப்போது நீங்கள் என்னை ஒன்றும் வற்புறுத்திக் கேட்காதீர்கள். இந்தியாக்காரர்களுக்கு மாத்திரம் அமுத மண்டலத்தைப் பார்க்கும் பார்வை உண்டாம். ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து பார்த்தால், அந்த மண்டலம் தெரியும். அங்கே போய் உங்களுக்குக் காட்டுகிறேன். உங்களுக்கு அமுத மண்டலம் தெரியுமானால், உங்களை நம்பிச் சில இரகசியங்களைக் கூறுவேன்."

"அப்படியானால் முதலில் அங்கே புறப்படுவோம்" என்று எழுந்தேன்.

"இல்லை, இல்லை; வேறு இடங்களையும் பார்த்துக் கொண்டு, அங்கே போவோம், அவசரப்படாதீர்கள்."

★

அது முதல் அவளுடன் நிழல்போலவே தொடர்ந்தேன். உண்ணவேண்டுமா? உறங்கவேண்டுமா? ஒன்றும் இல்லை. அந்தக் காற்றிலே நடந்தாலே உடம்பில் புதிய ஊக்கம் பிறந்தது. அமுதவல்லி அவ்வப்போது என் கையைப் பற்றிக்கொள்வாள். அப்போது என் உடம்பு முழுவதும் அமுதம் பாய்ந்ததுபோல இருக்கும். ஆனால், துளியாவது தவறான எண்ணம் உண்டாக வேண்டுமே; பேசக்கூடாது!

அங்கே மரங்கள் இருந்தன; ஆனால், எல்லாம் காற்றிலே வளர்ந்தன. ஒளி விடும் மரகதத்தால் இலைகள்; மாணிக்கத்தால் பூக்கள்; பலபல வண்ணக் கனிகள்; தின்பதற்கல்ல; பார்ப்பதற்கு.

அங்கே பூலோக வாசிகளையே பெரும்பாலும் பார்த்தேன்.

"இதோ, இப்போது நாம் போகும் இடம் ரஷ்ய மண்டலம். இங்கே உள்ள மக்கள் எப்போதும் ஏதாவது செய்துகொண்டே இருக்கிறார்கள்."

"அதென்ன? இங்கே ரஷ்ய மண்டலம் ஏது?"

"அவர்களே முதல் முதலில் சந்திர லோகத்துக்கு வந்தார்கள். அவர்கள் ஆக்கிரமித்துக்கொண்ட இடத்துக்குச் சுவரால் எல்லை கோலியிருக்கிறார்கள். நான் அங்கே போகலாம். என்னோடு நான் யாரையும் கூட்டிப் போகலாம்."

"அப்படியானால் அங்கே போக முடியாதவர்களும் இருக்கிறார்களோ?"

"அதை ஏன் கேட்கிறீர்கள்? இந்த ரஷ்ய மண்டலத்தைத் தாண்டினால், அமெரிக்க மண்டலம் இருக்கிறது. அங்கே இருப்பவர்கள் இங்கே வரக்கூடாது; இங்கே இருப்பவர்கள் அங்கே போகக்கூடாது."

"இருவரும் சேருவதே இல்லையா?"

"இரண்டு மண்டலங்களுக்கும் பொதுவாக ஓர் இடம் இருக்கிறது. அங்கே இருசாராரும் கூடுவார்கள், பேசுவார்கள். நீங்கள் விமானத்திலிருந்து இறங்கின இடம் அதுதான்."

ரஷ்ய மண்டலத்துக்குள் புகுந்தோம். எங்களைக் கண்டவுடன் அங்கே இருந்தவர்கள் மரியாதையாக விலகி நின்றார்கள். அமுதவல்லி அவர்களுடன் அவர்கள் மொழியில் பேசினாள். அவள் சொன்னபடி, அங்கே ஒவ்வொருவரும் ஏதாவது வேலை பண்ணிக்கொண்டே இருந்தார்கள். தரை தங்க நிறமாக இருந்தது. அதைக் கட்டி கட்டியாக வெட்டிச் சாக்கில் நிரப்பிக்கொண்டிருந்தார்கள்.

"இது எதற்கு?" என்று கேட்டேன்.

"பூவுலகத்துக்குக் கொண்டுபோக" என்றாள் அமுதவல்லி.

சிலர் தொலைநோக்கிகளை வைத்துக்கொண்டு எங்கேயோ பார்த்தார்கள். அவர்கள் அமுத மண்டலத்தைக் கண்டுபிடிக்க அப்படிப் பார்த்தார்களாம். "சந்திர மண்ட

லத்தைக் கண்டுபிடித்தவர்களுக்கு அமுத மண்டலத்தைக் கண்டுபிடிக்க முடியாதா?'' என்று கேட்டேன்.

அவள் விடை கூறவில்லை. அவள் சொன்ன எச்சரிக்கை எனக்கு அப்போது நினைவுக்கு வந்தது.

★

அடுத்தபடி அமெரிக்க மண்டலம் போனோம். அங்கே பலர் புதிய வீடுகள் கட்டினார்கள். தரையைப் பேர்த்துக் கட்டி கட்டியாக ஒன்றின்மேல் ஒன்றாக வைத்தார்கள். அவை ஒட்டிக்கொண்டன. மற்ற இடங்களில் காணாத கூரையை இங்கே கண்டேன். அடுக்கடுக்காகப் பூவுலகத்து மாளிகையைப்போலக் கட்டியிருந்தார்கள். உள்ளே சோதி மரங்களை நட்டிருந்தார்கள். அதனால் உள்ளே நன்றாக ஒளி பரவியது.

அமெரிக்க ஆண்களும் பெண்களும் மரங்களிலிருந்து பழங்களைப் பறித்து, ஏதோ கருவியில் இட்டுப் பிசைந்து கொண்டிருந்தார்கள்.

''இவர்கள் என்ன செய்கிறார்கள்?''

''இந்தப் பழங்களைப் பூவுலகத்துக்குக் கொண்டு போகப் போகிறார்கள். அங்கிருந்தும் பழங்களைக் கொண்டு வருவார்கள்.''

''இங்கேதான் எதையும் உண்ணுவதில்லையே!''

''பசியைப் பூவுலகத்திலிருந்து கொண்டு வர வேண்டுமென்று எண்ணி, அதற்காக ஆராய்ச்சி செய்கிறார்கள்.''

''இவர்களுக்குப் பசி எதற்கு?''

அமுதவல்லி பேசவில்லை. நானும் மேலே பேசவில்லை.

★

அமெரிக்க மண்டலத்தையும் கடந்துவிட்டோம். வெறும் பொட்டலாக விரிந்து கிடந்த இடத்துக்கு என்னை அழைத்துச் சென்றாள், அந்த அழகி. ''இது இன்னும் யாருக்கும் சொந்தமாகவில்லை. இங்கிருந்தவர்கள் அமுத

மண்டலத்துக்குப் போய்விட்டார்கள். இந்த இடத்தைத் தங்கள் தங்களுக்குச் சொந்தமாக்கிக்கொள்ள வேண்டுமென்று அமெரிக்கர்களும், ரஷ்யர்களும் போட்டி போடுகிறார்கள்."

"இங்கேகூடவா? இங்கே சண்டை உண்டோ?"

"சண்டைக்கு ஆயத்தமெல்லாம் நடக்கிறது......இந்த வம்பெல்லாம் நமக்கு எதற்கு? வாருங்கள், அமுத மண்டலத்தைக் காட்டுகிறேன்."

அவளைத் தொடர்ந்து சென்றேன். மேடான ஓர் இடத்தில் ஏறினேன். பிறகு ஒரு குன்று தோன்றியது; அதில் வழியும் தென்பட்டது.

"இந்தக் குன்றில் ஏறுவீர்களா?" என்று கேட்டாள் அவள்.

"அதுதான் வழி இருக்கிறதே!" என்று சொன்னேனே இல்லையோ, அவள் என் இரண்டு கைகளையும் பற்றிக்கொண்டாள்.

"நீங்கள் நல்லவர்கள். இந்த வழி நல்லவர்களுக்குத் தான் தெரியும். ஆசை யுள்ளவர்களுக்குத் தெரியாது" என்று குதூகலம் பொங்கக் கூவினாள்.

நான் அப்போது அடைந்த இன்பத்தை என்னென்று சொல்வது! என் மயிர்க்கால்தோறும் அமுதம் பாய்ந்ததோ? நான் தேவனாகிவிட்டேனோ? அவள் மெல்ல என்னைத் தழுவினாள். என் கண்கள் இன்பக் கிளர்ச்சியை அடைந்தன. உடம்பு புல்லரித்தது; காமத்தால் அன்று; ஏதோ இன்பக் கிளுகிளுப்பு.

சிறிது தூரம் குன்றின்மேல் ஏறினோம். அங்கிருந்து குன்றின உச்சியைக் காட்டினாள். "அதுதான் அமுத மண்டலம். அங்கேதான் பழைய சந்திர மண்டல வாசிகள் இருக்கிறார்கள். பூவுலகத்தார் இங்கே வந்த பிறகு, அவர்கள் மூச்சுக்காற்றுப் படக்கூடாதென்று இவர்கள் அங்கே போய்விட்டார்கள்."

"பூவுலகத்தார் அங்கே போகமாட்டார்களா?"

"அவர்களுக்கு இந்த வழியே தெரியாது. அமுத மண்டலம் எங்கே தெரியப் போகிறது? பிறர் பொருளை வெளவவேண்டும் என்னும் எண்ணம் உடையவர்களுக்கு அது தெரியாது."

அப்போது குன்றின்மேல் ஒரே தங்க மயமான ஒளி தோன்றியது.

"அதோ பாருங்கள்!" என்று உரக்கச் சொன்னுள் அமுதவல்லி.

ஆ! அந்தக் காட்சியை என்னவென்று சொல்வது! ஒளி மயமான மேனி படைத்த ஆடவரும், மகளிருமாக விமானங்களில் போனார்கள். விமானம் பற்று இல்லாமலே வானவெளியில் நின்றது. அங்கிருந்தபடியே அவர்கள் ஏதோ பேசிக்கொண்டார்கள். அவர்களுடைய மேனி யழகை வருணிக்க வார்த்தை ஏது?

"நாம் அங்கே போக முடியுமா?"

"முடியாது. என் வாய் மணம் மாறினல் நான் போகலாம்."

அப்போதுதான் எனக்கு அவள் சில இரகசியங்களைச் சொல்வதாகச் சொன்னது நினைவுக்கு வந்தது. "ரஷ்ய மண்டலத்தில் தொலை நோக்கியால் பார்த்தார்களே; அப்போது, ஏன் அவர்களுக்கு அமுத மண்டலத்தைப் பிடிக்க முடியவில்லை என்று கேட்டேன். நீ பேசவில்லை. இப்போது அந்தக் கேள்விக்கு விடை சொல்வாயா?" என்றேன்.

"அதுவா? அமுத மண்டலத்தை அமெரிக்கர் கண்டு பிடிப்பதற்கு முன்பு தாம் கண்டு பிடித்துக் குடி புக வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள். அமுத மண்டலம் ஒன்றும் அப்படி நெடுந்தூரத்தில் இல்லை. ஆனலும், அவர்களுக்குப் புலப்படாது. என்ன நுட்பமான கருவியினலும் காண இயலாது."

"விமானத்தில் ஏறிப் போனால்?"

"அதுவும் ஒரு நிலைக்குமேல் போகாது. அவர்கள் அந்தக் காரியமெல்லாம் செய்யாமலா இருப்பார்கள்? என்ன என்னவோ வகையான விமானங்களை அனுப்பினார்கள். அவர்களால் முடியவில்லை."

"அமெரிக்கர்கள் பசியைக் கொண்டு வர முயற்சி செய்கிறார்கள் என்றாயே; இங்கு வந்தும் பசியென்னும் தொல்லை எதற்கு?"

"நீங்கள் அப்படி நினைக்கிறீர்கள். அவர்களுக்கு நன்றாகச் சாப்பிடவேண்டும். சாப்பிட்டால்தான் காமம் உண்டாகும். மகளிரோடு இன்புற வேண்டும். நன்றாகக் குடிக்க வேண்டும். இதற்கெல்லாம் மூல காரணம் பசி. அதைக் கொண்டு வந்து விட்டால் இதையும் அமெரிக்கா ஆக்கிவிடலாம் என்று பார்க்கிறார்கள்."

அப்போது நான் அவளை ஒரு கேள்வி கேட்டேன். அந்தக் கேள்வியைச் சிறிதும் ஒளிவுமறைவின்றி, நாணமின்றியே கேட்டேன். அந்தச் சமயத்தில் என் மனத்தில் கல்மஷமே இல்லை.

"இங்கே ஆண் பெண் உறவு இல்லையா?"

"உண்டே" என்றாள்.

"நான் தெளிவாகக் கேட்கிறேன். உடம்பினால் அடையும் இன்பம் உண்டா?"

"அதுவா? அப்படி ஒன்று இருப்பதாக இவர்கள் சொல்கிறார்கள். எனக்குத் தெரியாது. உங்களுக்கு என்ன தோன்றுகிறது?"

"எனக்கு இப்போது கிடைக்கும் இன்பம், நான் பெற்ற எல்லாவற்றிற்கும் மேலாக இருக்கிறது. உன்னைத் தொட்டால், என் உடம்பில் அமுதம் பாய்கிறது... இங்கே குழந்தைகள் பிறக்கிறதில்லையோ?"

"ஓ! பிறக்கிறார்களே! பெண்கள் தம் வாய்வழியாகக் குழந்தைகளைப் பெறுகிறார்கள்."

"அது எப்படி?"

"எப்போதாவது குழந்தை வேண்டுமென்று தோன்றினால் பிறக்கும். ஆனால், அப்படித் தோன்றுவது அரிது... இந்தப் பேச்சு இப்போது எதற்கு?"

"சரி, அமெரிக்கர்கள் பசியைக் கொண்டுவர முடியுமா?"

"எனக்குத் தோன்றவில்லை. பூலோக வாசிகள் இங்கே ஆசையைக் கொண்டு வந்தார்கள்; போட்டியைக் கொண்டு வந்தார்கள்; பொறாமையைக் கொண்டு வந்துவிட்டார்கள். இனியும் என்ன கொண்டு வருவார்களோ!"

"நான் அப்படி ஒன்றும் கொண்டு வரவில்லை. தெய்வ சாட்சியாகச் சொல்கிறேன்" என்றேன்.

"தெய்வ சாட்சியா! ஆ! நீங்கள் மிகவும் நல்லவர்கள்!" என்று சொல்லி, மீண்டும் ஒரு முறை என்னை அணைந்தாள். என்ன ஆச்சரியம்! என்னை—என் வாயை-முத்தமிட்டாள். ஆ! என்ன இன்பம்! சத்தியமாகச் சொல்கிறேன்; அதில் அணுவளவும் காம எண்ணமே இல்லை.

அடுத்த கணம் 'ஆ!' என்று அவள் இன்பத் தாக்குண்டு கூவினாள். வாயைத் திறந்து பெருமூச்சுவிட்டாள். "தொலைந்தது! உங்களுக்கு நன்றி. என் வாய் மணம் போயிற்று. நான் அமுத மண்டலம் போகிறேன்." இனிய தேன் குரல் காதில் ஒலித்தது. அவள் மறைந்தாள் எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. "அமுதவல்லீ!" என்று கூவினேன்; குன்றிலிருந்து கீழே விழுந்தேன்.

★

"அது யார், அமுதவல்லி?" என்ற குரல் கேட்டு விழித்துக்கொண்டேன். என்மனைவி அருகே நின்றாள். அவளைப் பார்த்துத் திருதிரு வென்று விழித்தேன்.

"ஏன் அப்படிக் கத்தினீர்கள்?" என்றாள்.

"கனவு" என்றேன்.

வெறும் கனவா அது?

# புரிந்தது

"இது என்ன, குழந்தை வாயை முத்த மிட்டாற்போல இருக்கிறது? மிளகாயே கடையில் கிடைக்கவில்லையா?" கிழவர் இப்படிச் சொல்லிக் கொண்டே சாப்பிட்டார்.

கூடத்தில் பேரக் குழந்தையை வைத்துக் கொஞ்சிக் கொண்டிருந்த ருக்மிணி அம்மாளுக்குக் கிழவர் ஏதோ சொல்கிறாரென்று தெரிந்ததே ஒழியத் தெளிவாகக் கேட்க வில்லை. "என்னடி சொல்கிறார்?" என்று அங்கிருந்த படியே தன் மருமகளைக் கேட்டாள். அவள் ஒன்றும் பதில் சொல்லவில்லை.

"எத்தனை தடவை நான் சொல்லியிருக்கிறேன், வாயை மூடிக்கொண்டு சாப்பிடுங்கள் என்று? ஏதோ குழந்தைப் பிள்ளைக்காரி சமைத்துப் போடுகிறாளே என்று கொஞ்ச மாவது நினைக்க வேண்டாம்?" என்று ருக்மிணி அம்மாள் இரைந்தாள்.

"என்னடி சொல்லி விட்டேன் நான்?" என்று சாப் பிட்டுக் கொண்டிருந்த கோபாலர் கேட்டார்.

"அது எனக்கா தெரியும்? உப்பு இல்லை, காரம் இல்லை; அது இல்லை, இது இல்லை என்று நொண்டு சொல்லிக் கொண்டே சாப்பிடுகிறது ஒரு கெட்ட வழக்கம்" என்று ருக்மிணி அம்மாள் உபதேசம் செய்தாள். அவளுடைய மருமகள் பரபரவென்று கூடத்துப் பக்கம் வந்து மெது வாகத் தன் மாமியாரிடம், "அவர் ஒன்றும் சொல்லவில்லை; நீங்கள் ஏன் இரைகிறீர்கள்?" என்று சொல்லி விட்டுப் போய் விட்டாள்.

"என்னடா நாக்கை நீட்டுகிறாய்? உன் தாத்தா மாதிரி நாக்கு நீளமாக இருக்குமோ உனக்கும்?" என்று சொல்லிய

படியே பேரக் குழந்தையைக் கொஞ்சினுள் ருக்மிணி அம்மாள்.

★

இந்தக் காட்சியை அடிக்கடி அந்த வீட்டில் பார்க்கலாம். கோபாலர் ஆந்திர நாட்டில் ஆசிரியர் வேலை பார்த்தவர். காரசாரமாக உண்டு பழகினவர். வக்கணையாகச் சாப்பிடுகிறவர். அவருக்கு ஒரே பிள்ளை. அவன் இப்போது சென்னையில் ஒரு கம்பெனியில் உத்தியோகம் பார்க்கிருன். கை நிறையச் சம்பாதிக்காவிட்டாலும் வயிறு நிறைவதற்குப் போதுமானது. தம் வேலையிலிருந்து பழுத்து விலகிய கோபாலரும் அவர் மனைவியும் இப்போது தம்முடைய பிள்ளையுடன் இருந்து வருகிருர்கள். அவனுக்கு இரண்டு குழந்தைகள்; இரண்டும் ஆண்.

கோபாலருக்குக் காரம் வேண்டும். அவர் பிள்ளை கோவிந்தனுக்குக் காரம் கூடாது. அவர் மருமகள் சில சமயங்களில் மாமனுருக்காகக் கொஞ்சம் காரம் கூடப் போடுவாள். தெலுங்கு தேசத்துக் காரம் சாப்பிட்டுப் பழகினவருக்கு அது எந்த மூலே?

முதுமை அடைந்தவர்களுக்கு வேறு புலன்களால் நுகர முடியாத தளர்ச்சி வந்து விடுகிறது. நாக்கு மட்டும் எளிதில் தளர்கிறதில்லை. அதுவும், அந்தக் காலத்தில் ஒன்றும் குறைவின்றிச் சாப்பிட்டு வழக்கமானவருக்குச் சபலம் இருப்பதில் வியப்பு ஒன்றும் இல்லை.

அவர் பிள்ளை கோவிந்தன் எட்டரை மணிக்கே உணவு கொண்டு கம்பெனிக்குப் போய் விடுவான். அவர் நிதானமாக நீராடி ஜபதபங்களை முடித்துக்கொண்டு பதினெரு மணிக்குச் சாப்பிடுவார். அவர் சாப்பிட்ட பிறகே பெண்கள் சாப்பிடுவார்கள்.

ருக்மிணி அம்மாளுக்குத் தன் மருமகளிடத்தில் தனி அன்பு. "நீங்கள் பத்து மணிக்கே சாப்பிட்டு விடுங்கள்; பாவம்! அந்தப் பெண் எவ்வளவு நாழிகை சாப்பிடாமல்

காத்துக் கொண்டிருப்பது?" என்று புதிய சட்டம் போட்டாள் அந்த அம்மாள்.

அவர் என்ன செய்வார்? "இவ்வளவு நாள் தான் வேலை, உத்தியோகம், பள்ளிக்கூடம் என்று பரந்து பரந்து வேலை செய்தாகி விட்டது. இப்போது என்ன அவசரம்? நிதானமாக ஜபம் செய்து விட்டுச் சாப்பிடுகிறேனே!" என்று சொல்லிப் பார்த்தார்.

"உலகம் தெரியாமல் பேசாதீர்கள்" என்று அவர் மனைவி அவர் வாயை அடக்கி விட்டாள்.

✶

தாம் உத்தியோகம் செய்த காலம் அவருக்கு நினைவு வந்தது. வாழ்க்கையில் எப்போதும் சுகமாக இருக்க வேண்டும் என்னும் இயல்புடையவர் அவர். சனி ஞாயிறில் எங்கேயாவது வெளியூர் போய் வருவார். ருக்மிணி அம்மாளையும் சில சமயங்களில் அழைத்துச் செல்வார். சில சமயங்களில் நண்பரோடு போய் விட்டு வருவார்.

திடீரென்று இரண்டு நண்பர்களோடு வந்து நிற்பார்; "கொண்டு வா காபி" என்பார். "எங்கே, ஏதாவது பண்ணிக் கொடு" என்பார். ருக்மிணி அம்மாள் எள் என்றால் எண்ணெயாக நிற்பாள். அவர் சொன்னபடியெல்லாம் செய்வாள்; ஆட்டினபடியெல்லாம் ஆடுவாள். என்றைக்காவது ஏதேனும் கூட்டமோ, புராணப் பிரசங்கமோ கேட்டு விட்டு அவர் சிறிது நேரம் கழித்து வந்தால் அவள் சாப்பிடாமல் காத்திருப்பாள். "நீ முன்னாலே சாப்பிடக் கூடாதோ?" என்றால், "நன்றாயிருக்கிறது! எனக்கு என்ன அப்படிப் பசி கண்ணை மறைக்கிறதோ? நீங்கள் சாப்பிடாமல் நான் சாப்பிட்டால் அது புழுவுக்குச் சமானம் அல்லவா?" எனபாள்.

இப்படி இருந்தவள் இப்போது எப்படி இருக்கிறாள்! அவள் அல்லவா இந்தக் கிழவரை ஆட்டி வைக்கிறாள்? அவள் இட்டதே சட்டமாக நடக்க வேண்டியிருக்கிறது. அந்த ருக்மிணியா இவள்?

பத்து மணிக்குச் சாப்பிட்டுப் பார்த்தார். அவருக்கு ஒத்து வரவில்லை. பழையபடி பதினொரு மணிக்குமேல் சாப்பிட்டால்தான் நல்லதென்று தோன்றியது. உடம்பு ஒரே மாதிரி இருக்குமா? அவருடைய வேதனையை அவர் மருமகள் தெரிந்து கொண்டாள்.

"ஏன் அத்தை அவரைத் துன்புறுத்த வேண்டும்? பதினொரு மணிக்குமேல் சாப்பிடுவதில் எனக்கு ஒன்றும் கெடுதல் இல்லையே!" என்று மாமியாரிடம் சொல்லிப் பார்த்தாள்.

"அதெல்லாம் உனக்குத் தெரியாது. நீ இளம் பிஞ்சு. இந்த வயசில் பசி, பட்டினி என்றெல்லாம் இருந்து உடம்பைக் காயப் போடக் கூடாது. அவருக்கு என்ன சங்கடம்? பத்து மணிக்குச் சாப்பிட்டால் கைக் காரியம் சீக்கிரம் ஆகி விடும். நீயும் இளைப்பாறலாம்."

'நம்மிடம் இந்தப் பெண்ணிற்கு உள்ள கரிசனம் நம்மோடு வாழ்ந்து பழகிய இவளுக்கு இல்லையே! ராட்சசியாக அல்லவா மாறி விட்டாள்?' என்று அவர் தனியே இருந்து வருந்தினார்.

மருமகளுடைய முயற்சியால் பத்து மணிச் சாப்பாட்டுச் சங்கடத்துக்கு ஒரு விடிவு பிறந்தது: மருமகள் பத்து மணிக்கே சாப்பிட வேண்டியது; கிழவர் எப்போது வேண்டுமானாலும் சாப்பிடலாம்; ருக்மிணியம்மாள் மாத்திரம் அவர் சாப்பிட்ட பிறகே சாப்பிடுவது.

"நீயும் முன்பே சாப்பிட்டு விடேன்" என்றார் கிழவர். அவர் இயற்கையாகவே இதைக் கூறினார்.

ருக்மிணியம்மாள் சுடச் சுடப் பதில் கூறினாள்; "பேசுகிற லட்சணத்தைப் பார்!" அதற்கு மேல் அவள் ஒன்றும் பேசவில்லை.

அவருக்கு அந்த அம்மாளின் தன்மை விளங்கவில்லை. அவள் ஏன் அப்படிக் கோபித்துக் கொள்கிறாள்? அவளுக்குத்தான் அவரைப்பற்றிச் சிறிதும் கவலையே இல்லையே!

## 2

அன்று ஏதோ பண்டிகை நாள். காரியாலயமும் இல்லை. கோவிந்தன் வீட்டில் இருந்தான். இரண்டு நண்பர் களைச் சாப்பிட அழைத்திருந்தான்.

ருக்மிணியம்மாளும் அவள் மருமகளும் சமையல் வேலையில் ஈடுபட்டிருந்தார்கள். ருக்மிணியம்மாள் அதிக மாக அடுப்படியில் இருப்பது கூடாதென்று டாக்டர் சொல்லி யிருந்தார். அதனால் அவள் தன்னால் இயன்ற சுற்றுக் காரியங்களைச் செய்தாள். அவளுடைய மூத்த பேரன் ராமு குழந்தையைக் கவனித்துக் கொண்டிருந் தான். கிழவர் கோபாலர் சுந்தர காண்டம் பாராயணம் பண்ணிக் கொண்டிருந்தார்.

சரியாகப் பத்து மணிக்குச் சாப்பாட்டுக்கு வரும்படி நண்பர்களிடம் சொல்லி யிருந்தான் கோவிந்தன். "அப்பா, நீங்களும் எங்களுடன் உட்கார்ந்து சாப்பிட்டு விடுங்கள்" என்றான்.

ருக்மிணியம்மாள், "அவர் ஜபமும் தபமும் அதற்குள் ஆகி விடுமா? அவர் மெதுவாகச் சாப்பிட்டுக் கொள்ளட் டுமே!" என்றாள்.

"ஒரு நாள்தானே? எல்லாரும் ஒன்றாக உட்கார்ந்து பேசிக் கொண்டே சாப்பிடலாம்."

அதற்கு மேல் ருக்மிணியம்மாள் ஒன்றும் பேசவில்லை.

சாப்பாடு நடந்து கொண்டிருந்தது. நண்பர்கள் இருவரும் கோபாலரிடம் மரியாதையாக நடந்து கொண் டனர். அவரும் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார். ஏதேதோ பேசிக் கொண்டே உண்டார்கள்.

நடுவில், "இப்போதெல்லாம் மனிதர்களுக்கு வீரமே இருப்பதில்லை. நம்முடைய சமுதாயமே கோழையாகி விட்டது" என்று வந்தவர்களில் ஒருவர் சொன்னார்.

"ஆமாம்; நமக்கு எதிலுமே துடிப்புப் போதாது. இந்தச் சாப்பாட்டை எடுத்துக் கொள்ளுங்கள். இதோ இந்தச் சட்டினியில் காரம் இருக்கிறதா? வெறும் தேங்காய் தான் இருக்கிறது. காரசாரம் என்று சொல்வார்கள். நீங்கள் சொல்வது போல வீரம் இல்லாமல் வெற்றி இல்லை. அது போலவே காரமில்லாமல் சாரம் இல்லை." கிழவர் கோபாலர் பேசினார்.

"உங்கள் அப்பா வயசானாலும் எவ்வளவு மிடுக்காகப் பேசுகிறார்! அந்தக் காலத்து மண் அல்லவா?" என்று அன்பர் அவர் பேச்சுக்கு மதிப்புரை வழங்கினார்.

அங்கே உள்ளே, "அட கிழமே! பேசாமல் சாப்பிடக் கூடாதோ? நாலு பேருக்கு நடுவிலும் இப்படிப் பேச வேண்டுமா?" என்று ருக்மிணியம்மாள் தலையில் அடித்துக் கொண்டாள். அதை மற்றவர்கள் பார்க்கவில்லை. கிழவர் மாத்திரம் கவனித்து விட்டார். அதற்குமேல் அவர் பேசவில்லை.

அவர் எதிர்பார்த்தபடியே விருந்தாளிகள் போன பிறகு பெரிய மண்டபப்படி நடந்தது. கோவிந்தனும் இருந்தான். அவனுக்கு ஏதோ நினைவு; அம்மா என்ன சொல்கிறாள் என்பதை அவன் கவனிக்கவில்லை. அந்த அம்மாள் தன் மருமகளை வைத்துக் கொண்டு கடுமையாகத் தன் கணவரைக் கடிந்து கொண்டாள். "வயசாக ஆக உலகம் தெரியாமற் போகிறதே! உங்கள் விமரிசனத்தை அத்தனை பேருக்கு நடுவில் சொல்லாவிட்டால் உங்கள் நாக்கு அறுந்து விடுமோ? பேசத் தெரிந்தால் பேச வேண்டும்; இல்லாவிட்டால் வாயை மூடிக்கொண்டு கிடக்க வேண்டும்."

அவர் சட்டினியில் காரம் இல்லை என்று சொன்னார். இப்போது சுடச்சுடக் காரமான பேச்சு அவருக்குக் கிடைத்து விட்டது.

அவர் பேசாமல் தாம் படுக்கும் இடத்துக்குப் போய்ப் படுத்துக் கொண்டார். எவ்வளவு காரமான உணவாக இருந்தாலும் சரி, அவருக்கு ஒரு பொருட்டன்று; அவர் கண்ணில் துளிநீர் வராது. இன்று ஸ்ரீமதி ருக்மிணியம்மாளின் காரமான பேச்சினால் கண்ணீர் விட்டார். படுத்தபடியே மனத்தில் துக்கம் புரண்டு வரக் கண்ணில் நீர் துளிக்கப் பழைய கால உலகத்திலே அவர் சஞ்சாரம் செய்தார்.

இப்போது அவருக்கு நன்றாக நினைவுக்கு வந்தது. ருக்மிணியம்மாளின் உறவினர்கள் அன்று வந்திருந்தார்கள். அவர்களுக்கு மிகவும் இனிய விருந்து சமைத்தாள். ஆனால் தன்னுடைய கணவருக்கு மாத்திரம் ஒவ்வொன்றிலும் காரம் சேர்த்துத் தனியே வைத்திருந்தாள்.

அன்று இரவு கோபாலர், "ஏது, உன்னுடைய மனிதர்களுக்கு என் காரம் பிடிக்கும்போல் இருக்கிறதே!" என்று கேட்டார். அவள் சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறாய்?"

"உங்களுக்கு மாத்திரம் தனியே காரம் போட்டுச் சமைத்தேன்" என்ற போதுதான் அவருக்கு உண்மை விளங்கியது.

'அந்த ருக்மிணியா இவள்?'

அன்று இரவு அவருக்கு உணவு வேண்டியிருக்கவில்லை. "மத்தியான்ன விருந்து பலம்" என்று காரணம் சொல்லி விட்டார். இரவு முழுதும் தூக்கமே இல்லை. 'இப்படிப் பேச்சுக் கேட்டு வாழ்வதைவிட உலகிலிருந்து விடை பெற்றுக் கொள்வதே நல்லது' என்று தோன்றி விட்டது.

மறுநாள் விடிந்தது. அவருக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை. நீராடினார். ஜபம் செய்ய உட்கார்ந்தார். மனம் எண்ணாத எண்ண மெல்லாம் எண்ணி எண்ணிப் புண்ணு

கியது. ஏதோ பேருக்குச் சாப்பிட்டார். தம்முடைய இடத்துக்குப் போய்ப் படுத்துக் கொண்டார்.

அன்று நவராத்திரி ஆரம்பம். மாலை நேரம். பேரப் பையன் விளையாடப் போயிருந்தான். கோவிந்தன் இன்னும் வரவில்லை. மருமகள் குழந்தையை எடுத்துக் கொண்டு கோயிலுக்குப் போயிருந்தாள். ருக்மிணி அம்மாள் நாலு வீடு தள்ளியிருந்த வீட்டுக்கார அம்மாள் வற்புறுத்தி அழைத்தமையால் அவர்கள் வீட்டுக் கொலுவைப் பார்க்கப் போயிருந்தாள். வீட்டில் கோபாலர் மாத்திரம் தனியாக இருந்தார்.

வீட்டில் ஒருவரும் இல்லையென்று அவர் தெரிந்து கொண்டார். தம்மை யாருமே கவனிக்காமல் பாலை வனத்தில் விட்டு விட்டார்கள் என்பது போன்ற உணர்வு அவருக்கு உண்டாயிற்று. உலகமே தம்மைப் புறக் கணிப்பதாகத் தோன்றியது. எதிர்கால வாழ்வு, வரவரக் கடுமையான இருளாக, நரகமாக இருக்கும் என்பதில் அவருக்குச் சிறிதும் ஐயம் உண்டாகவில்லை. 'அப்படியானால் நாம் இப்படியே எழுந்து போய்......' மேலே நினைக்கவும் அவர் மனத்துக்கு வலிமையில்லை. நினைக்காமல் மீளவும் இயலவில்லை. நினைவுப் போராட்டத்தில் சிக்கிக்கொண்டு தடுமாறினார்.

'நாலு பேருக்கு நடுவில் ஏதோ அவமானம் செய்து விட்டதாகப் படபடத்தாளே! அந்தப் பெண் என்ன இருந்தாலும் அயல்வீட்டுப் பெண். அவளுக்கு முன்னால் என்னை இப்படி மட்டந் தட்டிப் பேசுகிறாளே! எனக்கு அடங்க வேண்டியவள், அடங்கி யிருந்தவளே இப்படிப் பேசினால், அந்தப் பெண்ணும் சேர்ந்து கொண்டு பேச எவ்வளவு நாள் ஆகும்? இவளுக்கே என்னைக் கண்டால் அலட்சியமாக இருக்கும்போது என் மகன் என்னை லட்சியம் செய்வானா? அந்தச் சிறு பையன்—பேரன்—அவன் கூட நாளைக்குத் தலைக்குமேல் ஏறுவானே...'

இந்தத் திசையில் சென்ற சிந்தனையும் இதோடு நின்றது. பழைய வாழ்வுப் படலம் தோன்றியது. 'அப்போதெல்லாம் எவ்வளவு மரியாதையாக, அன்பாக நடந்து கொண்டாள்! ஏதோ சிறிய பூசல்கள் நடக்கும்; அவை வாழ்க்கையின் சுவையை அதிகப்படுத்தின. இளமை போனால் இப்படித்தான் அருவருப்பு உண்டாகுமோ? அவளுக்கு மட்டும் இளமை இருக்கிறதா?—'

"என்ன, தூங்குகிறீர்களா?" என்ற குரல் கேட்டது. கண்ணைத் திறந்து பார்த்தார்.

"சாயங்கால வேளையில் என்ன தூக்கம்? இந்தாருங்கள்" என்று எதையோ நீட்டினாள் ருக்மிணியம்மாள்.

"என்ன அது?" என்று மெலிந்த குரலில் கேட்டார். அவருக்குப் பேசவே மனம் இல்லை. ஆனால் அந்த எண்ணத்தையும் திடமாக நிறைவேற்ற அவருக்கு வலிமை இல்லை.

"குஞ்சாலாடு."

அவர் வாங்கிக் கொள்ளவில்லை. "உன் பேரனுக்குக் கொடு; உன் மருமகளுக்குக் கொடு."

"அவர்களுக்குக் கொடுக்க மனிதர்கள் இருக்கிறார்கள். உங்களுக்கு ஆர் தருவார்கள்?"—இந்தப் பேச்சில் குழைவு இருந்தது; பச்சாதாபம் இருந்தது; அடிபட்ட குழந்தையை இரக்கத்துடன் சமாதானம் செய்யும் தாய்மை இருந்தது.

'ருக்மிணியா பேசுகிறாள்!'—கிழவருக்கு வியப்பாக இருந்தது.

"இந்த எண்ணம் எப்போதும் இல்லையே! சற்று இருக்கவில்லையே!" கிழவர் கேட்டார்.

அவள் தன் கண்ணைத் துடைத்துக் கொண்டாள். "எனக்கு நீங்களும் உங்களுக்கு நானும் ஆதரவு. அந்தப் பெண் இந்த வீட்டுக்கு எசமானி. அதை மனசில்

வைத்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு இன்னும் உலகம் தெரியவில்லையே! இந்தாருங்கள். நீங்கள் இதை வாங்கிக் கொள்ளுங்கள். நான் சாப்பிட்டு இரண்டு நாட்கள் ஆயின!'' மேலே அவளால் பேச முடியவில்லை.

அவருக்கு அப்போதுதான் இந்தப் புதிய உலகம் பளிச்சென்று புலப்பட்டது. அவள் கையில் உள்ள குஞ்சாலாடை வாங்கிக் கொண்டார். இல்லை, இல்லை; லாடையும் அவள் கையையும் பற்றிக் கொண்டார்; அந்தப் பரிச மூலமாக ருக்மிணியம்மாளின் அறிவையும் அநுபவத்தையும் அன்பையும் உணர்ச்சியையும் அவர் தெரிந்து கொண்டு விட்டார். அவள் உள்ளத்தையே அவர் இப்போது புரிந்துகொண்டார். அந்த லாடு இனிக்க லாம்; ஆனால் அதைவிட இப்போது அவர் புரிந்து கொண்டது மிக மிக இனித்தது.

# சாமி பாறை

நாராயண ரெட்டியாரிடம் வந்து கேட்டார்கள் அதிகாரிகள்; பிறகு கண்டிராக்டரும் வந்து கேட்டார். அவர் ஒப்புக் கொண்டார். அப்போது அவருடைய தமையனார் ராமசாமி செட்டியார் ஊரில் இல்லை. அவரிடம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டு வாக்குக் கொடுத்திருக்கலாம். என்ன இருந்தாலும் வீட்டுக்குப் பெரியவர்; குழந்தை குட்டி இல்லாதவர்; நாராயண ரெட்டியாரையே தம்முடைய மகனுக்க் கருதியிருப்பவர். அவரிடம் சொல்லியிருந்தால் இவ்வளவு தூரம் சிக்கல் வந்திராது.

இறைவன்பட்டிக் கிராமத்தில் சிறிய மிராசுதார் குடும்பம் அது. ராமசாமி ரெட்டியாரும் நாராயண ரெட்டியாரும் அண்ணன் தம்பிகள். ஒரே குடும்பமாக வாழ்ந்து வந்தார்கள். அந்த இரண்டு பேருக்கும் இருபது வயசு வித்தியாசம். அதனால் தந்தையும் பிள்ளையும் போலவே தோன்றினார்கள். ராமசாமி ரெட்டியார் மனைவி ஜானகியம்மாளுக்கு நாராயண ரெட்டியாரிடம் தாயன்பு.

அவர்களுடைய புன்செய் நிலம் ஒன்றில் ஒரு பெரிய பாறை இருந்தது. தரைமட்டத்திலிருந்து ஐந்தாறடி வரையில் உயர்ந்திருந்தது. அந்தப் பக்கத்தில் மண் பாதை ஒன்று நெடுங்காலமாக இருந்து வந்தது. அதைக் கப்பி ரோடாகப் போடவேண்டுமென்று பொது மக்கள் பல காலமாக அதிகாரிகளுக்கு விண்ணப்பம் செய்து கொண்டிருந்தார்கள். அது இப்போது பலித்தது. கப்பி ரோடு போட ஏற்பாடுகள் நடைபெற்றன.

பாதைக்கு அருகில் ராமசாமி ரெட்டியார் குடும்பத்துக்குரிய பாறைப் புன்செய் இருந்தது. அந்தப் பாறையைப்

பிளந்து கப்பி எடுத்தால் பல மைல்களுக்கு உபயோகமாக இருக்கும். இதை அறிந்த அதிகாரிகளும் கண்டிராக்டர்களும் நாராயண ரெட்டியாரை அணுகினர். ஒரு வண்டிக்கு இவ்வளவு என்று விலையும் பேசிக்கொண்டார்கள். ஒப்பந்தமும் கையெழுத்தாகிவிட்டது.

ராமசாமி ரெட்டியார் அடிக்கடி கோயிலென்றும் குளமென்றும் வெளியூருக்குப் போய்விடுவார். குடும்ப நிர்வாகத்தையும் நிலபுலன்களையும் நாராயணனே கவனித்துக் கொண்டிருந்தார். கப்பிக் கல் உடைக்கும் ஒப்பந்தம் கையெழுத்தானபோது ராமசாமி ரெட்டியார் பத்திராசலம் போயிருந்தார். வருவதற்குப் பத்து நாட்கள் ஆகிவிட்டன. வந்தவுடனே நாராயண ரெட்டியார் மெல்லச் சாலையோடும் செய்தியைச் சொன்னார். ஒப்பந்தம் எழுதிக் கொடுத்துவிட்டதைச் சொல்ல அவருக்குச் சிறிது அச்சம் உண்டாயிற்று. தமையனார் வரும் வரைக்கும் காத்திருந்தால் ஒன்றும் தலை முழுகிப் போய்விடாது. அதிகாரியும் பெரிய மனிதர்களும் வந்து கேட்கும்போது என்னவோ தோன்றிற்று; ஒப்புக்கொண்டு விட்டார்.

"நம்முடைய நிலத்துக்கு அருகில் மண் பாதையை மாற்றிக் கப்பி ரோடு போடப் போகிறார்களே" என்று பேச்சை ஆரம்பித்தார் நாராயண ரெட்டியார்.

"எனக்குத் தெரியுமே; இவர்கள் கல் சம்பாதித்துப் போடும்போது பார்க்கலாம்! இந்த அரசாங்கத்தின் வேலையே ஆமை நடைதானே போடும்?" என்றார் ராமசாமி.

"அப்படி இல்லை; காண்டிராக்டுக்கு விட்டு வேலைகூட ஆரம்பித்துவிட்டார்கள்."

"ஆரம்பிக்கட்டும்; கப்பி ரோடு வரட்டும்" என்று அசுவாரசியமாகப் பேசினார் ராமசாமி ரெட்டியார்.

"ரோட்டுக்குப் கப்பி வேண்டும். அதற்காகப் பக்கத்தில் எங்கேயாவது பாறை இருக்கிறதா என்று தேடிக்கொண்டிருக்கிறார்கள்."

"தேடட்டும்; தேடட்டும்; வலைபோட்டுத் தேடட்டும்."

"நம்முடைய நிலத்திலுள்ள பாறையில் கல் உடைக்கலாம் என்று சொன்னார்கள்."

"சாமி பாறையையா? அதை உடைக்கக் கூடாது. அதற்குச் சாமி பாறை என்று பேர் இருக்கிறது உனக்குத் தெரியாதா? அதில் ஏதோ தெய்விகத்தன்மை இருக்க வேண்டும். அதனால்தான் அந்தப் பேர் வந்திருக்கிறது. அதைப் பூசை செய்யாவிட்டாலும் உடைக்காமலாவது இருக்கலாம்."

நாராயண ரெட்டியார் உள்ளத்தில் கவலை பாய்ந்தது. "அது இருப்பதனால் யாருக்கு என்ன லாபம்? கல் உடைத்தால் பணம் வரும். சாலையும் எளிதிலே போட உபயோகமாக இருக்கும்" என்று மெல்லச் சொன்னான் தம்பி.

"சாலை எளிதிலே போட்டால் என்ன? கஷ்டப்பட்டுப் போட்டால் என்ன? அது அரசாங்கத்தின் கவலையல்லவா? அந்தப் பாறையை உடைப்பதால் லட்சரூபாய் வந்து விடப் போகிறதாக்கும்!"

மேலே நாராயண ரெட்டியார் ஒன்றும் பேசவில்லை. இப்போது பேச வேண்டாம் என்று சும்மா இருந்து விட்டார். பிறகு சொல்லிச் சரிப்படுத்திவிடலாம் என்பது அவர் எண்ணம்.

ஆனால் பெரிய ரெட்டியார் மசிகிறவராக இல்லை. சிறிய ஊர்களில் சில பேர்வழிகள், ஒருவருக்கு ஒருவர் மோதிக்கொள்ளும்படி கலகமூட்டுவதையே தம்முடைய உத்தமமான திருத்தொண்டாகக் கொண்டிருப்பார்கள். அத்தகையவர்களில் ஓரிருவர் ராமசாமி ரெட்டியாரிடம் வந்து நடந்ததைச் சொன்னார்கள். அவருக்குக் கோபம் வந்துவிட்டது. "இந்தப் பயல் என்னை ஒரு வார்த்தை கேட்க வேண்டாம்? இருக்கட்டும்; கல் உடைப்பதைப் பார்த்துவிடுகிறேன்!" என்று கறுவினார்.

அவரிடம் கோள் கூறியவர்களே சின்னவரிடம் போனார்கள். "நாளைக்குச் சாகப் போகிற இந்தக் கிழத்துக்கு என்ன ஆணவம் ஐயா? வெறும் பாறை இப்போது பணம் காய்க்கிற பாறையாகிறது என்றால் இந்த மனிதன் சம்மதிக்கமாட்டேன் என்கிறானே! உழைக்கிறது நீங்கள். ஊர் சுற்றுவது அந்த மனிதன். இந்தக் காரியத்தால் பணம் வருகிறதை எண்ணிப் பார்க்க வேண்டாமோ?" என்று கலகம் மூட்டினார்கள்.

கண்டிராக்டர் வந்து நாராயண ரெட்டியாரிடம் எப்போது பாறையைப் பிளக்கலாம் என்று கேட்டார். "இன்னும் இரண்டு மூன்று வாரங்கள் போகட்டும்" என்று சொல்லி வைத்தார் ரெட்டியார். தம் தமையனுக்குக் கோபம் ஆறட்டும் என்று காத்திருந்தார் அவர். நடுவிலே அவருக்கு வெளியூரிலே வேலை இருந்தது. சென்னையிலே இருந்த அவர் மைத்துனர் அங்கே வந்து ஒரு வாரம் தங்கிப் போகலாம் என்று எழுதியிருந்தார். டிசம்பர் மாதத்தில் சங்கீதக் கச்சேரிகளும் கண்காட்சிகளும் அமர்க்களப்படும் சென்னையில். ஆதலின் நாராயண ரெட்டியார் அங்கே போய்த் தங்கினார்.

சின்னவர் ஊரில் இல்லாதபோது பெரியவர் ஒரு காரியம் செய்தார். அவசர அவசரமாக ஒரு சிற்பாசாரியை அழைத்து வந்தார். அந்தச் சாமிபாறையில் கொஞ்சம் சார்ப்பாக இருந்த பக்கத்தில் ஒரு பிள்ளையார் உருவத்தை வெட்டச் சொன்னார். பாறையோடு பாறையாகப் புடைப்பு உருவமாக அதை அமைக்கச் செய்தார். அதற்குப் பூஜையும் ஒரு நாள் செய்ய ஏற்பாடு செய்துவிட்டார். 'சாமிபாறை என்ற பெயர் உண்மையாகும்படி செய்து விட்டால், அந்தச் சாமியை உடைத்துத்தானே பாறையைப் பிளக்கவேண்டும்?' என்பது அவர் எண்ணம்.

சின்னவர் சென்னையிலிருந்து வந்தார். சாமிபாறையில் புதிய பிள்ளையார் எழுந்தருளி யிருப்பதைக் கண்டு

அவருக்கு வியப்பாக இருந்தது. தமையனார் செய்த தந்திரத்தை எண்ணிக் கோபமும் வந்தது. "இத்தனை அவசரமாக இந்தப் பிள்ளையாரை ஏன் செதுக்க வேண்டும்?" என்று ராமசாமி ரெட்டியாரைக் கேட்டார்; "எனக்குச் சொப்பனத்தில் விநாயகர் வந்து சொன்னார். அதனால் தான் இப்படிச் செய்தேன்" என்று அவர் ஒரு பொய்யைச் சொல்லி வைத்தார். நல்ல காரியத்துக்குப் பொய்யைச் சொன்னால் அது மெய்போலவே ஆகும் என்பது அவர் நம்பிக்கை. சொப்பனம் என்று சொன்னதைச் சின்னவர் நம்பவில்லை. அதைச் சொல்ல முடியுமா? பேசாமல் இருந்துவிட்டார்.

"அந்தப் பாறையில் ஓர் ஓரத்தில் கல் உடைக்கச் செய்யலாமா?" என்று ஒரு நாள் சின்னவர் தம் தமையனாரைக் கேட்டார்.

"நான் சொன்னதை நீ கேட்கவில்லை. கணபதியே தம்முடைய இடத்துக்கு ஆபத்து வரக்கூடாதென்று வந்து கனவிலே சொல்லி விட்டார். மறுபடியும் கேட்க உனக்கு எப்படித்தான் துணிவு உண்டாயிற்றோ, தெரிய வில்லை" என்று கோபத்தோடு பெரியவர் சொல்லி விட்டார்.

அதுமுதல் அண்ணன் தம்பிகளுக்குள் பேச்சு நின்று விட்டது. 'இனிமேல் பாறையை உடைக்கத் துணிய மாட்டான்' என்று பெரியவர் நினைத்தார். சின்னவரோ கண்டிராக்டரிடம் தவணை சொல்லிக்கொண்டே வந்தார். அதற்கு ஒரு விதமாகக் காரணமும் காட்டினார். அவருக்குத் தம் தமையனாரிடம் அளவற்ற கோபம் வந்தது. சாடை மாடையாக அதைக் காட்ட ஆரம்பித்தார்.

ராமசாமி ரெட்டியார் பார்த்தார். இதுதான் தக்க தருணமென்று தம் மனைவியுடன் காசி யாத்திரை புறப் பட்டுவிட்டார்; போகும்போது வீட்டு வேலைக்காரனிடம் சொல்வதுபோல, "அந்தப் பிள்ளையாருக்கு ஏதாவது சிறிது

அபசாரம் நேர்ந்தாலும் குடும்பம் நிர்மூலமாகப் போய விடும்'' என்று கடுமையாகச் சொல்லிவிட்டுப் போனார்.

இங்கே சின்ன ரெட்டியார் தவியாகத் தவித்தார். பாறையில் வெடி வைத்துப் பிளந்து பிள்ளையார் உடைந்து போனால் என்ன செய்வது என்று பயந்தார். "பிள்ளை யாருக்குச் சேதம் வராமல் கல்லை உடைக்க முடியுமா?" என்று கண்டிராக்டரைக் கேட்டார்.

"அது எப்படி முடியும்? நாலு வண்டிக் கப்பி ஓரமாக உடைத்துக்கொள்ளலாம். அதனால் என்ன பிரயோசனம்? வெடித்துப் பிளந்தால்தான் பாறை விடும்; உடைப் பதற்குச் சுலபமாக இருக்கும்'' என்று விடை வந்தது.

நாராயண ரெட்டியார் தர்மசங்கடத்தில் மாட்டிக் கொண்டார். 'சாலை போடுவதும் நல்ல காரியந்தானே என்று அவருக்குத் தெரியவில்லையே! இப்படி ஒரு பெரிய தடங்கலை உண்டாக்கி விட்டாரே!' என்று தம் தமைய னுரை எண்ணிச் சினம் கொண்டார்.

காசிக்குப் போன ரெட்டியார், நாராயண ரெட்டியாரின் பிள்ளைக்கு எழுதுகிறது போலப் போய்ச் சேர்ந்த விவரத்தைத் தெரிவித்திருந்தார்.

கண்டிராக்டர் நெருக்கிக்கொண் டிருந்தார். ஒப்பந் தத்தை ரத்து செய்து விடச் சின்ன ரெட்டியாருக்கு மனம் இல்லை. விநாயகருக்குத் தீங்கு உண்டாக்கும் துணிவும் இல்லை. எப்போதும் வேதனைப்பட்டுக்கொண்டு கவலையில் ஆழ்ந்திருந்தார்.

ஒரு நாள் அவருக்குத் திடீரென்று ஒரு யோசனை தோன்றியது. கண்டிராக்டர் வந்தபோது, "அந்தப் பிள்ளையார் இருக்கிற பாறையை அப்படியே உருவம் கெடாமல் துண்டாகப் பிளந்து எடுக்க முடியுமா?" என்று கேட்டார். கல்லுடைக்கும் தொழிலாளர்களிடம் கண்டி ராக்டர் கேட்டார். "அதெல்லாம் நம்மால் ஆகாது" என்று அவர்கள் சொல்லிவிட்டார்கள். "நல்ல கல்தச்சர்களைக்

கூப்பிட்டுக் கேட்டால் வழி சொல்வார்கள்" என்று ஒரு யோசனையையும் சொல்லி வைத்தார்கள்.

ரெட்டியார் கல்தச்சர்களை வருவித்துத் தம் கருத்தைச் சொன்னார். அவர்கள் பாறையைப் போய்ப் பார்த்தார்கள். "இது மிகவும் சங்கடமான இடம். வெடி வைத்துப் பிளக்கக் கூடாது. உளியாலேயே பின்னல் கொத்திக் கொத்தி வெட்டவேண்டும். சேர்ந்தாற்போல் பத்துப் பேர் உளிவேலை தெரிந்தவர்கள் ஊக்கமாக வேலை செய்தால் தனியே எடுத்து வைக்கலாம்" என்று சொன்னார்கள்.

"அதற்கு என்ன செலவாகும்?" என்று கேட்டார் ரெட்டியார்.

"ஐந்நூறுக்குக் குறையாது" என்றார் கல்தச்சரின் தலைவர்.

ரெட்டியார் சிறிது யோசித்தார். சாலைக்குக் கப்பி உடைப்பதனால் ஆயிர ரூபாயாவது வரும் என்று அவர் எதிர்பார்த்தார். அதில் ஐந்நூறு ரூபாய் போனால் போகிறது என்று எண்ணினார். ஆனால் இந்த வேலையை முதலில் செய்த பிறகுதானே கல் உடைக்கவேண்டும்? முதலில் ஐந்நூறு ரூபாயைச் செலவழித்தால் பிறகு ஆயிர ரூபாய் வரும்! 'ஒரு பைத்தியக்கார மனிதர் செய்ததால் வந்த விளைவு' என்று பல்லைக் கடித்துக் கொண்டார். கடைசியில் ரூபாய் போனால் போகிற தென்று பிள்ளையாரைத் தனியே எடுக்க ஏற்பாடு செய்து விட்டார்.

கல்தச்சர்கள் வேலை செய்தார்கள். பெரிய பெரிய உத்தரக் கற்களையும் தூண்களையும் மலைப் பாறைகளி லிருந்து வெட்டியெடுக்கும் வேலை போன்றது அது. பிள்ளையார் உருக் கொண்டிருக்கும் பாகத்தைப் பின்னல் கனமான கல் இருக்கும்படி வெட்டி எடுத்துவிட்டார்கள். அதை ஓரிடத்தில் தம் நிலத்தில் நகர்த்திக்கொண்டு போய் வைக்கச் சொன்னார் ரெட்டியார்.

பிறகு, கண்டிராக்டரிடம், "இனிமேல் நீங்கள் தாராளமாகக் கல் உடைத்துக் கொள்ளலாம்" என்று சொல்லிவிட்டார்.

கிடுகிடுவென்று அந்த வேலை நடந்தது. நல்ல கருங்கல். பாறையைப் பிளந்து, பிளந்த பகுதிகளை உளியால் வெட்டிக் கப்பிக் கற்களைக் குவித்தார்கள் தொழிலாளிகள். வண்டி வண்டியாகக் குவிந்தது கல். நினைத்ததற்குப் பன்மடங்கு அதிகமான கல் கிடைத்தது. கண்டிராக்டருக்கு அளவற்ற மகிழ்ச்சி. சிறிது தாமதமாக வேலையைத் தொடங்கினாலும் பல இடங்களுக்குச் சென்று கல்லைச் சேர்க்காமல் ஒரே இடத்தில் நிறையக் கப்பி கிடைத்ததே என்று ஆனந்தம் அடைந்தார். அவ்வப்போது எடுத்த கல்லுக்குரிய விலையை நாராயண ரெட்டியாரிடம் கொடுத்தார். "இது சாமி பாறை என்று சொன்னது பொருத்தம். சாமானியமான பாறையாக இருந்தால் இவ்வளவு கல் தேறாது" என்றார்.

ரெட்டியாருக்கும் பெருமகிழ்ச்சி, எதிர்பார்த்ததற்கு மேல் அவருக்குப் பணம் கிடைத்தது. இப்போது அவருடைய கவனம் பிள்ளையார் மேல் சென்றது. அவருடைய மகிமையினால்தான் இத்தனை லாபம் வந்த தென்று கூடத் தோன்றியது.

அதை வெட்டிய சிற்பியை வருவித்தார். அந்தப் பாறைத் துண்டை நன்றாகச் செதுக்கிக் கச்சிதமாக உருவாக்கினார். அது முழு விக்கிரகமாக இல்லாவிட்டாலும் பாறையிலே அச்சு வைத்துச் செய்ததுபோலப் பின்னாலே பலகை போலப் பாறையும் முன்னாலே புடைப்புருவ விநாயகருமாக இருந்தது.

அப்போது நாராயண ரெட்டியாருக்கு ஒரு புதிய எண்ணம் உதயமாயிற்று. தம்முடைய தமையனுருக்கும் கோபம் ஆறுவதற்கு அந்தச் செய்கை உதவும் என்று அவர் எண்ணினார். புதிதாக உருவாகும்

சாலை ஓரத்தில் தம் நிலத்தின் எல்லைக்குள் ஒரு சிறிய கோயிலைக் கட்டிப் பிள்ளையாரை அதில் பிரதிஷ்டை பண்ணி விடலாம் என்பதே அந்த எண்ணம். இப்போது தான் அந்தப் பாறையிலே அவருக்குப் பணம் விளைகிறதே!

காசிக்குப் போனவர் கடிதம் போட்டாரே ஒழிய வருகிறவராக இல்லை. பணம் வேண்டும் என்று கடிதம் வரும்; உடனே சின்னவர் அனுப்பிக்கொடுப்பார். எல்லாம் சின்னவருடைய பிள்ளையின் பெயரால்தான் நடந்து வந்தது.

என்ன ஆச்சரியம்! கல்லுடைப்பவர்கள் பாறையைத் தரைமட்டமாக்கி விட்டார்கள். சாலையில் இரு மருங்கும் கப்பிக் கற்கள் குவியல் குவியலாகக் குவிந்தன. பின்னும் பாறையைக் குடைந்து குழியாக்கி வந்தார்கள். ரெட்டியாருக்குப் பணம் சேர்ந்தது.

கப்பிரோட்டு வேலையும் நடந்துவந்தது. அந்த இடத்தில் அழகான கப்பி ரோடு வந்துவிட்டது. இப்போது ரெட்டியார் தாம் நினைத்தபடி ஒரு கோயில் கட்டினார். பிரதிஷ்டைக்கு நாளும் வைத்துவிட்டார். ஆனால் தம் தமையனார் இல்லாமல் அதைச் செய்யக் கூடாதென்று தீர்மானித்துக் கொண்டார். அவர் பிள்ளை தன் பெரியப்பாவுக்குக் கடிதம் எழுதினான். "உங்கள் பிள்ளையாருக்கு அப்பா கும்பாபிஷேகம் செய்வதாக ஏற்பாடு செய்திருக்கிறார். பிறகு தினமும் பூஜை நடைபெறும். இன்ன தேதியில் கும்பாபிஷேகம் நடக்கவேண்டும். நீங்கள் வராமல் செய்யக் கூடாதென்று காத்திருக்கிறார். தாம் செய்த தவறுகளையெல்லாம் மன்னித்துவிட்டுப் பெரிய மனசு பண்ணி வரவேண்டுமென்று கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறார். பிள்ளையாருடைய பெருமையை அவர் நன்றாகத் தெரிந்துகொண்டிருக்கிறார்" என்று எழுதினான்.

ராமசாமி ரெட்டியாருக்கு இந்தக் கடிதம் மிக்க வியப்பை ஊட்டியது. அவர் கோபம் என்றோ ஆறிப் போய்விட்டது. தாம் உண்டாக்கின பிள்ளையாருக்குத் தினமும் பூஜை நடைபெறப் போகிற தென்றால் அவர் நன்றாக இருக்கிறார் என்றுதானே பொருள்? 'பாறையையும் உடைத்திருக்க மாட்டார்கள்.' அவர் ஊரை நோக்கிப் புறப்பட்டுவிட்டார்.

வீட்டில் காலை வைத்தாரோ இல்லையோ, நாராயண ரெட்டியார் ஓடிவந்து அவர் காலில் விழுந்து, "இப்படி நீங்கள் செய்யலாமா?" என்று சொல்லி அழுதார். பெரிய ரெட்டியாருக்கு மனம் உருகியது.

"பிள்ளையாருக்குக் கும்பாபிஷேகமாமே?" என்று கேட்டார்.

"ஆமாம். எல்லாம் உங்கள் ஆசீர்வாதம். பிள்ளையார் சாமானியமானவர் அல்ல. மகா அற்புத மூர்த்தி. அவர் செய்த அற்புதங்களை அங்கே போய்ப் பார்த்தால் தெரியும்!" என்று கோப்பியமாகச் சொல்லிவைத்தார் இளையவர்.

நீராடி உணவு கொண்டு இருவரும் புறப்பட்டார்கள். சாலை உருவாகியிருப்பதைக் கண்டு பெரிய ரெட்டியார், "இவர்களுக்கு எங்கே கப்பி கிடைத்தது?" என்று கேட்டார்.

"எல்லாம் பிள்ளையார் கிருபைதான். அங்கே போனால் எல்லாம் விளங்கும்" என்று இப்போதும் விஷயத்தை வெளிவிடாமல் சொன்னார் சின்னவர்.

கோயிலுக்குமுன் தம் தமையனாரை அழைத்துச் சென்று, "இதோ இவரே உங்கள் பிள்ளையார்" என்று காட்டினார் இளையவர்.

பெரியவர் சுற்றிலும் பார்த்தார். பாறை இருந்த இடமே தெரியவில்லை. அழகிய கோயிலில் பிள்ளையாரும் அழகாக இருந்தார்.

"என்னப்பா இது?" என்று கேட்டார் பெரியவர்.

"எல்லாம் விநாயகப் பெருமானுடைய உத்தரவு; 'என்னைத் தனியே வெட்டி எடுத்துக் கோயில் கட்டி வை' என்று எனக்குச் சொப்பனமாயிற்று. அப்படியே செய்தேன். பாறையை வெட்டினதில் ஏராளமாகப் பணம் கிடைத்தது. எல்லாம் அவன் அருள்."

"சொப்பனம் கண்டாயா?"

"ஆமாம்; உங்கள் சொப்பனத்தில் வந்தவர் என்னை வஞ்சிக்காமல் என் சொப்பனத்திலும் வந்து இப்படிச் செய்யச் சொன்னார். அந்த அற்புதத்தை என்ன சொல்வது? பணம் கிடைத்த அற்புதத்தைத்தான் என்ன சொல்வது?"

"எத்தனை பணம்?"

"ஆறுயிரத்துச் சொச்சம்"

"என்ன! ஆறுயிரமா? இந்தப் பாறைக்கா?"

"ஆமாம். எல்லாம் இந்தப் பிள்ளையார் அருள்" என்று கையைக் குவித்தார் சின்னவர்.

"ஆம்; இவர் சக்தியுள்ள பிள்ளையார் என்பதில் சந்தேகமே இல்லை" என்று சொல்லிப் பெரியவரும் கையைக் குவித்து வணங்கினார். அவர் எதிர்பாராத அற்புதங்கள் நடந்திருக்கின்றன அல்லவா?

ஆரவாரமாக நடைபெற்ற கும்பாபிஷேகத்தில் சகோதரர்கள் இருவரும் உற்சாகத்தோடு ஈடுபட்டார்கள் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

# தாய் இல்லாப் பிள்ளை

"எதுவரையில் போகிறீர்கள்?"

"மதுரைக்குப் போகவேண்டும்; வண்டி சரியான நேரத்தில் போய்ச் சேரும் அல்லவா?"

"அப்படித்தான் நினைக்கிறேன். நானும் மதுரைதான் போகிறேன். ஒன்பது மணிக்கு ஒரு கல்யாணம். நீங்கள் மதுரையில் இறங்கி வேறு எங்கேயாவது போக வேண்டுமோ?"

"இல்லை, இல்லை. மதுரைக்கேதான் வருகிறேன். நானும் ஒரு கல்யாணத்துக்குத்தான் போகிறேன். அந்த முகூர்த்தமும் ஒன்பது மணிக்கு."

"நாளைக்கு நல்ல முகூர்த்தம் போலிருக்கிறது; ஏகப்பட்ட கல்யாணம். நான் சிறிது முன் பின் போகலாம் என்பதற்கில்லை. கல்யாணப் பெண்ணுக்கு நான் மாமன். பெண் தாய் இல்லாக் குழந்தை. நேற்றே புறப்பட எண்ணினேன் என்ன செய்கிறது? நினைத்தபோதெல்லாம் 'லீவு' கிடைக்கிறதா?"

"தாய் இல்லாப் பெண்ணா? அது என்ன, வேடிக்கையாக இருக்கிறதே! நான் போகிற கல்யாணத்திலும் மணமகள் தாய் இல்லாப் பெண் என்றுதான் சொன்னார்கள்!"

"அப்படியானால் நீங்கள் மணமகனுக்கு உறவினர்களோ?"

"ஆமாம்; நீங்கள் யார் வீட்டுக் கல்யாணத்துக்குப் போகிறீர்கள்?"

கடைசியில் இரண்டு பேரும் ஒரே திருமணத்துக்குத்தான் போய்க்கொண்டிருந்தார்கள் என்று தெரியவந்தது. பெண்ணின் மாமன் இது தெரிந்தவுடன் அடைந்த

மகிழ்ச்சியை அளவிட முடியாது. இரண்டு பேரும் நலந் தீங்குகளை விசாரித்துக் கொண்டார்கள்.

எழும்பூர் ரெயில் நிலையத்தில் திருவனந்தபுரம் எக்ஸ் பிரஸ்ஸில் முதல் வகுப்பில் ஏறினவர்கள் அவர்கள். இரு வரும் கீழ்ப்படுக்கையில் இருந்தார்கள். ஒருவர் அரசாங்க வேலையில் இருப்பவர்; பெயர் சோமசுந்தரம். மற்றொருவர் புத்தக வெளியீட்டாளர் ஏகாம்பரம்.

இருவரும் இந்தத் திருமணத்தில் புதிய உறவு பூணப் போகிறவர்கள் என்பதை அறிந்து பின்னும் நெருக்கமாகப் பேசினார்கள்.

"ஆமாம்; அந்தப் பெண்ணுக்குத் தாய் இல்லை என்று சொன்னீர்களே; இந்தக் கல்யாணத்தை முன் நின்று நடத்துகிறவர் யார்?" என்று கேட்டார் பிள்ளை வீட்டு உறவினராகிய ஏகாம்பரம்.

"அந்தப் பெண்ணின் தகப்பனாரே நடத்துகிறார்; அவர் வேறு திருமணம் செய்துகொள்ளவில்லை. மணிமணி யாக இரண்டு பிள்ளைகள் சம்பாதிக்கிறார்கள்" என்றார் சோமசுந்தரம்.

"அப்படியா? பாவம்! தாயில்லாக் குழந்தையை வளர்ப் பதற்கு அவர் எவ்வளவோ அல்லற்பட்டிருக்க வேண்டும்."

"அப்படி ஒன்றும் இல்லை. அந்தப் பெண்ணின் அத்தையே அந்த வீட்டில் அவளை வளர்த்து வந்தாள்."

"அப்படி எல்லோருக்கும் கிடைப்பதில்லையே! தாயை இழந்த பிறகு தகப்பன் இரண்டாம் தாரம் கட்டிக்கொண் டால், அப்போது முதல் மனைவியின் பிள்ளைக்கு வாழ்க்கை எப்படிச் சீர்குலைந்து போகிறது! ஒவ்வொருவருக்கு ஒவ் வொரு வகையில் துணை கிடைக்கிறது" என்று சொல்லிப் பெருமூச்சு விட்டார் ஏகாம்பரம்.

"நீங்கள் யாரையோ மனத்தில் வைத்துக்கொண்டு பேசுகிறீர்கள் என்று தோன்றுகிறது" என்றார் சோம சுந்தரம்.

"ஆம்; என்னையே நினைத்துக்கொண்டு பேசுகிறேன். நானும் தாய் இல்லாப் பிள்ளையாக வளர்ந்தவன்."

"அப்படிச் சொல்லுங்கள். உங்களை உங்கள் தகப்பனுர் நன்ருகக் கவனித்துக் கொண்டாரா?" என்று கேட்டார் சோமசுந்தரம்.

அதற்கு ஏகாம்பரம் விடை கூறுவதற்குள் தாம்பரம் வந்தது; வண்டி நின்றது. ஏகாம்பரத்தின் பலகைக்கு எதிர்ப்பலகையில் சோமசுந்தரம் படுக்கையை வைத்திருந்தார். மேல் பலகைக்குப் போகிற வேறு ஒருவர் அங்கே அமர்ந்திருந்தார். அவர் பேசாமல் சன்னலுக்கு வெளியே பார்த்துக்கொண்டே இருந்தார்.

தாம்பரம் வந்ததும் அவசரமாக ஒரு சேவகன் அங்கே வந்தான். அந்த மூன்ருவது மனிதரின் படுக்கையை மேற் பலகையில் விரித்தான்.

"காலையில் திண்டுக்கல்லில் வந்து எழுப்புகிருயா? மறந்து போவாயா? எழும்பூரிலே இந்தப் படுக்கையை விரிக்கக்கூடாது? சோம்பேறி" என்று அவர் அவனைக் கடிந்து கொண்டார்

அவன், "வருகிறேன், எசமான்" என்று சொல்லி விடைபெற்றுக் கொண்டான்.

வண்டி புறப்பட்டது. "உங்கள் கதையைச் சொல்லுங்கள், ஐயா!" என்று ஆவலோடு சோமசுந்தரம் கேட்டார். இதற்குள் மூன்ருவது மனிதர், மேற்பலகையில் ஏறிப் படுத்துக் கொண்டார். ஒரு வார்த்தை மற்றவர்களோடு பேசவில்லை. பேசிஞல் அவர் கௌரவம் போய் விடும் என்ற எண்ணமோ, என்னவோ!

ஏகாம்பரம் கதையைத் தொடங்கிஞர்.

★

நான் பிறந்த இரண்டாவது நாளே என்னை விட்டு விட்டு என் அன்னை உலக வாழ்விலிருந்து விடைபெற்

ருள். என் தந்தை பம்பாயில் வேலையாக இருந்தார். என் அன்னை இறந்தவுடன் அவர் வேறு கல்யாணம் செய்து கொண்டார்.

செல்வமாக வளர்த்த தம் ஒரே மகளின் பிரிவை என்னுடைய தாத்தாவும் பாட்டியும் பொறுக்க முடியாமல் புலம்பினர். நான் அவளுடைய நினைவுக்குறியாக இருப்பதிலே சிறிது ஆறுதல் பெற்றார்கள். நான் தாத்தா வீட்டிலேயே வளர்ந்தேன். என்னைக் கண்ணில் வைத்து இமையில் மூடிக் காப்பாற்றினார்கள்.

தாய் இல்லாப் பிள்ளையை வளர்ப்பது எளிய செயல் அல்லவே! எங்கள் தாத்தா வீட்டில் ஒரு வேலைக்காரி இருந்தாள். அவள் நல்ல வலிமையான உடம்பு உடையவள். அவளுக்கு அப்போது நான்கு மாதத்தில் ஒரு குழந்தை இருந்தது. எனக்குச் சொந்தத் தாயின் பால் கிடைக்காவிட்டாலும் பசுவின் பாலைக்கொண்டு வளர்க்கலாம் என்று என் தாத்தா எண்ணவில்லை. அவர் சிறிது மருத்துவம் தெரிந்தவர். அந்த வேலைக்காரி—அவள் பெயர் பார்வதி—அவளுடைய பாலை எனக்கும் பகிர்ந்தளிக்கும்படி ஏற்பாடு செய்தார். அவளுக்கு இரட்டைக் குழந்தை பிறந்தால் என்ன செய்வாள்? அந்தமாதிரி, தான் பெற்ற குழந்தையோடு என்னையும் ஒரு குழந்தையாகக் கொண்டு வஞ்சகம் இல்லாமல் பால் கொடுத்து வந்தாள். அவள் பாலைக் குடித்து நான் வளர்ந்தேன்.

எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. நான் பள்ளிக்கூடத்தில் படித்தபோது ஆசிரியர் அடிக்கடி என்னைப் பரிகாசம் செய்வார். சரியானபடி கேள்விக்கு விடை சொல்லாவிட்டால், "உன் மூளையில் களிமண்ணா இருக்கிறது? வேலைக்காரியின் பாலைக் குடித்த உனக்கு அறிவு எங்கே இருக்கும்?" என்பார். எப்போதாவது நான் பார்வதியிடம் துடுக்காகப் பேசினால் அவள், "நான் பால் கொடுத்து வளர்த்த பிள்ளை என்னையே சீறு

கிறது பார் அம்மா!" என்று என் பாட்டியிடம் புகார் செய்வாள்.

பாட்டியோ, "எப்போதும் அதையே சொல்லிக் கொண்டிராதே; குழந்தை வெட்கப்படப் போகிறுன்" என்று சொல்லுவாள். தாயை இழந்து தவித்த எனக்குத் தாயாக இருந்து பாலூட்டி வளர்த்த அவளை விலைக்கு வாங்கின பசுமாட்டைப் போலவே தாத்தாவும் பாட்டியும் நினைத்தார்கள். எனக்கோ, நான் அவள் உதவி பெற்றது ஏதோ தவறுன காரியம் என்று தோன்றிவிட்டது. ஊரார் பண்ணிய பரிகாசமே அதற்குக் காரணம்.

நாட்கள் சென்றன. பார்வதி வறுமையினுல் வாடி வேறு எங்கோ போய்விட்டாள். என்னுடைய தாத்தா என்னைப் படிக்க வைத்து ஒரு வேலையில் அமர்ந்ததைப் பார்த்துவிட்டுக் கண்ணை மூடினுர். அவரை அடுத்துப் பாட்டியும் போய்விட்டாள்.

எப்போதாவது மூன்று நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை பம்பாயிலிருந்து என் தகப்பனுர் ஊருக்கு வந்து ஒரு நாள் இருந்துவிட்டுப் போய்விடுவார். அவரிடம் எனக்கு அன்பே ஏற்படவில்லை. அவரை அப்பா என்று அழைக்கவோ பற்றுக்கொள்ளவோ எனக்கு விருப்பமில்லை. அவரை மாமா என்று அயலாரைப்போல அழைத்தேன். என்னை வளர்த்த தாத்தாவையே அப்பா என்றும், பாட்டியையே அம்மா என்றும் கூப்பிட்டுப் பழக்கப் பட்டிருந்தேன்.

என் தாத்தா இறந்த பிறகு என் தந்தையார் வருவதையே நிறுத்திக்கொண்டார். எப்போதாவது கடிதம் போடுவார். என்னை வளர்த்த இருவரும் இறந்தபோது, நான் ஓர் ஆசிரியனுக இருந்தேன். நல்ல இடத்தில் கல்யாணமாயிற்று. பிறகு என் சொந்த முயற்சியால் ஒரு பதிப்பாளன் ஆனேன். ஆண்டவன் அருளால் வியாபாரம் வளர்ந்தது. ஓர் அச்சு நிலையம் வைத்தேன். இப்போது

குறைவின்றி இருக்கிறேன். ஆனால் ஒரு பெரிய குறை என் மனத்தை உறுத்திக்கொண்டே இருக்கிறது.

"என்ன குறை?" என்று சோமசுந்தரம் கேட்டார்.

என்னைப் பார்த்தால் யாரும் தாயில்லாமல் வளர்ந்தவன் என்று சொல்ல மாட்டார்கள். மருத்துவருக்கு நான் வேலை வைப்பதே இல்லை. "பீரம் பேணின் பாரந் தாங்கும்" என்று சொல்வார்கள். குழந்தைப் பருவத்தில் பார்வதி ஊட்டிய பாலின் உரந்தான் எனக்கு இந்த வலிமையைத் தந்தது. அப்போதெல்லாம் அதைப்பற்றி யாராவது சொன்னால் நாணினேன்; நினைக்கவும் கூசினேன். ஆனால் இப்போது அந்தப் பெருமாட்டியை நினைந்து உருகுகிறேன். யார் அப்படிச் செய்வார்கள்?

இந்தக் காலத்தில் தான் பெற்ற குழந்தைக்கே பால் கொடுக்காமல் விரைவில் நிறுத்தும் தாய்மார்களைப் பார்க்கிறோம். அந்த உத்தமி தன் குழந்தையோடு வேறு ஒரு குழந்தையையும் ஊட்டி வளர்த்தாள். அத்தகைய அன்னையை நான் பிறகு காண இயலவில்லை. அவள் இப்போது இருக்கிறாளோ இல்லையோ தெரியாது. தான் உண்ணும் அமுதத்தில் எனக்கும் பங்கு தந்த அவள் குழந்தை இப்போது என்னைப்போல் பெரியவனாகி யிருப்பான். அவன் எங்கே இருக்கிறானோ, என்ன வேலை செய்கிறானோ தெரியவில்லை. விசாரித்துப் பார்க்கிறேன்; ஒரு தடையமும் கிடைக்கவில்லை. பெற்ற அன்னையைக் காணக் கொடுக்காத பாவியான நான் என்னை வளர்த்தவளையாவது அருமை அறிந்து போற்றலாம்; அதற்கும் நான் கொடுத்து வைக்கவில்லை. அந்தக் காலத்தில் அவள் அருமையை உணர்ந்து கொள்ளவில்லை. அவளுக்கு நான் பெரிய கடன் பட்டிருக்கிறேன். அதைத் தீர்க்க இயலவில்லையே என்ற பெரிய குறை என் உள்ளத்தை வாட்டுகிறது. தாயில்லாக் குழந்தைகள் பூஞ்சை உடம்போடு இருப்பதைக் காணும்போதெல்லாம் என் உள்ளம் எனக்கு அமுதளித்த அன்னையை நினைந்து

ஏங்குகிறது. கல்யாணப் பெண் தாயில்லாதவள் என்று நீங்கள் சொன்னபோது என் உள்ளம் காலத்தைப் பின் புறமாக நீந்திச் சென்று நின்றது; அந்த ஏக்கம் என்னை ஆட்கொண்டது. கடவுள் எனக்குமுன் வந்து, "உனக்கு என்ன வரம் வேண்டும்?" என்று கேட்டால், "பார்வதியை ஒரு முறை எனக்குக் காட்டவேண்டும். அவள் மகன் இருக்கும் இடத்தைத் தெரிவிக்க வேண்டும்" என்று கேட்பேன்.

★

இருவரும் சிறிது நேரத்தில் தூங்கிப் போனார்கள். விடிந்தபோது யாரோ, அந்தப் பெட்டியின் உட்கதவைத் தட்டினார்கள். ஏகாம்பரம் விழித்துக்கொண்டு திறந்தார். மேலே படுத்திருந்த கனவானின் சேவகன் உள்ளே வந்து, "ஐயா!" என்று குரல் கொடுத்தான்.

"யார், செங்கோடனா? திண்டுக்கல் வந்துவிட்டதா?" என்று அவர் கேட்டார்; "காபி வாங்கி வா" என்றார். அவன் கீழே இறங்கிப் போனான்.

ஏகாம்பரம் ஏதோ அதிசயத்தைக் கண்டவரைப் போல, "இங்கே பார் அப்பா" என்று அவனைக் கூப்பிட்டார். அவன் திரும்பிப் பார்க்கவில்லை. சிறிது நேரத்தில் சிற்றுண்டி கொணரும் ஆளை அவன் அழைத்துவந்தான். அப்போது ஏகாம்பரம், "உன் பெயர் என்ன அப்பா?" என்று கேட்டார். அவன், "செங்கோடன்" என்றான்.

அதற்குள் மணி அடித்துவிட்டமையால் அவன் தன் பெட்டிக்குப் போய்விட்டான். ஏகாம்பரத்துக்கு இருப்புக் கொள்ளவே இல்லை. "ஏன் ஸார், அந்தச் சேவகனுடைய ஊர் எது என்று உங்களுக்குத் தெரியுமா?" என்று செங்கோடனுடைய எசமானைக் கேட்டார்.

"அந்த விவரங்களையெல்லாம் தெரிந்து வைத்துக் கொள்ள எனக்கு நேரம் இல்லை" என்று வெட்டு ஒன்று துண்டு இரண்டாகப் பதில் கூறினார் அந்த மனிதர்.

'சீ! நீயும் ஒரு மனிதனு!' என்று மனத்துக்குள் நினைத்துக் கொண்டார் ஏகாம்பரம். மதுரை வந்து சேர்ந்தது. "தயை செய்து உங்கள் சாமான்களோடு என்னுடைய சாமான்களையும் ஒரு கூலியாளைக் கூப்பிட்டு இறக்கி வையுங்கள். நான் அவசரமாக ஒருவரைப் பார்த்துவிட்டு வருகிறேன்" என்று சோமசுந்தரத்தினிடம் சொல்லி உடனே இறங்கிப் போனார். செங்கோடனைத் தேடிக்கொண்டுதான் போனார்.

அவன் எசமானைப் பார்க்க இறங்கி வந்தான். அவனைக் கண்டதும் ஏகாம்பரம் அவனுக்கு முன்னே போய் நின்றார்.

"நீ குளித்தலையில் இருந்ததுண்டா?" என்று கேட்டார்.

அவன் அவரை ஏற இறங்கப் பார்த்தான். "சின்னப் பையனாக இருந்தபோது அங்கே இருந்தேன். அம்மா சொல்லுவாள்" என்பதைக் கேட்டவுடன், "உன் அம்மா பார்வதியா?" என்றார்.

"ஆம்" என்று அவன் சொன்னானோ இல்லையோ, அவனை அப்படியே ஏகாம்பரம் கட்டிக்கொண்டார். அவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

"அம்மா எங்கே இருக்கிறாள்?"

அவன் விடை சொல்ல முடியவில்லை. அதற்குள் அவனுடைய எசமானர் தம் தலையை வெளியே நீட்டிப் பார்த்தார்; "ஐயோ! எசமான் கோபித்துக்கொள்வார்" என்று பதறியபடி அவன் அவரை விட்டுச் செல்ல முயன்றான்.

ஏகாம்பரம் சட்டென்று தம் பையிலிருந்து தம் விலாசச் சீட்டை எடுத்து அவனிடம் நீட்டி, "இந்தா அப்பா, எப்படியாவது சென்னையில் வந்து என்னைச் சந்தி" என்று சொல்லிக் கொடுத்தார். அவன் அதை வாங்கிப் பையில் போட்டுக்கொண்டு போய்விட்டான்.

சோமசுந்தரம் பெட்டி படுக்கைகளுடன் கீழே இறங்கி வந்து வெளியே போகும் வாசற்கருகில் நின்ருர். ஏகாம் பரம் அவரை அணுகி, "கண்டுபிடித்துவிட்டேன்!" என்று கத்திஞர்.

"அவன் உங்கள் செங்கோடன்தாஞ?" என்று கேட்டார் சோமசுந்தரம்.

"ஆம்"

"அவன் தாய் எங்கே இருக்கிருள்?"

"அதைத்தானே தெரிந்து கொள்ளவில்லை! அதற்குள் அந்தப் படுபாவி—அவன் எசமான்—தலையை நீட்டிவிட்டான். இருக்கட்டும், மறுபடியும் இப்படியே வந்து தன் இடத்துக்குப் போவான் அல்லவா? அப்போது அவன் இருப்பிடத்தைத் தெரிந்துகொள்ளலாம்" என்று ஏகாம் பரம் கூற, இருவரும் காத்திருந்தார்கள்.

பாவம்! அவர்கள் கண்டார்களா, செங்கோடன் திருமங்கலத்தில் இறங்குவதற்காக எசமான் படுக்கையைக் கட்டி ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தான் என்பதை? வண்டி ஊதியது; நகர்ந்தது; ஓடத் தொடங்கியது. முதல் வகுப்பு வண்டி போவதைப் பார்த்தார்கள். உள்ளே செங்கோடன் குனிந்தபடியே ஏதோ செய்துகொண்டிருந் தான். அவன் முதுகுதான் தெரிந்தது.

★

கல்யாணத்தில் ஏகாம்பரத்துக்கு ஒன்றும் ஓடவே இல்லை. "செங்கோடன், பார்வதி" என்று முணுமுணுத் துக்கொண்டே இருந்தார். கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லையே என்று அங்கலாய்த்தார். சென்னை சென்றதும் ஒவ்வொரு நாளும் செங்கோடன் வருவான் என்று எதிர்பார்த்து ஏங்கிஞர்.

'அவன் சென்னையில் இருக்கிருனே? வெளியூரில் இருக்கிருனே? என் விலாசத்தைக் கொடுத்தவன், அவன்

விலாசத்தைக் கேட்டிருக்கக் கூடாதோ! அது தெரிந்தால், அவன் அமெரிக்காவில் இருந்தாலும் போய்ப் பார்த்து விடலாமே!' என்று வருந்தினர்.

கடைசியில் ஒருநாள் அவன் வந்தே விட்டான்.

"ஏன் அப்பா செங்கோடா, இவ்வளவு காலம் கடத்தி விட்டாய்? நீ எந்த ஊரிலிருந்து வருகிறாய்?"

"இதே ஊரில்தான் இருக்கிறேன்; நுங்கம்பாக்கத்தில் வீடு. எப்படி வருகிறது?" என்று சொல்லித் தன் கதையைச் சொன்னான்.

பாவம்! அவரை வளர்த்த அன்னை இறந்து ஆறே மாதங்கள் ஆயினவாம். அதற்கு முன்பே செங்கோடன் கண்ணில் பட்டிருந்தால்—?

குளித்தலையில் அவன் இருந்த காலம் அவனுக்கு நன்றாக நினைவுக்கு வரவில்லை. அவன் தந்தை இறந்ததனால் தாய் உழைத்து வேலை செய்து அவனைக் காப்பாற்றினாள். ஏதோ ஒரு வீட்டில் அவள் வேலை செய்து கொண்டிருந்த போது அந்த வீட்டுக்காரர் தயவால் அவனுக்கு அரசாங்கத்தில் பதிவுத் துறையில் வேலைகிடைத்தது. எங்கெங்கோ மாற்றலாகி இப்போது சென்னையிலே இரண்டு ஆண்டுகளாக இருக்கிறான். அவனுடைய எசமான் கடும் புலி போலும் குணமுள்ளவர். கசக்கிப் பிழிந்து வேலை வாங்குகிறவர். இம்மியளவும் இரக்கம் இல்லாதவர். அவனுடைய மனைவிக்கு அது பேறுகாலம். அவள் நோய்வாய்ப்பட்டுக் கிடந்து தேறினவள்; மெலிந்த உடம்புடையவள். அந்த அதிகாரி திருமங்கலத்துக்குப் போனபோது அவளுக்குக் கடுமையான சுரம். வேறு யாரையாவது அழைத்துக் கொண்டு போகும்படி செங்கோடன் அவரைக் கெஞ்சினான். "என் சொல்படி நீ கேட்க வேண்டுமா? அல்லது உன் சொல்படி நான் கேட்க வேண்டுமா?" என்று உறுமினர் எசமான். தலைவிதியே என்று அவன் வரவேண்டியிருந்தது.

இப்போது அவன் மனைவி ஆண் குழந்தையைப் பெற்றிருக்கிறாள். ஒரு வாரமாயிற்று. மருந்து கொடுக்கப் பணம் இல்லை. "வேறு வழி இல்லாமல் திண்டாடினேன். அப்போது உங்கள் நினைவு வந்தது. நீங்கள் கொடுத்த விலாசச் சீட்டு நல்ல வேளையாகப் பையிலே கிடந்தது; வந்தேன். நீங்கள் இந்த ஏழையிடத்தில் இத்தனை அன்பு காட்டக் காரணம் தெரிந்துகொள்ள வந்தேன்; முடிந்தால் உதவியும் பெறலாம் என்ற எண்ணந்தான்."

ஏகாம்பரம் சுருக்கமாகப் பழங்கதையைச் சொன்னார். "உங்கள் அம்மாவை - இல்லை, இல்லை - நம் அம்மாவைக் காண நான் கொடுத்து வைக்கவில்லை. ஆண்டவன் உன்னையாவது கண்டுபிடித்துச் சந்திக்க அருள் செய்தானே! இந்தா, நீ அந்த வேலைக்கு முழுக்குப்போட்டு விடு. நம்முடைய அலுவலகத்தில் உனக்கு ஒரு வேலை தருகிறேன்."

அவன் பேச முடியாமல் விழித்தான்.

"நீ என் தம்பிக்குச் சமானம். உனக்கு ஒரு குறைவும் வராமல் பார்த்துக்கொள்கிறேன்......இந்தா, முதலில் உன் மனைவிக்கு மருந்து வாங்கிக் கொடு" என்று சொல்லிப் பத்து ரூபாயை நீட்டினார்.

அவன் பணிவாக வாங்கிக்கொண்டான்.

இரண்டு நாள் கழித்து அவன் வீட்டுக்குப் போனார் ஏகாம்பரம். அவன் மனைவியைப் பார்த்தார். பாவம்! எலும்பும் தோலுமாகக் கிடந்தாள். "டாக்டர் குழந்தைக்குப் பால் கொடுக்கக்கூடாது என்று சொல்கிறார் சாமி" என்று சொன்னான் செங்கோடன்.

"ஆண்டவன் காப்பாற்றுவான். பயப்படாதே!"

★

இப்போது செங்கோடன் பார்வதி அச்சு நிலையத்தில் வேலை பார்க்கிறான். ஏகாம்பரம் தம்முடைய பங்களா

விலே ஒரு சிறிய குடில் கட்டி அதில் செங்கோடனை இருக்கச் செய்திருக்கிறார். எத்தனையோ சமயங்களில் நண்பர்கள் சொல்லியும் சொந்தத்தில் மாடு வாங்கிக் கட்டிக்கொள்ள விரும்பவில்லை அவர். அத்தகையவர் இப்போது ஒரு மாடு வாங்கிக் கட்டியிருக்கிறார். செங் கோடனுடைய குழந்தைக்குப் பால் வேண்டுமே; அதற் காகவே அதை வாங்கினார்.

இப்போதெல்லாம் அடிக்கடி சோமசுந்தரம் அவரைப் பார்க்க வருகிறார். "பசுமாடு எப்படி இருக்கிறது?" என்று கேட்பார் அவர். "நன்றாக இருக்கிறது. என் நன்றிக்கடனை ஓரளவு அது தீர்த்து வருகிறது. தாயை இழந்த எனக்குப் பால் தந்து வளர்த்தாள் ஒரு தாய். அவள் குடும்பத்தில் பிறந்து தாய்ப்பால் குடிக்க இயலாத குழந்தைக்குப் பால் கொடுக்க இந்தப் பசுவை வாங்கிக் கட்டும் புண்ணியமாவது கிடைத்ததே என்று மகிழ்ச்சி அடைகிறேன்; ஆண்டவனை வாழ்த்துகிறேன்" என்பார் ஏகாம்பரம்.

ஆம்! அவர் பெற்ற பாலுணவுக்குக் கைம்மாறாக இந்த உலகத்தையே வழங்கினாலும் ஈடாகுமா?

# பின்பாட்டுக்காரர்

நவராத்திரி விழாவுக்காகவே தனியே ஒரு பந்தல் போட்டிருந்தார்கள். ஓர் ஓரத்தில் விசாலமான கொட்டகை. அதைச் சார்ந்து விரிவான பந்தல். மூவாயிரம் பேர் பந்தலுக்குள் உட்காரலாம். இந்த ஆண்டு ஒன்பது நாளும் கச்சேரி ஒன்றும் இல்லை. கோவை மாநகரில் நவராத்திரி விழா, கச்சேரி இல்லாமல் நடக்கிறது இது தான் முதல் தடவை. சங்கீத ரசிகர்களுக்கு இதனால் கோபம். வித விதமான கச்சேரிகளைக் கேட்டு மகிழ்கிற வர்கள் அவர்கள். அடுத்த நவராத்திரி எப்போது வருகிற தென்று அவர்கள் காதுகள் தினவெடுத்துக் கிடந்தன. இந்த ஆண்டு கச்சேரி இல்லை, எல்லாம் கதைதான், என்ற தைக் கேட்டு அவர்கள் ஏமாற்றம் அடைந்ததில் வியப்பே இல்லை.

சென்னையிலிருந்து நாராயண பாகவதர் வரப் போகிறார். ராமாயணத்தை ஒன்பது கதைகளாக்கிச் சொல்லப் போகிறார். எல்லாம் முக்கியமான கட்டங்கள். ராமாவதாரம், சீதா கல்யாணம், ஆரண்ய கமனம், பாதுகா பட்டாபிஷேகம், சீதாபகரணம்—இப்படி ஒன்பது தலைப்பில் ஒன்பது நாளும் ராமாயணம் நடக்கப் போகிறது.

நாராயண பாகவதர் மூன்று ஆண்டுகளாகச் சென்னையில் பெயர் பெற்று வருகிறார். பல பழங் கதைகளைச் சொல்வதோடு புதிய புதிய கதைகளையும் உருவாக்கிச் சொல்லத் தொடங்கினார். அவருக்கு வடமொழி, தமிழ், தெலுங்கு, மராத்தி, ஹிந்தி ஆகிய மொழிகளில் தேர்ச்சி உண்டு. ஆங்கிலம் நன்றாகத் தெரியும். ஏதோ உத்தியோகத்தில் இருந்தவர், கதை பண்ணுவதை ஒழிந்த வேளை

வேலையாக வைத்துக் கொண்டிருந்தார் முதலில். பின்பு அதுவே வாழ்க்கைக்குத் தக்க ஊதியம் தருவதாக அமையவே, வேலையை விட்டு விட்டார். சொற்சோர்வு இல்லாமல் கதையைச் சொல்வதும், வருணனைகளும் அவருக்குப் பெயர் வாங்கித் தந்தன.

கோவையில் நாராயண பாகவதர் கதை வரிசை ஆரம்பமாயிற்று. முதல் நாள் சங்கீத அபிமானிகள் வர வில்லை. ஆனால் இரண்டாவது நாள் பாதிப் பேர் வந் தார்கள். மூன்றாவது நாள் எல்லோருமே வந்து விட் டார்கள். காரணம் பாகவதர் செய்த கதையில் சங்கீதமும் மிகவும் சிறந்ததாக இருந்ததுதான். நாராயண பாகவதர் சங்கீதம் தெரிந்தவர்; ஆனால் அவருக்குச் சாரீர வசதி போதாது. அந்தக் குறை தெரியாமல் அவருடைய கதை யைச் சங்கீதத்தால் பரிமளிக்கச் செய்யும் ஒருவர் அவருக் குக் கிடைத்திருந்தார். கோவிந்த ராவ் பின்பாட்டாகக் கிடைத்ததை நாராயண பாகவதருடைய பாக்கியம் என்று சொல்வதா? கதை கேட்கிறவர்களின் பாக்கியம் என்று சொல்வதா?

அற்புதமான சாரீரம். ஆள் ஒடிந்து விழுபவரைப் போல் இருப்பார். ஆனால், அந்தச் சரீரத்திலிருந்துதான் அந்த அமுதகானம் எழுந்தது. நாராயண பாகவதர் பாடுகையில் அதை வாங்கிப் பாடுவார். அவர் குரல் கொட்டகை முழுவதும் நிரம்பி வழியும். சுலோகங்களை நாராயண பாகவதர் பாடி, ராக ஆலாபனை செய்யும்படி விட்டு விடுவார். பிறகு பார்க்க வேண்டும், கோவிந்த ராவ் செய்யும் அற்புதத்தை! அது கதையா, பாட்டுக் கச்சேரியா என்று பிரமிக்கும்படி செய்துவிடுவார். சில கீர்த்தனைகளைப் பாகவதர் தொட்டுக் காட்டி விட்டு விடுவார். அதைக் கோவிந்த ராவ் விந்யாசப்படுத்துவார். சுரம்கூடச் சில சமயங்களில் பாடுவார். வெளியிலிருந்து கேட்கிறவர்கள் யாரோ பெரிய வித்துவான் சங்கீதக்

கச்சேரி நடத்துகிறார் என்றே எண்ணிக் கொள்வார்கள். தேனொழுகும் சாரீரம் என்றால், அவருடையதைத்தான் சொல்லவேண்டும்.

சங்கீதம் மட்டும் அல்ல; வேறு விஷயங்களிலும் அவர் கெட்டிக்காரராக இருந்தார். கதை போகும் போக்கிலே பாகவதர் மறந்து விட்டாலும், அவர் சன்னமான குரலில் அப்போது பாடவேண்டிய கீர்த்தனத்தையோ, தமிழ் விருத்தத்தையோ, சுலோகத்தையோ அடியெடுத்து முணு முணுப்பார். பாகவதர் பிடித்துக் கொள்வார்.

இப்படியாக நாராயண பாகவதருக்கு உண்டான புகழுக்குப் பாதிக் காரணம் அவருடைய பின்பாட்டுக்காரர் என்று சொன்னால் அது தவறு அல்ல. பாகவதருக்கு முப் பத்தைந்து வயசு; பின்பாட்டுக்காரர் அவரை விடப் பெரிய வர்; நாற்பது வயசு அவருக்கு.

கோவைச் சங்கீதக் காதலர்கள் கதைக்கு வந்து இப் போது குழுமுகிறார்கள் என்பதற்குக் காரணம் தெரிந்து விட்டதல்லவா? பின்பாட்டுக்காரருக்கு ராகம் பாடப் பாகவதர் அடிக்கடி சந்தர்ப்பம் கொடுத்து வந்தார். ஒரு நாள் கதையில் நாலு ராகமாவது பின்பாட்டுக்காரர் பாடாவிட்டால் கூட்டத்தினருக்குத் திருப்தி பிறவாது. இரண்டை ஓரளவும், இரண்டை விரிவாகவும் பாடி மக்களை இன்பக் கடலில் ஆழ்த்துவார் அவர்.

சங்கீதத்தில் அந்தப் பின்பாட்டுக்காரர் ஆற்றல் பெற் றிருந்தது போலவே, நல்ல ஞாபக சக்தியும் பெற்றிருந்தார். பாகவதர் பாடும் உருப்படிகள், சுலோகங்கள், அபங்கம், விருத்தம், பத்தியம் எல்லாம் அவருக்கு மனப்பாடம். இவ் வளவு இருந்தும் கதை நடக்காதபோது அதிகமாகப் பேச மாட்டார்; வாயில்லாப் பூச்சியைப்போல் இருப்பார்.

"இவர் கச்சேரி பண்ணப் புறப்பட்டு விட்டால் பெரிய சங்கீத வித்துவான் என்று சீக்கிரத்தில் பெயர் வாங்குவார்" என்று சிலர் சொன்னார்கள்.

"பாகவதருக்கு இவர் இல்லாவிட்டால் இத்தனை பெருமை உண்டாகியிராது" என்று சிலர் கூறினார்கள்.

சங்கீதத்தைப் பற்றிய அக்கறையில்லாதவர்களுக்குக் கூட, "சுலோகங்களை முழுக்க முழுக்க எழுத்துக்களை உச்சரித்துப் பாடுகிறார்" என்ற நல்ல கருத்து ஏற்பட்டது.

எங்கே கதை நடந்தாலும் நன்றியுரை சொல்லும் போது தனியே கோவிந்த ராவைச் சிறப்பித்துச் சில வார்த்தைகளைச் சபையின் பொறுப்பாளர் சொல்வது வழக்கமாகப் போய்விட்டது.

★

கோவை நவராத்திரி விழா நிறைவேறியது. கடைசி நாளில் பாகவதருக்குப் பணமும் பண்டங்களும் பரிசாக வந்து குவிந்தன. வாட்டசாட்டமான வடிவுடையவர் அவர். இரட்டை நாடி உடம்பு. அவர் சபையில் நின்றாலே கம்பீரமாக இருக்கும். அவரை உட்கார வைத்து மாலை அணிவித்தார்கள். அவருக்கு அருகில் பின்பாட்டுக்காரரை உட்காரச் சொன்னார்கள், மரியாதை செய்ய. அவர் மறுத்து விட்டார். பாகவதரே, "வாருங்கள்" என்று சொல்ல, பக்கத்தில் அமர்ந்தார். அவர் கழுத்திலும் மாலை போட்டார்கள்.

அந்தச் சமயத்தில்தான் அந்தக் காரியம் நடைபெற்றது. அதன் விளைவு என்னவாகும் என்பதை அதைச் செய்த மனிதர் நினைத்துப் பார்க்கவில்லை. சங்கீதப் பித்தராகிய அவர் விடுவிடு வென்று வந்தார். சபைக்காரர்களுக்கு அவர் முன்னால் இதைச் சொல்லவில்லை. ஏதோ ஒரு பொட்டலத்தைக் கொண்டு வந்தார். மேடைக்கு வந்து அதை அவிழ்த்தார். அதில் ஒரு பொன்னாடை இருந்தது அதைக் கொண்டு வந்தவர், "இந்தக் கதைக்கு ஜீவனாக அமுத கான மழையைப் பொழிந்த ஸ்ரீ கோவிந்த ராவ் அவர்களுக்குச் சங்கீத அபிமானிகளின் காணிக்கை இது"

என்று சொல்லிப் பின்பாட்டுக்காரர்மேல் போர்த்தி விட்டு விடுவிடு வென்று கீழே இறங்கிப் போய்விட்டார். சங்கீத அபிமானிகள் கைதட்டி ஆரவாரித்தார்கள். மற்ற வர்களும் கைதட்டினுர்கள்.

ஆனல் இதை நாராயண பாகவதர் ரசிக்கவில்லை. அவர் சபைக் காரியதரிசியைப் பார்த்தார். அந்தப் பார்வை யில் கனல் இருந்தது. "எங்களுக்குத் தெரியாமல் இது நடந்துவிட்டது" என்று இரகசியமாகச் சொன்னுர் காரிய தரிசி. அந்தக் கணத்தில் நாராயண பாகவதர் உள்ளத் தில் பின்பாட்டுக்காரரிடம் பொருமைப் பொறி தோன்றி யது. பாவம்! கோல்போல் ஒல்லியாக இருந்த அவரோ சட்டென்று பொன்னுடையைச் சுருட்டிக் கொண்டு எழுந்துவிட்டார்.

★

அதுமுதல் பாகவதர் பின்பாட்டுக்காரரிடம் ஒருவகை யான அலட்சிய புத்தியைக் காட்டலானுர். பாடுவதற்கு அளிக்கும் சந்தர்ப்பங்களைக் குறைத்துக்கொண்டு வந்தார். ஏதாவது ஒருமுறை ராக ஆலாபனத்தை விரிவாகச் செய் தால் போதும் என்று சொன்னுர். கோவை போய் வந்த பிறகு பாகவதர் கதைகளின் பாணியே கொஞ்சம் மாறி விட்டதென்பதை மக்கள் உணர்ந்தார்கள். முன்பெல்லாம் கதை சொல்லும் பாகவதரும் பின்பாட்டுக்காரரும் சமான மாக நின்று, கேட்பவர்களை ஆனந்த வெள்ளத்தில் ஆழ்த்து வார்கள். இப்போதெல்லாம் பின்பாட்டுக்காரருடைய பங்கு சற்றே குறைந்து வந்தது.

யாராவது தனியே பாகவதரிடம், "ஏன் முன்போலப் பின்பாட்டுக்காரருக்கு வேலை கொடுப்பதில்லை?" என்று கேட்பார்கள்.

அவர் சாமாத்தியமாக விடை சொல்லிவிடுவார்; "அவர் உடம்பு மிகவும் பலவீனமானது; ஆளைப் பார்த்

தாலே தெரியவில்லையா? சிலநாள் இங்கே உற்சாகமாகப் பாடிவிட்டு வீட்டுக்குப் போய்ச் சிரமப்படுகிறார். என்னை விடப் பெரியவர் அவர். அவரைப் பின்பாட்டாக வைத்துக் கொண்டதே முறையற்ற காரியம். அதோடு அளவுக்கு மிஞ்சி வேலை வேறு வாங்குவதா? ஆனால் ஒன்று; வேலை குறைந்ததனால் சம்மானம் ஒன்றும் குறைப்பதில்லை' என்று விடை கூறுவார்.

கேள்வி கேட்டவர் அறிவாளியாக இருந்தால், பாகவதருடைய மன வேறுபாட்டை அதிலிருந்து உணர்ந்து கொள்வார். அதைத் தெரிந்துகொள்ள முடியாதவர்கள் பின்பாட்டுக்காரரிடம் போய், "உங்களுக்கு உடம்பு சரியில்லையாமே! அதனால்தான் நீங்கள் இப்போதெல்லாம் அதிகமாகப் பாடுவதில்லையாம், என்ன கோளாறு?" என்று பரிவோடு விசாரிப்பார்கள்.

அவர், "எனக்கு என்ன உடம்பு? ஒன்றும் இல்லையே!' என்பார்.

"பின் ஏன் அதிகமாகப் பாடுகிறதில்லை?" என்றால், "கதைப் பாகம் அதிகமாக இருக்கும்போது அதைச் சொல்லாமல் பாட்டை வளர்த்தலாமா?" என்று இங்கிதமாகச் சொல்லுவார். அவருக்குப் பாகவதரின் மனத்தாங்கலும் பொறுமையும் தெளிவாகப் புலப்பட்டன.

சுவை கண்டவர்கள் சில சமயங்களில் பாகவதரிடம், பின்பாட்டுக்காரருக்கு இன்னும் அதிக நேரம் கொடுக்க வேண்டும் என்று தனியே சொல்வார்கள். அவர்களிடம், அப்படியே செய்கிறேன் என்று சொல்வார் பாகவதர்; ஆனால் கொடுப்பதில்லை. அதோடு மற்றொரு காரியமும் செய்யத் தொடங்கினார். கதைக்கு நடுவில் சங்கீதக் கச்சேரியைப் பற்றிச் சிறிது இழிவாகப் பேசுவார். அப்படிச் சொல்வதை, நயமாக வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவது போலச் சொல்வார். "கதா காலக்ஷேபங்களுக்குப் பக்தி பாவம் ஜீவன். மற்றவையெல்லாம் அங்கங்கள். சங்கீதம்

ஒரு கை. கை மாத்திரம் நீண்டால் விகாரமாகப் போய் விடும். எவ்வளவுதான் பாட்டுப் பாடினுலும் பகவா னுடைய புகழைப் பாடாவிட்டால் அந்தச் சங்கீதம் வீண்'' என்று சொல்வார். "வெறும் சங்கீதம் உயிர் இல்லாத உடம்பு'' என்ற கருத்தை எப்படியாவது பேச்சினிடையே நுழைப்பார். இவை யாவும் பின்பாட்டுக்காரரிடம் அவ ருக்கு வளர்ந்து வந்த பொறுமைக் கனலின் புகைச் சுருள்கள்; புகைந்து கொண்டிருந்ததே ஒழியத் தீக் கொழுந்தாக வெளிப்படவில்லை.

பாகவதருடைய இயல்பு மாறிவிட்டதைக் கோவிந்த ராவ் கண்டார். இனிமேல் அவருடன் இருப்பது சரியன்று என்ற எண்ணம் அவருக்கு வந்தது. ஆனுலும் திடீரென்று பாகவதரைப் பிரிந்து விடுவது முறையன்று என்றும் பட்டது.

நாராயண பாகவதருக்கு ஒரு தம்பி இருந்தான். ஒரு கம்பெனியில் மாதம் எழுபது ரூபாய் வாங்கிக் கொண்டிருந் தான். அவனுக்கும் சங்கீதம் வரும். சாரீரம் பாகவதரை விட நயமாக இருக்கும். பாகவதர் அவனைத் தயார் பண்ணினர். அடிக்கடி கதைக்கு வரச் சொன்னர். சில நாள் அவனையும் பின்பாட்டுப் பாடச் சொன்னர். வெளி யூர்களுக்கு ஒரு நாள் மட்டும் போய் வருவதாக இருந் தால் அவனை மாத்திரம் அழைத்துச் சென்றர். பாகவதர் தம்மை விலக்க ஏற்பாடு செய்துவருவது இப்போது தெளி வாகத் தெரிந்தது பின்பாட்டுக்காரருக்கு.

ஒரு நாள் அவரே இந்த வீக்கத்தைக் கீறிவிட்டார்; இங்கிதமாகத்தான். "நான் எங்கள் ஊருக்குப் போய்ச் சில காலம் இருந்து வரலாம் என்று நினைக்கிறேன். அங்கே என் தம்பி தாயார் இருக்கிறர்கள். கொஞ்சம் முன் னேர்கள் சொத்தும் இருக்கிறது. அதை ஒழுங்குபடுத்த வேண்டும். குடும்ப விஷயத்தில் எனக்குக் கவனம் இல்லை என்ற குறையைப் போக்கிக் கொள்ள வேண்டும்'' என்றர்.

"அப்படியா? இதை முன்பே சொல்லி யிருக்கக் கூடாதோ?" என்றார் நாராயண பாகவதர்.

"உங்களுக்கு உதவியாக இப்போது உங்கள் தம்பி வந்துவிட்டான். அவன் சங்கீதம் நன்றாக இருக்கிறது. அவனைக் கண்ட பிறகுதான் நெடுநாளாக இருந்த இந்தக் குறையைத் தீர்த்துக்கொள்ள முன்வந்தேன்."

"அது சரி. எனக்குக்கூட மனசில் ஒரு சிறிய சங்கோசம். நீங்கள் வயசில் பெரியவர்கள். நான் சின்னவன். உங்களைப் பின்பாட்டுக்காரராக வைத்து வேலை வாங்குகிறேனே என்று மனத்துக்குள் வருத்தம் இருந்தது. என் தம்பி எப்படியோ காரியத்தை ஒப்பேற்றி விடுகிறான். மற்றொரு கருத்தை அந்தரங்கமாகச் சொல்கிறேன். உங்கள் சங்கீதம் அபாரமானது. கதைக்கு அங்கமாக அதன் நிழலிலே அது ஒளிந்து வளர்வதை விடச் சுதந்தரமாக வெளி வந்தால் அது பிரகாசம் அடையும். உங்களுக்கும் லாபம் உண்டு. நீங்கள் சங்கீதக் கச்சேரியே செய்யலாம்" என்றார் பாகவதர்.

"நான் அப்படி நினைக்கவில்லை. உங்களுடன் இருந்ததால் எவ்வளவோ புண்ணிய சரித்திரங்களைக் கேட்டேன். பக்தியின் பெருமையை உணர்ந்தேன். பகவத் குணங்களைச் சொல்லும் பாட்டைப் பாடும் சந்தர்ப்பம் கிடைத்தது—" இப்படிச் சொல்கையில் அவர் உண்மையாகவே உணர்ச்சி வசப்பட்டார்.

"சரி, பகவான் உங்களுக்குச் சௌக்கியத்தைக் கொடுக்கட்டும். போய் வாருங்கள்" என்று பாகவதர் உத்தரவு கொடுத்தார். இரு நூறு ரூபாயை வெற்றிலை பாக்குப் பழத்தோடு வைத்து வழங்கினார்.

"உங்களிடம் எவ்வளவோ வாங்கிக் கொண்டிருக்கிறேன். அது போதும். இது வேறு எதற்கு?"

"இல்லை, இல்லை. இவ்வளவு நாள் பழகி விட்டுப் பிரிகிறீர்கள். என் அன்பின் அடையாளம் இது."

கோவிந்த ராவ் தாம்பூலம் பெற்றுக் கொண்டு பிரிந்தார்.

★

"கோவிந்த ராவுக்கும் கோபாலனுக்கும் அஜகஜாந் தரம். அவருடைய சங்கீதம் எங்கே, இவனுடையது எங்கே? சிங்கம் இருந்து முழங்கிய இடத்தில் மூஞ்சூறு கீச்சுக் கீச்சென்று கத்துகிற மாதிரியல்லவா இருக்கிறது?" என்று மக்கள் பேசத் தொடங்கினார்கள். பாகவதருக்கே ஒரு கை ஒடிந்தது போலாகி விட்டது. 'போகும்போது அவருடைய விலாசத்தைக் கூடக் கேட்டு வைத்துக் கொள்ள வில்லையே!' என்று அங்கலாய்த்தார்.

இந்த ஆண்டும் கோவையிலிருந்து அழைப்பு வரு மென்று எதிர்பார்த்தார். அது இல்லாவிட்டால் பெங்க ளூர்க்காரர்கள் கூப்பிடுவார்கள் என்று நம்பினார். எப் படியோ, பழைய பின்பாட்டுக்காரர் இல்லை என்ற செய்தி எங்கும் பரவி விட்டது. கதா காலக்ஷேபத்தில் சங்கீதம் எப்படி உயிர் நாடியாக இருக்கிறதென்ற உண்மை பாகவதருக்கே அப்போதுதான் புலப்பட்டது. அவர் தம்பி அப்பாவி! அவன் என்ன பண்ணுவான்? தன் சக்திக்கு மீறியே சாதகம் செய்தான்; உழைத்தான்; பாடினான். உயர உயரப் பறந்தாலும் ஊர்க் குருவி பருந்தாகுமோ?

கோவிந்த ராவ் திருநெல்வேலிக்குப் போனார். அது அவர் சொந்த ஊர். அவருக்கு ஒரு தம்பி இருந்தான். சங்கீதக் குடும்பத்திலே பிறந்த வாசனையால் சங்கீதம் அவனுக்கு வந்தது. ஆனால் அதை நல்ல முறையில் விருத்தி செய்து கொள்ளாமல் விட்டு விட்டான். ஏதோ காங்கிரஸ் என்றும், காந்தி என்றும் அலைந்து கொண்டிருந்தான்; மேடையிலேறிப் பேசினான்.

கோவிந்த ராவ் ஊருக்கு வந்தவர், இனிமேல் என்ன செய்வதென்று யோசித்தார். சங்கீதக் கச்சேரி செய்யலாம்

என்று தோன்றியது. ஓரிரண்டு தேங்காய் மூடிக் கச்சேரிகள் செய்தார். சுதந்தரமாகப் பாடிப் பழக்கம் இல்லையாகையால் திருப்பித் திருப்பி அவருக்குக் கதா காலக்ஷேபப் பாணியே வந்தது. அதோடு வெறும் சங்கீதம் உயிரிழந்த பிணம் போன்றது என்று நாராயண பாகவதர் கூறியதை அவர் நம்பினார். பக்தராகிய அவருக்குக் கதா காலக்ஷேபத்துக்குப் பின்பாட்டுப் பாடுவது இல்லாவிட்டாலும், பஜனையாவது பண்ணலாம் என்று தோன்றியது. பஜனையில் பணம் வருமா? அவரே கதை பண்ணலாம். நாராயண பாகவதருக்குத் தெரிந்த அவ்வளவும் அவருக்கும் தெரியும். அவருக்குக் கூட மறந்து போய்விடும்; இவர் நன்றாக ஞாபகத்தில் வைத்திருந்தார். ஆனால் வாக்கு வல்லமை வேண்டுமே! கதைப் பகுதிகளை வருணனையுடன் உணர்ச்சியோடு எடுத்துச் சொல்லவேண்டுமே! அது அவ்வளவு எளிதாக வந்து விடுமா?

ஒரு மாதம் பாடினார்; மூன்று மாதம் பஜனை செய்தார். எதிலும் திருப்தி பிறக்கவில்லை. ஒரு நாள் அவருக்குத் திடீரென்று ஒரு யோசனை தோன்றியது. அவருடைய தாய் அவரிடம் அவர் தம்பியைப் பற்றிக் குறைப்பட்டுக் கொண்ட போதுதான் அந்த யோசனை உதயமாயிற்று. "உன் தம்பி எப்போதும் ஊர் ஊராகத் திரிந்து கொண்டிருக்கிறான். இப்போது டிராமாவிலே சேர்வதற்காக ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறானாம். காதில் விழுகிறது" என்றாள்.

"அவன் ஏதாவது சங்கீத சாதகம் செய்கிறானா, இல்லையா?" என்று கேட்டார்.

"இங்கே வந்து தங்கும்போதெல்லாம் ஏதோ கத்துகிறான். பாடுகிறான். அந்தப் பாட்டுப் பைத்தியந்தான் நாடகத்திற்கு இழுக்கிறதோ, என்னவோ!"

இரண்டு நாள் கழித்து ரங்கநாதன் - அவர் தம்பி - வந்தான்; அவர் சொல்லியனுப்பி யிருந்தார். அவர் அவ

னிடம் ஓர் யோசனை கூறினார். அவன் மிகவும் உற்சாகத்தோடு ஒப்புக்கொண்டான். "நீ கதா காலக்ஷேபம் செய்யக் கற்றுக் கொள்ளுகிறாயா? நான் சொல்லித் தருகிறேன்" என்றார். அதைக் கேட்டபோது அவனுக்கு உண்டான மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை. காங்கிரஸில் அவனுக்குப் பிடிப்பு விட்டுக்கொண்டு வந்தது. மேடையேறிப் பேசக் கற்றுக் கொண்டிருந்தான். பாடவும் தெரியும். ஆகவே, தனக்கு ஏற்ற கலை அது என்பதை அவன் உணர்ந்து, தன் தலைவரிடம் பயிற்சி பெறத் தொடங்கினான்.

கோவிந்த ராவுக்கு நாற்பது கதைகளுக்கு உருப்படிகளும், நிரூபணமும் பாடம். தாமாக மேடை மீதேறிக் கதை பண்ண வராதே யொழிய, வக்கணை யெல்லாம் நன்றாகத் தெரியும். ரங்கநாதனுக்குப் பேச்சுக் கலையில் பயிற்சி உண்டு. ஆகவே, கோவிந்த ராவ் சொல்லி வைத்தவற்றை ஆசையோடு கற்றுக்கொண்டான் ரங்கன். மூன்று மாதப் பயிற்சிக்குப் பிறகு உள்ளூரிலே ஒரு கதா காலக்ஷேபம் நடத்தினான். கோவிந்த ராவே பின்பாட்டு. கதை சொல்வது முன்பின் இருந்தாலும், கோவிந்த ராவ் சங்கீதம் அந்தக் குறை தோன்றாமல் அதை அற்புதமாகச் செய்து விட்டது.

★

நாளடைவில் ரங்கன் நன்றாகவே கதை செய்யத் தெரிந்துகொண்டு விட்டான். கோவிந்த ராவ் சென்னையை விட்டு வந்து இரண்டாவது ஆண்டில் அவர் தம்பியின் காலக்ஷேபங்களுக்குப் புகழ் உண்டாகச் செய்துவிட்டார். ரங்கன் ரங்கநாத பாகவதராகி விட்டான்.

புகழ் வளர்ந்தது. சென்னையிலும், கோவையிலும் பிற இடங்களிலும் கோவிந்த ராவ் பாட்டை முன்பு கேட்டவர்கள் இந்தப் புதிய கோஷ்டியை அழைக்கலானார்கள். ஆனால் கோவிந்த ராவ் சென்னைக்குப் போகச் சம்மதிக்க

வில்லை. நாராயண பாகவதர் எந்த ஊரிலாவது கதை பண்ணினால் அங்கே அவர் இருக்கும்போது இவர் போவ தில்லை. ஆகவே இரண்டு பேரும் சந்திக்கவோ, சண்டை போடவோ, சமாதானம் செய்து கொள்ளவோ இடம் இல்லாமற் போயிற்று.

நாராயண பாகவதருக்கு வரும்படி குறைந்தது. அவர் தம்பியின் பின்பாட்டுச் சுகப்படவில்லை. அவன் பாட்டைக் கேட்டவர்களெல்லாம் கோவிந்த ராவை நினைத்துக் கொண் டார்கள். அந்த நினைவு வந்துவிட்டால் அவன் பாட்டுச் சுவைக்குமா? வரவர நாராயண பாகவதருக்கே தாம் செய்த தவறு புலப்பட்டது. பொறுமையால் தாம் இழந் ததை மீண்டும் பெற வழியில்லாமல் திண்டாடினார்.

ரங்கநாதனுடைய புகழ் அவர் காதில் விழுந்தது. கோவிந்தராவ் பின்பாட்டுப் பாடுகிறார் என்பதையும், கதை பண்ணுபவர் அவர் தம்பி என்பதையும் தெரிந்து கொண்டார். 'நான் என் தம்பியைப் பிடித்துக் கொண் டேன். அவரும் தம் தம்பியைப் பிடித்துக் கொண்டாரா? அவர் யாரைப் பிடித்துக் கொண்டாலும் அவர்களை முன் னுக்குக் கொண்டு வந்து விடுவார்' என்று அவர் மனம் எண்ணியது.

பல இடங்களில் விசேஷ காலங்களில் ரங்கனுக்கு அழைப்புக் கிடைத்தது; கதை பண்ணிய பிறகு புகழ் கிடைத்தது; பரிசு கிடைத்தது. அவ்வளவையும் அவன் தன் தமையனார் கையில் கொடுத்து வாங்கிக் கொண்டான். அவர் பின்பாட்டுக்காரராக இருந்தாலும் அவருக்கு அவன் தகப்பனாரைப்போல மரியாதை காட்டினான்.

ரங்கநாதன் புகழ் நாராயண பாகவதருக்கு அதிகமாக எட்டியது. என்ன காரணத்தாலோ அவர்கள் சென்னைக்கு வர விருப்பப்படவில்லை என்பதையும் தெரிந்துகொண்டார். கோவிந்தராவுடைய இனிய இசையைக் கேட்காமல் அவர் காது வெறிச்சென் றிருந்தது. இப்போது அவருடைய

உள்ளமே வெறிச்சிட்டுப் போயிற்று. எப்படியாவது மறைவில் சென்று அவர்கள் காலக்ஷேபத்தைக் கேட்க வேண்டும் என்று எண்ணினார்.

★

சேலத்தில் ரங்கநாதனுடைய காலக்ஷேபம். நான்கு நாள் நான்கு கதைகள். நாராயண பாகவர் நாமக்கல்லில் கதை பண்ணிக் கொண்டிருந்தார். அதை முடித்துக் கொண்டு உதவியாளர்களை நேரே சென்னைக்குப் போகும் படி சொல்லிவிட்டுத் தாம் மட்டும் சேலம் போனார். அவருக்கு உறவினர் ஒருவர் அவ்வூரில் இருந்தார். அவர் வீட்டுக்குப் போனார். தலைப்பாகை, சட்டை ஆகியவற்றை அவரிடம் பெற்று அவற்றை அணிந்து கொண்டார். ஒருவரும் தம்மைத் தெரிந்து கொள்ளாதபடி, ரங்கநாத பாகவதர் கதையைக் கேட்க வேண்டும் என்ற தம் எண்ணத்தை அவரிடம் சொல்லி, அவரையும் அழைத்துக் கொண்டு போனார். யார் கண்ணிலும் தெரியாதபடி ஒரு மூலையில் அமர்ந்து கொண்டார்.

கதை தொடங்கியது. முன்னாலே ஆகவேண்டிய தோத்திரங்களெல்லாம் ஆயின. கோவிந்த ராவுடைய குரல் கணகணவென்று ஒலித்தது. அந்த ஒலி காதில் விழுந்தபோது நாராயண பாகவதருக்கு உடம்பு புல்லரித்தது. கண்ணெடுத்து அவரைப் பார்க்கக் கூசினார். தம் முகத்தைக் காட்டவும் அச்சம்.

"ஆதௌ கீர்த்தனாரம்பத்திலே சாதுக்களைப் பார்த்து, மஹரிஷி சொல்ல ஆரம்பித்தார்" என்று பாகவதர் சொல்லும்போது அந்த வார்த்தைகளுக்குப் பின்னணியாக வண்டின் ரீங்காரம் போலக் கோவிந்த ராவ் குரலை இழைத்துக் கொண்டிருந்தார். அன்று வள்ளி கல்யாணம். திருப்புகழும் தமிழ்ப் பாட்டுகளும் அங்குள்ளவர்கள் உள்ளத்தை அள்ளின; அலைபாயச் செய்தன. நாராயண

பாகவதர் கோவிந்தராவுடைய பாட்டிலே லயித்துப் போய்விட்டார்.

கதை முடிந்தது. அன்று கடைசி நாள். நன்றி கூறிவிட்டுத் தாம்பாளம் நிறையப் பணத்தையும் மலர் மாலையையும் ஏந்திக் கொண்டு வந்த சபைக் காரியதரிசி ரங்கநாதன் முன் நின்றார். அவன் சற்றே நகர்ந்து கொண்டு, "அண்ணா!" என்று அன்போடு அழைத்தான். கோவிந்த ராவ் அருகில் அமர்ந்தார். ரங்கநாதனிடம் தாம்பளத்தைக் காரியதரிசி கொடுத்தார். அதை வாங்கிக் கொண்ட அவன் எழுந்து நின்று அதைத் தன் தமையனாரிடம் அளித்து, அந்த மேடையிலே சாஷ்டாங்கமாக அவரை வணங்கினான். "ஆ, என்ன பக்தி! இது தகும்!" என்று அங்குள்ளவர்கள் சொல்லி உருகினார்கள்.

ரங்கநாதன் வணங்கி எழுந்த மறு கணத்தில் யாரோ கூட்டத்திலிருந்து ஓடி வந்தார். கோவிந்த ராவ் காலில் விழுந்தார். எழுந்து நின்று, "இந்தத் தம்பிக்கும் ஆசீர்வாதம் செய்ய வேண்டும்!" என்று கண்ணீர் ஊற்றெடுக்க நின்றார் அவர்.

கோவிந்த ராவ் ஏறெடுத்துப் பார்த்தார். யார் இவர்?

"பாகவதர் அவர்களா!" என்று ஆச்சரியத்தால் கூவினார்.

"உங்கள் மற்றொரு தம்பி நாராயணன். பாகவதரும் அல்ல; அவர்களும் அல்ல. உங்கள் முன்பு நான் வெறும் நாராயணன்தான்" என்று நாத் தழுதழுக்கச் சொன்னார்.

அவசரத்தில் அவர் கழற்றி எறிந்த தலைப்பாகையையும் சட்டையையும் எடுத்துக் கொண்டு அங்கே வந்த உறவினர் ஒன்றும் தெரியாமல் விழித்தார்.

"என்ன இது? ஏன் இப்படிச் செய்ய வேண்டும்? முன்னாலே தெரிவித்திருக்கக் கூடாதா?" என்றார் கோவிந்தராவ்.

ஒரே ஆரவாரம். இரண்டு பேரையும் ஒருங்கே பார்த்த பழைய அன்பர்கள் ஆனந்தக் கடலில் துளையமிட்டார்கள்.

கோவிந்த ராவ் கோஷ்டியுடன் நாராயண பாகவதர் அவர்கள் தங்கியிருக்கும் இடத்துக்குப் போனார். அங்கே மறுபடியும் அவர் கோவிந்தர் காலில் விழுந்தார். "என்ன இது? நீங்கள் என்னை அபசாரத்துக்கு உள்ளாக்குகிறீர்களே!" என்று கோவிந்தர் பின்னே நகர்ந்தார்.

"ஜீவரத்தினத்தை இழந்த நாகம்போல நான் தத்தளிக்கிறேன். ரத்தினம் இல்லா விட்டால் பாம்பினிடம் நஞ்சுதான் மிஞ்சும். உங்கள் பெருமையை அறியாத பாவி நான். என்னை மன்னித்து உங்கள் தம்பியைப் பாதுகாப்பதுபோல என்னையும் காப்பாற்ற வேண்டும்" என்று அழுதார் நாராயண பாகவதர்.

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?"

"நான் செய்த பாவங்களுக்குக்கெல்லாம் பிராயச்சித்தம் செய்து கொள்ள வேண்டும். மறுபடியும் உங்களுடைய கானத்தால் என்னுடைய கதைகளுக்கு மெருகு ஊட்ட வேண்டும். இனிமேல் எள்ளளவும் எனக்கு அகங்காரம் வராது. உங்கள் தம்பி எப்படி உங்களுக்கு மரியாதை பண்ணுகிறாரோ அப்படியே நானும் செய்யத் தீர்மானித்து விட்டேன்."

இருவரும் மனம் கலந்து பேசினார்கள். மறுபடியும் கோவிந்த ராவும் நாராயண பாக்வதரும் சேர்ந்து கதா காலக்ஷேபம் பண்ணுவது என்று தீர்மானம் ஆயிற்று, கங்கையும் யமுனையும் கலந்தது போல இருந்தது அந்தக் காட்சி. முதல் கதையைச் சேலத்திலேயே ஏற்பாடு செய்தார்கள். இந்த இரண்டு பேரும் கூடி விட்ட செய்தி ரசிகர்கள் உள்ளத்தில் என்றும் இல்லாத இன்பக் கிளர்ச்சியை உண்டாக்கி விட்டது. சென்னையிலிருந்து நாராயண பாகவதருடைய தம்பியை வருவித்தார்கள்.

பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ? அன்று நடந்த காலக்ஷேபம் தெய்விக அருள் விளையாடலாகவே இருந்தது. கிடைத்தற்கரிய மாணிக்கத்தைப் பெற்று விட்

டோம் என்ற கருத்தால் நாராயண பாகவதர் புதிய ஊக்கம் பெற்றார். இறைவன் இப்படி ஓர் இணைப்பை உண்டு பண்ணினானே என்ற நினைவிலே கோவிந்த ராவும் உற்சாகம் அடைந்தார்.

கதை முடிந்தவுடன், முதல் மாலையைக் கோவிந்த ராவுக்குத்தான் போட வேண்டுமென்று நாராயண பாகவதர் வற்புறுத்தினார். சம்மானத்தையும் அவரே பெற்றுக் கொள்ள வேண்டும் என்று இரந்து வேண்டினார். "இந்தச் சம்பிரதாயம் இன்று முதல் என்றும் நடை பெறும்படி அநுக்கிரகம் பண்ணவேண்டும்" என்று சொல்லி, மேடை மீதிருந்தபடியே நாராயண பாகவதர் கோவிந்தராவை வணங்கினார். அப்போது கோவிந்தராவும் வணங்க எழுந்தபோது நாராயண பாகவதர், "நான் உங்கள் தம்பி யென்பதை நீங்கள் ஒப்புக்கொள்வதாக இருந்தால், நீங்கள் அப்படியே எழுந்தருளி யிருக்கவேண்டும்" என்று அனபினால் விலங்கிட்டு விட்டார். அதற்குமேல் கோவிந்த ராவ் என்ன செய்வார்!

உடனே கோவிந்தராவ் ஒருவார்த்தை சொல்லத் தொடங்கினார். "சபையோர்களே, ஈசுவர கிருபையால் நான் என் மற்றொரு தம்பியுடன் சேர்ந்துகொண்டேன். இதோடு நாளைக்கும் இங்கே கதை நடைபெறும். ரங்கநாதன் கதை; கோபாலன் பின்பாட்டு" என்று அறிவித்தார். இதைக் கனவிலும் எதிர்பார்க்கவில்லை நாராயண பாகவதர். அவர் வியப்பில் மூழ்கியவராய்த் தம் தம்பியைப் பார்த்தார். அருகில் இருந்த கோபாலன் வந்து கோவிந்த ராவை வணங்கினான். அவர், "நீயும் என் தம்பியும் சேர்ந்து கதாகாலக்ஷேபம் தொடர்ந்து நடத்துங்கள்" என்று கூறியபோது நாராயண பாகவதர் மூர்ச்சை போட்டு விழாக்குறை; அப்படியே பிரமித்து நின்றார். 'அருளே வடிவமோ இவர்!' என்று அவர் உள்ளம் உருகியது.

# துறவிலும் துறவு

''இந்தப் புதுச் சாமியார் வந்தாலும் வந்தார்; இந்த இடத்துக்குத் தனிக் களை ஏற்பட்டு விட்டது. அடே யப்பா! எத்தனை ஜனங்கள்! என்ன கூட்டம்! இதற்கு முன் இங்கே ஈ, காக்கை வரக்கூட யோசனை பண்ணுமே! பெரிய சாமியார் லேசிலே ஆளை உள்ளே விடுவாரா?''

''பெரிய சாமியாருக்கு எத்தனையோ சிடப் பிள்ளைகள் வந்தார்கள். ஆனால், இந்தச் சாமியாரைப்போலக் கெட்டிக் காரர் யாரும் இல்லை. நம் சங்கரானந்தர் இருக்கிறாரே; அவர் நன்றாக உழைப்பார். குழந்தையிலிருந்தே இந்த ஆசிரமத்துக்கு வந்து இப்போது சாமியாராகி விட்டார். பெரிய சாமியாருக்கு வேண்டியது இன்னது என்று அவ ருக்குத் தெரிந்ததுபோல யாருக்கும் தெரியாது. ஆனாலும் பெரியவருடைய மகிமையை இப்போது எல்லாரும் தெரிந்து கொண்டதுபோல முன்னாலே இல்லை. இந்தச் புதுச் சாமியார் நிர்மலானந்தர் செய்கிறது கெட்டிக்காரத் தனமாகத்தான் இருக்கிறது.''

''பாரேன், முன்னே எல்லாம் ஜயந்தி என்று நடக்கும். யாரோ இரண்டு மூன்று பேர் எங்கேயிருந்தோ வந்து விட்டுப் போவார்கள். யாரோ ஒரு பணக்காரப் பிராமணர் சேலத்திலிருந்து காரில் வருவார்; அபிஷேகமோ, பூசையோ செய்துகொண்டு சாயந்தரமே போய்விடுவார். அவ்வளவுதான். இப்போது எத்தனை கார்கள்! எத்தனை வாத்தியம்! வேத கோஷம் ஒரு பக்கம்; தேவாரம் ஒரு பக்கம்; பிரசங்கம் ஒரு பக்கம்.''

''அதெல்லாம் இருக்கட்டும்; சாப்பாட்டைச் சொல். எத்தனை பேருக்குச் சாப்பாடு! இதற்குமுன் சாமியாரை

ஏனென்று எட்டிப் பார்க்காத இந்த ஊர்ப் பணக் காரர்கள், இப்போது இங்கேயே பாளையம் போட்டு விட்டார்கள். சாப்பாட்டு ருசி, பாட்டு ருசி இரண்டும் அவர்களை அப்படி ஆக்கிவிட்டன."

பொது மக்களின் விமரிசனத்துக்குப் பாத்திரமான இடம், சேந்தமங்கலம் என்ற ஊருக்கு மேற்கே உள்ள சிறு குன்று. அதற்குத் தத்தகிரி என்று பெயர். அதில் ஒரு குகை. அதில் ஒரு துறவி இருந்து வந்தார். தண்ணீரில்லாக் காடாகிய அந்தப் பகுதியில் அவருடைய ஆசிரமத்தில் உள்ள கிணற்றில் மாத்திரம் எப்போதும் தண்ணீர் இருந்துகொண்டே இருக்கும். ஊருக்கும் அந்த இடத்துக்கும் ஒரு மைல். துறவி பழுத்த ஞானி. சுயம் பிரகாசர் என்பது அவர் திருநாமம். அவர் எங்கும் வெளியே வருகிறதில்லை.

அந்த ஊருக்கு அவர் வந்த புதிதில் அவரிடம் ஊர்க் காரரில் சிலர் ஈடுபட்டார்கள். ஏதோ சில நிலம் அந்தக் குகாசிரமத்துக்கு எழுதி வைத்தார்கள். அதைப் பரா மரிக்கச் சில தர்மகர்த்தர்கள் இருந்தார்கள். அவர்கள் அவ்வப்போது சுவாமிகளுக்கு வேண்டியதைச் செய்து வந்தார்கள். யாரோ ஒரு சமையல்காரனைப் போட்டு, அவருக்கு ஒருவேளை பிட்சை பண்ணிப் போட வழி செய்திருந்தார்கள்.

சுவாமிகளைப் பார்க்க எங்கெங்கிருந்தோ ஜனங்கள் வருவார்கள். பாதி நாள், வருகிறவர்களைச் சுவாமிகள் பார்க்காமலே அனுப்பி விடுவார்; "இங்கே என்ன வேலை? எங்காவது கோயில் குளத்துக்குப் போகச்சொல்" என்று சொல்லி அனுப்பிவிடுவார்.

அவரிடம் சங்கரானந்தர் வந்து சேர்ந்தார். இளம் பிள்ளையாக, பிரமசாரியாக வந்தபோது சீடராக வர வில்லை. சுவாமிக்குச் சமையல் பண்ணிப் பிட்சை போடத் தான் அவரை அமர்த்தினார்கள். அவருடைய பாக்கியம்,

நாளடைவில் சுவாமிகளுடைய அருட்பார்வை அவர் மேல் விழுந்தது. சாஸ்திரங்களைப் படித்துக்கொண்டார். உபதேசம் பெற்ருர். துறவியாகி விட்டார். இப்போது வேறு ஒரு சமையல்காரன் வந்துவிட்டான்.

சுவாமிகளிடம் சங்கரானந்தர் வந்த பிறகு, சுவாமிகளைப் பார்க்க வருகிறவர்களுக்கு ஒரு செளகரியம் கிடைத்தது. அவர் மூலமாகச் சுயம்பிரகாசச் சுவாமிகளைப் பார்க்க முயல்வார்கள். சுவாமிகளுக்கு யாரையும் பார்க்க விருப்பமில்லாவிட்டால், வந்தவர்களை ஒரு நாள் இரண்டு நாள் இருக்கச் சொல்வார் சீடர். குருநாதரிடம் இங்கிதமாகப் பேசிக் கருணை சுரக்கச் செய்து, அவர்களுக்குத் தரிசனம் செய்து வைப்பார்.

நாளாக ஆக, வேறு சிலரும் சுவாமிகளுக்குச் சீடர்கள் ஆனூர்கள். ஓரிருவர் அவருடன் தங்கினூர்கள். மற்றவர்கள் உபதேசம் வாங்கிக்கொண்டு வெவ்வேறு ஊர்களில் இருந்தார்கள். தத்தாத்திரேய ஜயந்தி நடக்கும்போது ஆண்டுக்கு ஒரு முறை தரிசனம் செய்துகொண்டு போவார்கள். உடன் இருந்தவர்களில் சங்கரானந்தரைத் தவிர, மற்றவர்களெல்லாம் சேந்தமங்கலத்துக்குள் சென்று பிட்சை வாங்கிச் சாப்பிட்டார்கள். சுவாமிகளுக்குப் பிட்சை ஆன பின்பு எஞ்சினதைச் சங்கரானந்தர் உண்டு வந்தார்.

இப்படி நடந்துகொண்டு வரும்போதுதான் நிர்மலானந்தர் வந்தார். அவர் இங்கே வரும்போது நிர்மலானந்தராகவில்லை; குப்புசாமியாக இருந்தார். கன்னியாகுமரிக்கு அருகில் பிறந்தவர் அவர். நன்ருக வாசித்தவர். வடமொழியில் நிபுணர். வேதாந்த நூல்களைக் கற்றவர். கொஞ்ச நாள் காந்தீய வாதிகளுடன் திரிந்தவர். அரசியல் விஷயத்தில் அவருக்குக் கொஞ்சம் நாட்டம் இருந்தது. குடும்பத்தோடு வாழ்ந்து வந்தார். இளம்பிராயந்தான். ஆனுலும் வைராக்கியம் பிறந்து, சட்டி சுட்டது

கை விட்டதென்றபடி குடும்பத்தைத் துறந்து வந்து விட்டார். நல்ல குருநாதன் எங்கே இருக்கிறான் என்று தேடிக்கொண்டு ஊரூராக அலைந்தார். எந்த எந்தச் சாமி யாரையோ பார்த்தார். எங்கேயும் அவர் மனம் மேவ வில்லை. வெறும் சாஸ்திரப் பித்தர்களையும், அறி யாமையை மௌனத்தால் மறைப்பவர்களையும், வாசாலகர் களையும், மக்களைக் கையில் போட்டுக்கொண்டு படா டோபம் பண்ணுகிறவர்களையும், சித்தென்றும் அற்புத மென்றும் சொல்லி ஏமாற்றுபவர்களையும் கண்டுகண்டு அலுத்துப் போனார்.

கடைசியில் இங்கே வந்தார். ருணருணீபாவம் என்று சொல்வார்கள். அப்படி இந்தச் சுவாமிகளிடம் அவர் உபதேசம் பெற வேண்டுமென்று கடவுள் விதித்திருக்கும் போது, அது தப்புமா? வந்து தரிசித்தபோதே, சுவாமி களுடைய வைராக்கியம் அவருக்குத் தெளிவாகத் தெரிந்தது. முகத்திலும் கண்ணிலும் இருந்த ஒளியைக் கண்டு அடிமையாகி விட்டார். நெடுஞ்சாண் கிடையாகக் காலில் விழுந்து அழுது, "என்னைக் கரையேற்ற வேண்டும்" என்றார்.

சுவாமிகள், "குடும்பத்தில் வாழ்ந்த உனக்குச் சபல சித்தம் போய்விட்டதா?" என்று கேட்டார்.

"போய் விட்டதாகவே நினைக்கிறேன். குருநாத ருடைய திருவருள் இருந்தால், இந்தப் பாவி உய்ந்து விடலாம் என்ற நம்பிக்கை இருக்கிறது."

"அப்படியானால் உன்னைச் சோதிக்கலாமா?"

"தேவரீருடைய திருவுள்ளம்."

"உனக்குச் சரீராபிமானம் இல்லையென்றால், எங்கே உன் ஆடையை அவிழ்த்து எறி, பார்க்கலாம்" என்று உத்தர விட்டார் சுவாமிகள்.

என்ன ஆச்சரியம்! வந்தவர் சிறிதும் யோசிக்காமல் உடனே மேல் துண்டை வீசி எறிந்தார்; அரையில் இருந்த

ஆடையையும் அவிழ்த்து எறிந்துவிட்டுக் குழந்தைபோல நின்றார்.

அதற்கு மேல் குருநாதர் தாமதம் செய்யவில்லை. உடனே ஒரு காவி ஆடையை எடுத்து, அவர் கையில் கொடுத்து விட்டார். அதுமுதல் அந்தக் குகாசிரமத்தில் நிர்மலானந்தர் என்ற தீட்சா நாமத்துடன் அவர் இருக்கலானார்.

★

வந்து ஒரு வருஷம் ஆயிற்று. நிர்மலானந்தர் ஊருக்குள் போய் வந்தார். அவருக்கு ஒரு வருத்தம். உலகத்தில் எங்கும் காணக் கிடைக்காத இந்த மகாஞானியைச் சரியாக உலகம் பயன்படுத்திக் கொள்ளவில்லையே என்ற எண்ணம். இதை அடிக்கடி சங்கரானந்தரிடம் வெளியிட்டு வருவார்.

ஒரு நாள் பெரிய சுவாமிகளிடமே சொல்லத் தொடங்கினார்: "தாயுமானவர் சொன்னமாதிரி அகண்டாகாரமான சிவபோகம் இங்கே ஏக உருவாய்க் கிடக்கிறது. ஜகத்தவர் வராமல் வீணே மாய்கிறார்கள்" என்றார்.

"உலகம் முழுவதும் ஞானம் அடைந்துவிட முடியுமா? கடவுளுடைய மாயா லீலை கண் இருந்தும் குருடர்களாக வைத்திருக்கிறது."

"பேசாத சாமிக்குக் கோயில் கட்டிப் பூஜையும் உற்சவமும் செய்கிற மனிதர்கள், பேசும் சாமி இங்கே இருப்பதைச் சிறிதும் அறியவில்லையே!" என்றார் சீடர்.

"அறியவேண்டியவர்களே அறிவார்கள். நீ இங்கே எப்படி வந்தாய்?"

"என்னைப்போல மற்றவர்களும் வந்து நன்மையை அடைய வேண்டாமா?"

"அதைப் பற்றிய கவலை நமக்கு எதற்கு? அது பகவான் படவேண்டிய கவலை."

இந்தச் சமாதானம் நிர்மலானந்தருக்குச் சரியாகப் படவில்லை. 'சுவாமிகள் அப்படித்தான் சொல்வார். நாம்

ஜனங்களுக்குக் குருநாதருடைய அருள் பயன்படும்படி செய்யவேண்டும்' என்ற எண்ணம் அவர் உள்ளத்தில் உதித்தது.

சுவாமிகளிடம் விடை பெற்றுச் சில இடங்களுக்கு யாத்திரை போனார். அங்கங்கே உள்ளவர்கள் அவருடைய தேசிலும் அறிவிலும் பேச்சிலும் மயங்கி வழிபட்டார்கள். அவர்களுக்கெல்லாம் தம்முடைய குருநாதருடைய பெருமையை எடுத்துச் சொல்லி, அவரைத் தரிசித்துக் கொள்ளும்படி சொன்னார்.

வருகிறவர்கள் கூட்டம் அதிகமாயிற்று. வந்தவர்களிற் சிலர் தம்முடன் சமையல்காரரை அழைத்து வந்து ஆசிரமத்து மடைப்பள்ளியிலேயே சமையல் செய்வித்துச் சாப்பிட்டார்கள். சிலர் சாமான்களை வாங்கிப் போட்டு, ஆசிரமத்துச் சமையல்காரனையே சமைக்கச் சொன்னார்கள். இந்த ஏற்பாடுகளில் நிர்மலானந்தர் ஈடுபட்டு, வருகிறவர்களுக்குச் சௌகரியங்களைச் செய்து கொடுத்தார். வருகிறவர்கள் அதிகமாக வேண்டும் என்று அவர் ஆசை. அதனால் அவர்களுக்கு உணவு விஷயத்தில் சிரமம் இருக்கக் கூடாது என்று இப்படியெல்லாம் செய்தார்.

சுவாமிகளுக்குக் கூட்டம் சேர்வது பிடிக்கவில்லை. "குடும்பியாயிருந்தவனை உள்ளே விட்டது பிசகு" என்று அடிக்கடி சொன்னார்; "நீ அரசியலில் ஈடுபட்டு வியாபகம் அடைய எண்ணினவன். இங்கே வந்தும் உனக்கு வியாபக ஆசை போகவில்லை" என்றார்.

"அவ்விடத்தில் அப்படி உத்தரவாகக் கூடாது. இதில் அடியேனுக்கு லாபம் ஒன்றும் இல்லையே! ஜனங்கள் நல்ல வழியிலே போகவேண்டும் என்பதுதானே மகாத்மாக்களுடைய ஆசை? அதை எண்ணியே வருகிறவர்களை வா என்று சொல்கிறேன்."

"சரி, சரி; இதுவும் ஒரு பெரிய குடும்பமாகப் போகிறது!" என்று அலுத்துக் கொள்வார் சுவாமிகள்.

"பகவானே பசு குடும்பி என்று சொல்லும்போது, அவ்விடத்தில் அவ்வாறு இருப்பதுதானே தர்மம்?"

"ஓஹோ, எனக்கே உபதேசம் செய்ய வந்து விட்டாயா?" என்று சொல்லிப் புன்னகை பூப்பார் சுவாமிகள்.

2

சுவாமிகள் கூட்டத்துக்கு அணைபோட ஒரு காரியம் செய்தார். இப்போதெல்லாம் பணம் நிறைய வந்தது. அதன் கணக்கு வழக்கெல்லாம் நிர்மலானந்தர் பொறுப்பில் இருந்தது. ஆண்டுதோறும் நடைபெறும் தத்தாத்திரேய ஜயந்தியில் பெருங் கூட்டம் கூடியது. தட்ட முடியாமல் எல்லோருக்கும் சுவாமிகள் தரிசனம் கொடுத்து வந்தார். அவருக்கு அதில் வெறுப்புத்தான். ஆனாலும் என்ன செய்வது?

கடைசியில் அந்தத் தந்திரம் செய்தார். அந்தச் சிறிய குன்றின் உச்சியில் தத்தாத்திரேயர் ஆலயம் ஒன்றை அமைக்கும்படி நிர்மலானந்தரிடம் சொன்னார். அதைக் கேட்டபோது சீடருக்கு ஆனந்தம் தாங்கவில்லை. தம் கட்சி வென்றது என்று கிளுகிளுத்தார். உடனே ஊர்ப் பிரயாணம் தொடங்கிவிட்டார். ஆறே மாதத்தில் பணம் குவிந்துவிட்டது. பிரம்மாண்டமான ஆலயம் நிர்மாண மாகியது.

சுவாமிகளுக்கு, வருகிறவர்களைத் தத்தாத்திரேயர் கோயிலுக்குத் திருப்பி விட்டுத் தாம் தனியாக இருக்கலாம் என்பது எண்ணம். கோயில் கட்டிக் கும்பாபி ஷேகம் ஆயிற்று. அதற்குப் பின் சுயம்பிரகாச சுவாமிகள் மௌனத்தில் ஆழ்ந்தார். "வருகிறவர்கள் மேலே உள்ள தத்தாத்திரேயர் ஆலயத்தைப் பார்த்துப் போனால் போதும்; இங்கே வரவேண்டாம்" என்று உத்தரவிட்டு விட்டார். அந்த உத்தரவுப்படி சங்கரானந்தர் யாரையும் குகைக்குள்ளே விடுவதில்லை.

நிர்மலானந்தருக்கு, 'சுவாமிகள் பேசாமல் மௌன மாகத்தானே இருக்கிறார்? அவரை எட்ட நின்றபடியே தரிசித்தால் என்ன?' என்று நினைப்பு.

சங்கரானந்தர், "அதெல்லாம் நமக்குத் தெரியாது. சுவாமிகள் உத்தரவு அது" என்பார்.

நிர்மலானந்தர், "சுவாமிகளுக்கும் தொந்தரவு இல்லாமல்; வருகிறவர்களுக்கும் ஏமாற்றம் இல்லாமல், ஒரு வழி செய்யலாம். அதோ அந்த ஜன்னலைத் திறந்து வைத்துவிடலாம். அதன் வழியே தூர இருந்து, நம் குருநாதரைத் தரிசித்துக்கொண்டு போய்விடட்டும்" என்று சொன்னார்; "வாசல் கதவைத் தானே திறக்கக் கூடாது? ஜன்னலைத் திறந்தால் என்ன?" என்று சமாதானம் சொன்னார். சங்கரானந்தர் அதற்கு இசைந்தார்.

தரிசனத்துக்கு வந்தவர்களில் கோயிலுக்கு ஆயிரக் கணக்கில் கொடுத்த சில செல்வர்கள் இருந்தார்கள். அவர்கள் சுவாமிகளுக்கு முன்னே விழுந்து நமஸ்காரம் செய்யவேண்டுமென்று ஆசைப்பட்டார்கள். நிர்மலானந்தர் சுவாமிகளிடமே கெஞ்சிப் பிரார்த்தித்து, அவர்களுடைய ஆசையை நிறைவேற்றினார்.

தத்தாத்திரேய ஜயந்தியன்று மகா தீபாராதனை மேலே ஆகும்போது, சுவாமிகள் எழுந்தருளி எல்லோருக்கும் தரிசனம் தரவேண்டுமென்று நிர்மலானந்தர் வேண்டிக் கொண்டார். சுவாமிகள் இணங்கினார். மற்ற நாட்களில் அவர் வெளியில் வருகிறதே இல்லை. ஆனாலும், பணக் காரர்களை நிர்மலானந்தர் உள்ளே கூட்டிக்கொண்டு போய்த் தரிசனம் செய்து வைத்தார். அருட்பசியுள்ளவர் களைச் சங்கரானந்தர் அழைத்துச் சென்றார்.

தத்தாத்திரேய ஜயந்தி வரவரப் பெரிய திருவிழா ஆகிவிட்டது. குன்றைச் சுற்றிலும் கொட்டகைகள். ஊருக்குள் உற்சவர் எழுந்தருளினார். வாத்தியக் கச்சேரி நடைபெற்றது. குன்றின் அடிவாரத்தில் வடமொழி

வித்துவான்கள் வந்து, அத்வைத சபை நடத்தினார்கள். தமிழ்ப் புலவர் வந்து சொற்பொழிவாற்றினார்கள். தத்தாத்திரேயருக்கு அபிஷேக ஆராதனைகள் அமோகமாக நடந்தன. வேதம்வல்ல விற்பன்னர்கள் பலர் வந்து வேதத்தையும் உபநிஷத்தையும் பாராயணம் செய்தார்கள். ஆயிரக்கணக்கான ஜனங்கள் கூடினார்கள். அவ்வளவு பேருக்கும் சாப்பாடு கிடைத்தது.

தத்தாத்திரேய மூர்த்திக்கு இரண்டு பூஜகர்கள் நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் சேந்தமங்கலத்தில் வசித்தார்கள்; வந்து பூஜை செய்து சென்றார்கள். சுவாமிகள் பிட்சைக்கு ஒருவர், தத்தாத்திரேயர் கோயிலுக்கு ஒருவராகப் பரிசாரகர்கள் இருவரை நியமித்தார்கள். இவர்களுக்குச் சம்பளத்துக்காக நிதி திரட்டி, அதைத் துண்டாக ஒருவரிடம் கொடுத்து வைத்தார் நிர்மலானந்தர்.

நிர்மலானந்தர் மற்றொரு காரியம் செய்தார். சுவாமிகளுடைய சரித்திரத்தைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் விரிவாக எழுதச் செய்து, ஐயாயிரம் பிரதிகள் அச்சிட்டுப் போகிற இடங்களிலெல்லாம் விநியோகித்தார். சுவாமிகள் படத்தை லட்சம் பிரதிகள் போட்டு எங்கும் பரப்பினார். தமிழ்நாட்டிலும் பிற நாட்டிலும் சுவாமிகள் புகழும் நிர்மலானந்தர் புகழும் ஓங்கின.

## 3

அந்த ஆண்டு தத்தாத்திரேய ஜயந்திக்கு இன்னும் ஒரு மாதம் இருந்தது. நிர்மலானந்தர் எங்கெங்கோ சுற்றிப் பணம் சேகரித்துக்கொண்டு வந்தார். மற்ற ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். வழக்கம்போல் ஊரிலிருந்து வந்தவர், நீராடிவிட்டுக் குருநாதருடைய முன்னிலையில் சென்று காலில் விழுந்து வணங்கித் திருநீறு வாங்கிக் கொண்டார். சுவாமிகள் அன்று சிறிது நேரம் மௌனத்தைக் கலைத்தார்;

"உன்னுடைய சம்சாரம் எந்தமட்டில் இருக்கிறது?" என்று கேட்டார்.

"அவ்விடத்துக் கருணையால் இந்த ஜயந்தி மிகச் சிறப்பாக நடைபெறும் என்று நினைக்கிறேன்" என்றார் சீடர்.

"ஒரு சந்நியாசி தன் கோவணத்தை எலி கடிக்காமல் காப்பாற்றப் பூனையை வளர்த்து, அதைக் காப்பாற்ற மாடு வளர்த்து, இப்படியே பெரிய குடும்பியான கதையைக் கேட்டிருக்கிறாயா?"

நிர்மலானந்தர் சிரித்துக் கொண்டார். "இதில் பந்தம் ஏது? ஏதோ ஜனங்கள் கூடுகிறார்கள். புண்ணியத்தைக் கட்டிக்கொண்டு போகிறார்கள்."

"அவர்கள் இங்கே விட்டுச் செல்லும் பாவத்தை யார் கட்டிக் கொள்கிறார்கள், தெரியுமா?"

"ஞானிகளுக்குப் புண்ணிய பாவ சம்பந்தம் இல்லையே!"

"ஞானிகளுக்குத்தானே? காஷாயம் தரித்த குடும்பிகளுக்கு அல்லவே!"

"அப்படியெல்லாம் உத்தரவாகக் கூடாது."

"சரி, அங்கே குடும்பியாக ஒரு குடும்பத்தில் ஈடுபட்டாய்; அந்த வாசனை உன்னை விடவில்லை. இங்கே குடும்பத்தைப் பெருக்குகிறாய்; ஈசுவர சம்மதம் எதுவோ அது நடக்கட்டும்" என்று மீண்டும் மௌனியானார்.

நிர்மலானந்தர் சிறிதே அசந்து போனார். பிறகு தைரியம் வந்துவிட்டது. 'நம் குருநாதருக்கு நம்மேல் தானே கோபம்? அதனால் வரும் பலனை நாம் அநுபவிக்கத் தயார். ஆனால், எத்தனை பேருக்கு நன்மை! ஒருவன் தன் நன்மையைப் பலியிடுவதால், ஆயிரமாயிரம் பேர் அருள் பெறும்படி இருந்தால், அது நடக்கவேண்டியதுதான்' என்று சமாதானம் செய்து கொண்டார். முன்னையினும் அதிகமாகத் தத்தாத்திரேய ஜயந்திக்கு உரிய ஏற்பாடுகளில் ஈடுபட்டுவிட்டார்.

அந்த ஆண்டு ஊரில் நல்ல மழை. எங்கும் சுபிட்சமாக இருந்தது. இது சுவாமிகளுடைய மகிமை என்ற பேச்சு எங்கும் அடிபட்டது. நிர்மலானந்தரே அதை ஓரளவு பரப்பினர். அதனல் பண வரவும் அதிகம்; ஜன வரவும் அதிகம்.

பூஜை நடந்த பிற்பாடுதான் எல்லாருக்கும் உணவு அளிப்பார்கள். மிகவும் கட்டுப்பாடாக இத்தகைய விஷயத்தில் கவனம் செலுத்தினர்கள் வைதிகர்கள். மந்திரம் சொல்பவர்கள் காபி குடிக்கக்கூடாது. பூஜை செய்கிறவர்கள் வெறும் வயிற்ருேடு இருக்கவேண்டும். யாராக இருந்தாலும் பூஜை நடந்த பிறகே உண்ணவேண்டும். தனியே சமையல் செய்து கொள்பவர்களானலும் அந்த எல்லையில் பூஜையைப் பார்த்துவிட்டுத்தான் உண்ண வேண்டும். இப்படியெல்லாம் நிபந்தனைகளை வகுத்திருந்தார், நிர்மலானந்தர். அப்போதுதான் தெய்விக சக்தி பரவும் என்பது அவர் தீர்மானம்.

பூஜை நடந்து கொண்டிருந்தது. அபிஷேகங்கள் ஆகித் தீபாராதனை நடக்கிறது. இனிமேல் அலங்காரமாகி நைவேத்தியம் ஆன பிறகு மகாதீபாராதனை நடைபெற வேண்டும்.

அப்போது ஆலயத்தில் மடைப்பள்ளிக் கருகே ஏதோ குழப்பம் உண்டாயிற்று. கூட்டம் அந்தத் திசையில் ஓடியது. "ஐயோ பாவம்! பிள்ளைத்தாய்ச்சி!" என்று சிலர் சொன்னர்கள்; "நிறை மாசம்" என்று அங்கலாய்த்தார்கள்.

"என்ன, என்ன?" என்று கேட்டுக்கொண்டே, நிர்மலானந்தர் அங்கே ஓடினர். மகாதீபாராதனைக்குச் சுவாமிகளை அழைத்துவரப் போகவேண்டும் அவர். அதற்குள் இந்த ஆரவாரம்.

மடைப்பள்ளிக்கு அருகே போனர். அங்கே யாரோ ஒரு பெண்மணி—நிறைசூலி—பேச்சுமூச் சற்றுக் கிடந்தாள்.

கூட்டம் நெரிந்தது. அதை ஒதுக்குவது பெரும்பாடாகி விட்டது. நிர்மலானந்தர் கூவினர்; வைதார்; ஒதுங்கிப் போகும்படி சத்தம் போட்டார். நாலைந்து பேர்கள் வந்து கூட்டத்தை விலக்கினர்கள்; கொஞ்சம் காற்று வந்தது. தண்ணீரை அந்தப் பெண்ணின் முகத்திலே தெளித்தார்கள். அவள் மெல்லக் கண்ணைத் திறந்தாள்; வாயைத் திறந்தாள்; ஏதோ சாடை காட்டினள். அதற்குள் நிர்மலானந்தருக்கு விஷயம் தெரிந்துவிட்டது. அவள் பசியினல் வாடிப் போனவள். அங்கே வந்தபோது, கண்ணை இருட்டி யிருக்கிறது. சாதம் கேட்டிருக்கிருள். பரிசாரகன் கொடுக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிருன். மோர் கேட்டிருக்கிருள்; அதையும் மறுத்து விட்டான். மடார் என்று மயக்கம் போட்டு விழுந்து விட்டாள்.

செய்தி தெரிந்தவுடன் கதிகலங்கிப் போனர் நிர்மலானந்தர். "கொண்டு வா மோரை; கொஞ்சம் மோரில் சாதத்தைக் கரைத்துக் கொண்டு வா" என்று கத்தினர்.

"இன்னும் நைவேத்தியம் ஆகவில்லையே!" என்று பணிவாக ஒருவர் விண்ணப்பித்துக்கொண்டார்.

"நைவேத்தியமுமாயிற்று, மண்ணுமாயிற்று; இதோ இங்கேயே நைவேத்தியம் ஆகப்போகிறது; கொண்டு வா" என்று மறுபடியும் கூவினர்.

அடுத்த நிமிஷம் அவர் கேட்டவை வந்தன. "இந்தா அம்மா, இந்த மோரைக் குடி" என்றுர், அந்தப் பெண்ணிடம். அவள் மடக்கு மடக்கென்று இரண்டு வாய் குடித்தாள். பிறகு எழுந்து உட்கார்ந்துகொண்டாள். கரைத்திருந்த மோர்ஞ் சாதத்தை அவள் கையில் கொடுத்தார். அதையும் வாங்கிக் குடித்தாள், அந்தப் பெண்மணி.

"தாயே, நீ இப்படியே ஓரமாகப் படுத்துக்கொள்" என்று சொல்லும்போது, நிர்மலானந்தருக்கு நாக்குத் தழுதழுத்தது.

"சரி; நைவேத்தியம் ஆகட்டும்; பூஜையை முடியுங்கள். சுவாமிகளை நான் அழைத்து வருகிறேன். இந்த அம்மாளிடம் நாலு பேர் நில்லுங்கள். காற்று வர இடம் விடுங்கள்" என்று சொல்லிக்கொண்டே, படியிறங்கி அவர் கீழே ஓடினார்.

சுவாமிகள் மேலே வந்தார்; மகாதீபாராதனை நடைபெற்றது. மாலையில் நடக்க வேண்டியன யாவும் நடந்தன.

கூட்டத்தினர் சுவாமிக்கு நைவேத்தியம் ஆவதற்கு முன் ஒரு பெண்மணிக்குச் சாதத்தைப் போட்டதுபற்றிப் பலவாறு பேசிக்கொண்டார்கள். வைதிகர்கள் அநுசிதம் என்றார்கள். பக்தர்கள் நிர்மலானந்தருடைய கருணையைப் பாராட்டினார்கள். வேறு பலர், "இந்தச் சமயத்தில் இந்தப் பீடை எங்கே வந்தது?" என்று அந்தப் பெண்மணியை வைதார்கள்.

அன்று உற்சவம் முடிய விடியற்காலம் மூன்று மணி ஆயிற்று. மறுநாள் நிர்மாலனந்தர் கையோடு கையாக அனுப்ப வேண்டியவர்களையெல்லாம் விரைவாக அனுப்பினார். எந்த ஆண்டும் இவ்வளவு விரைவில் அப்படிச் செய்ததில்லை.

மாலை நேரம் வந்தது. அவர் கிணற்றுக்குச் சென்று நீராடினார். திருநீற்றை உடம்பெல்லாம் பூசிக்கொண்டு குருநாதரிடம் வந்தார். வந்து கீழே விழுந்து பணிந்தவர், எழாமல் விம்மி விம்மி அழுதார். சுவாமிகள் கைச்சாடையால் என்ன என்று கேட்டதை, அவர் அறியவில்லை. அங்கே இருந்த சங்கரானந்தர், "எழுந்திரும் சுவாமி. குருநாதர் எழுந்திருக்கச் சொல்கிறார்" என்றார்.

மெல்ல எழுந்தார் அவர். இன்னும் அழுகை ஓயவில்லை. குருநாதர் புன்முறுவல் பூத்தபடியே, அவர்மேல்

பார்வையை ஓட்டினுர். "ஏன்?" என்று கையால் சைகை செய்தார்.

"எனக்குப் புத்தி வந்தது. அந்தக் குடும்பத்திலே நடந்ததுபோல இங்கும் நடந்துவிட்டது. நான் இனி உள்ளம் தூய்மை பெருமல், இந்தச் சந்நிதானத்தில் நிற்கக்கூடாது. குருநாதருடைய வாக்கை அலட்சியம் செய்த பாவியாகி விட்டேன். அதற்குப் பிராயச்சித்தம் செய்யாமல் இங்கே ஒரு கணமும் இருக்கக்கூடாது என்று என் உள்ளம் கூறுகிறது. எங்கேயாவது போய் உலகத்தையே மறந்து தனிமையில் இருந்துவிட்டு, இவ்விடத்துக் கிருபை என்னை அழைக்கும்போது வருகிறேன். இனியும் வியாபகமும் குடும்ப வாசனையும் இல்லாமல், கொண்ட கோலத்துக்கு ஏற்றபடி நடந்து, அடைய வேண்டியதை அடையும்படி இந்த அல்பனுக்குத் திருவருள் பாலிக்க வேண்டும்" என்று கதறினுர் சீடர். சுவாமிகள் புன் முறுவல் பூத்தபடியே அமைதியாகக் கேட்டார். கையை அமர்த்தினுர். பிறகு தலையை அசைத்தார்.

அங்கே சங்கரானந்தரும் மற்ருெரு சீடராகிய சிவானந்தரும் நின்று கொண்டிருந்தார்கள்.

மறுபடியும் கீழே விழுந்து பணிந்தார் நிர்மலானந்தர். குருநாதர் தந்த திருநீற்றை வாங்கி அணிந்துகொண்டார். அப்போது குருநாதர் மௌனத்தைக் கலைத்தார்.

"அப்பா, இன்றுதான் நீ உண்மைத் துறவி ஆனுய். இனி எனக்கு மௌனம் வேண்டாம். நீ அதை மேற் கொள். போய் வா" என்று அருள் சுரந்து விடை கொடுத்தார், அந்த மகாஞானி.

கையைக் குவித்துக்கொண்டு, திரும்பாமலே அப்படியே பின்னுல் நகர்ந்து வாசல்படி வரை வந்த நிர்மலானந்தர், குருநாதர் கட்டளையிட்டபடி மோனம் பூண்டுவிட்டார். தம் தோழர் இருவரையும் கையெடுத்துக் கும்பிட்டார். மெல்ல மெல்ல நிலவுலகைப் போர்த்துக்கொண்டு

பரவிய இருளூடே அவர் ஒளியைக் காணப் புறப்பட்டு விட்டார்.

சிவானந்தர் சங்கரானந்தரிடம் கேட்டார்: "அந்தக் குடும்பத்திலே நடந்ததுபோல இங்கும் நடந்துவிட்டது என்றுரே, அவர். அது என்ன?"

"அது பழைய கதை; அவருடைய பூர்வாசிரமக் கதை" என்றுர் சங்கரானந்தர்.

"அதைத் தெரிந்துகொள்ளலாமோ?"

அவர் தெரிந்துகொண்ட கதை இதுதான்.

★

நிர்மலானந்தர் ஆவதற்குமுன் அவர் குப்புசாமி என்று முன்பே நமக்குத் தெரியும் அல்லவா? அவர் இல் வாழ்வில் வாழ்ந்தபோது, அவர் மனைவிக்கும் அவருக்கும் அவ்வளவு போதாது. அவள் கெட்டவள் அல்ல; முரட்டுப் பிடிவாதம். ஏழைகளுக்கு இரங்கமாட்டாள்; சக்கரைப் பொங்கல் நிவேதனம் பண்ணி, அயல் வீட்டுக்காரருக்குக் கொண்டு போய்க் கொடுப்பாள்.

ஒரு வெள்ளிக்கிழமை யன்று அவள் மங்கலியப் பெண்களுக்கு ஆராதனை செய்தாள். சில சுமங்கலிகளை அழைத்து உணவு போட்டாள். அந்த ஆராதனையில் வரித்த பெண்மணிகள் உண்டபின்பே ஆடவர்கள் உண்பார்கள். அன்று மங்கலியப் பெண்டுகள் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

அப்போது வாசலில் யாரோ பிச்சைக்காரி வந்து, "அம்மா, சோறு!" என்று கத்தினுள். அவள் பக்கத்தில் இரண்டு மாத நோஞ்சான் குழந்தை ஒன்று நின்றுகொண்டிருந்தது. வயிற்றில் இன்ருே நாளையோ உதயமாகப் போகிற குழந்தை இருந்தது. அவள் உணவு கண்டு எவ்வளவு நாளாயிற்ருே, ஆண்டவனே அறிவான்!

வாசலில் அவள் கத்தினபோது அவள் பிராணனைக் கண்ணில் வைத்துக் கொண்டிருந்தாள். அவளைக் குப்புசாமி பார்த்தார். உள்ளே போய்த் தம் மனைவியிடம் ஏதாவது அவளுக்குப் போடச் சொன்னார்.

"இதென்ன? பூஜைவேளையில் கரடிவிட்டு ஓட்டினாற் போல்" என்று கடிந்துகொண்டாள் அவள்.

"பழையதாவது போடு" என்று சொல்லிப் பார்த்தார்.

"அதெல்லாம் இப்போது தொட முடியாது. வேறு எங்கேயாவது தொலையச் சொல்லுங்கள்" என்றாள் அம்மாள்.

"பிராணன் போய்விடும்போல இருக்கிறது" என்று கெஞ்சினார் அவர்.

"இங்கே என் பிராணனை ஏன் வாங்குகிறீர்கள்?" என்று அவள் இரைந்தாள்.

அங்கே வைத்திருந்த வாழைப்பழத்தை எடுத்துக் கொண்டு வாசலுக்கு ஓடினார். அவர் பிறகே அந்த அம்மாள் ஓடி வந்தாள். அவர் வாசலுக்கு வந்தபோது அந்த அம்மாள் அவர் கையிலிருந்த பழத்தை வெடுக்கென்று பிடுங்கிக் கொண்டாள். அதே சமயத்தில் அங்கே நின்ற பிச்சைக்காரி, தடாலென்று கீழே விழுந்து விட்டாள்.

அம்மாள், "அட கண்ணராவியே!" என்று சொல்லித் தன் கணவரையும் வெளியே நிற்கவிட்டுக் கதவைப் படாரென்று சார்த்திக்கொண்டு போய்விட்டாள்.

கணநேரம் குப்புசாமி திகைத்தார். பிறகு அடுத்த வீட்டுக்கு ஓடினார். தண்ணீரும் சோறும் வாங்கி வந்தார். பிச்சைக்காரியின் முகத்தில் தண்ணீரைத் தெளித்தார். கண்ணைத் திறந்தவுடன் வாயில் சிறிது ஊற்றினார். மெல்லக் கை கொடுத்து எழுப்பிவிட்டார். சோற்றைப் பிசைந்து வாயில் ஊட்டினார். அவள் அதை உண்டாள்.

"எழுந்திரம்மா, போகலாம்" என்றார் அவர்.

பிச்சைக்காரிக்கு ஒன்றும் புரியவில்லை; "எங்கே சாமி?" என்று கேட்டாள்.

"உனக்குச் சௌகரியமான இடத்துக்கு" என்றார். அவள் நம்பிக்கையோடு அவரைப் பின்தொடர்ந்தாள். அவளை ஓர் ஆஸ்பத்திரியில் விட்டுவிட்டு, அவர் தம் மனத் துக்குச் சாந்தி தேடி அப்படியே புறப்பட்டு விட்டார்.

"அன்று ஒரு நிறைமாசக் கர்ப்பிணி அவர் துறவு கொள்ளக் காரணமானாள். அவர் இங்கே வந்து பெரிய குடும்பத்தைச் சேர்த்தார் என்று குருநாதர் கூறுவார் அல்லவா? இந்தக் குடும்பத்திலும் விரக்தி உண்டாகும் படி இந்தக் கர்ப்பிணி செய்துவிட்டாள். அங்கே பட்டது போல இங்கேயும் பட்டபோதுதான், அவருக்குக் குருநாத ருடைய உபதேசம் விளங்கியது" என்று சங்கரானந்தர் சொல்லிப் பெருமூச்சு விட்டார்.

துறவிலும் துறவு பூண்ட நிர்மலானந்தர், ஏதும் பேசாத மோனத்தையும், யாரும் காணாத தனிமையையும், எந்தச் செயலும் இழந்த நிலையையும் நாடிப் போய்க்கொண் டிருந்தார்.

# துளசி மாடம்

## 1

நாராயணன் புது வீடு கட்டத் தொடங்கினான். ஒன்றரை மனை வாங்கி அதில் பெட்டி போல ஒரு வீட்டைக் கட்ட ஏற்பாடு செய்தான். தனக்கு மிகவும் வேண்டிய ஒரு கண்டிராக்டரிடம் தன் கருத்தைச் சொன்னான். அவர் சில 'பிளான்'களைக் காட்டினார். அவற்றை அவன் தன் மனைவி துளசிக்குக் காட்டினான். தனக்கு வேண்டிய சௌகரியங்களை அவள் சொன்னாள். தனக்கு வேண்டியவற்றை அவனும் சொன்னான். கண்டிராக்டர் தம்முடைய யோசனைகளையும் கூறினார். கடைசியில் ஒரு வகையாகப் 'பிளான்' போட்டு முடித்தார்கள். பதினையாயிரத்தில் கட்டலாம் என்று நாராயணன் திட்டமிட்டான். அதற்குள் அவன் கேட்ட சௌகரியங்கள் கிடைப்பது அருமை என்று கண்டிராக்டர் சொன்னார். அவன் எவ்வளவு பணம் தொகுக்க முடியும் என்பது பற்றி யோசித்தான். எப்படியோ முண்டியடித்து இருபதினாயிரம் சேர்க்கலாம் என்ற தைரியம் உண்டாயிற்று. கடைசியில் கண்டிராக்டர் இருபத்திரண்டாயிரத்துக்கு ஓர் 'எஸ்டிமேட்' கொடுத்தார்.

"இந்த ஊரில் ஒவ்வொரு வீட்டுக்கும் நாம் கொடுத்த வாடகையை வைத்திருந்தால் ஓர் அரண்மனையையே கட்டியிருக்கலாம்" என்று எல்லோரும் சொல்கிறதைத் துளசி சொன்னாள்.

"ஆமாம்; நாம் இவ்வளவு நாளும் சாப்பிட்ட சாப்பாட்டைக் குவித்தால் ஒரு வெள்ளி மலை போலக் குவித்து

அ-வி—8

விடலாம்! போடி, பைத்தியம்! வாடகையைச் சேர்த்து வைத்துவிட்டு ஆகாசத்தில் குடியிருப்பாயாக்கும்! ஆண்டவன் எப்படி ஏற்படுத்துகிருனே அப்படித்தான் நடக்கும். நாம் அப்படிச் செய்திருக்கலாம், இப்படிச் செய்திருக்கலாம் என்பதெல்லாம் வீண் பேச்சு. எதுவும் அந்த அந்தக் காலத்தில்தான் வரும்'' என்ருன் நாராயணன்.

இருபத்திரண்டாயிரம் என்ற திட்டத்தை நாராயணன் ஒப்புக்கொண்டான். கட்டிட வேலை தொடங்கியது. இரண்டு ஆண்டுகளாக வாங்கிப் போட்டிருந்த மனைக்கட்டு அது. முதலில் கிணற்றைத் தோண்டிக் கொண்டார்கள். பிறகு அஸ்திவாரம் பறித்துக் கட்டிட வேலையைச் செய்யலானுர்கள்.

நாராயணனுக்கு வீட்டைப்பற்றி ஒன்றுமே தெரியாது. ஒன்றைத் தீர்மானம் செய்து விட்டால் பிறகு அதைப்பற்றி அதிகமாகக் கவலைப்படுகிற பேர்வழி அல்ல அவன். அவன் மனைவி துளசி அப்படி அல்ல. வீடு நன்ருகக் கட்டி முடிய வேண்டுமே என்று அவளுக்குப் பாரமாக இருந்தது. ஒவ்வொரு நாளும் ஒழிந்தபோதெல்லாம் வீடு கட்டும் இடத்துக்குப் போய் எல்லாவற்றையும் கவனித்து வந்தாள். இஞ்சினீயர் வந்தால், "கொஞ்சம் சிமிட்டை உறுதியாகக் கலக்கச் சொல்லுங்கள்" என்பாள். சூப்பர் வைசரைக் கண்டால், "சுவரில் தூள் செங்கல்லை அதிகமாகப் போட்டுவிடப் போகிருர்கள்; பார்த்துக் கொள்ளுங்கள்" என்பாள். கொல்லத்துக்காரனுக்கு ஏதாவது உத்தரவு இடுவாள். கூலிக்காரியை மிரட்டுவாள். இப்படியெல்லாம் செய்தால்தான் வேலை நன்ருக நடைபெறும் என்பது அவள் எண்ணம். உலகத்தில் ஒவ்வொருவரும் பிறர் கண்ணில் மண்ணைத் தூவி ஏமாற்றும் இயல்புடையவர் என்பதுபோல ஓர் எண்ணம் அவளுக்கு இருந்தது.

"இந்த அறையில் இன்னும் ஓர் அலமாரி இருந்தால் நல்லது'' என்பாள்.

"பிளானில் இல்லையம்மா" என்று மேஸ்திரி சொன்னால், "இல்லாவிட்டால் என்ன? பணந்தானே கூட ஆகும்? தந்துவிடுகிறோம்" என்பாள். இப்படி அவள் புதிய புதிய அமைப்புக்களை அவ்வப்போது சொல்லி வந்தாள். நாராயணன், "அவள் சொல்கிறபடியே செய்து விடுங்கள்" என்று பொதுவாகச் சொல்லி விட்டான்.

வீடு கட்டி முடியும் தறுவாயில் இருந்தது. கண்டிராக்டர் பில்லை நீட்டினார். இருபத்தையாயிரத்து முந்நூறு ரூபாய்! நாராயணன் முதலில் அலண்டு போனான். பதினைந்தாயிரம், இருபதாயிரம், இருபத்திரண்டாயிரம் என்று வளர்ந்து இப்போது இருபத்தையாயிரத்து முந்நூறு! "அடேயப்பா! பணத்துக்கு எங்கே போவது?" என்று அவன் பிரமித்தான்.

"ஏது இவ்வளவு கூடிவிட்டது?" என்று கேட்டான் கண்டிராக்டரை.

"அம்மாதான் அங்கே தாழ்வாரம் போடச் சொன்னார்கள். இங்கே பரண் வேண்டும் என்றார்கள். கிணற்றுச் சுவர் உயரமாக இருக்கவேண்டும் என்றார்கள். ஒவ்வொன்றாகச் சேர்ந்து இவ்வளவு ஆகிவிட்டது."

'ராணியம்மாளுடைய அதிகாரம் நம்மைக் கடனாளி ஆக்கி விடுமே!' என்று அஞ்சினான் நாராயணன். அன்று அவளைக் கோபித்துக் கொண்டான். அவள் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாகப் பேசினாள்.

"மறுபடியும் ஒரு முறை கட்டச் சொல்லப் போகிறோமா? இப்போது விட்டுவிட்டால் அப்புறம் காலத்துக்கும் நடக்காது. வீட்டிலே இருக்கிறவள் நான். எனக்கல்லவா வேண்டியது இன்னது என்று தெரியும்? நீங்கள் ஆபீசில் வாழ்கிறவர்கள். புறா வந்து கூட்டில் அடைகிற மாதிரி இராத்திரி வீட்டில் வந்து அடைகிறவர்கள். நாலு பேர் வந்தால் உட்காரப் படுக்க இடம் வேண்டாமா? கண்

மறைவாகத் தட்டுமுட்டுச் சாமானைப் போடப் பரண் வேண்டாமா?" என்று கேட்டாள்.

"இதற்கெல்லாம் பணம் வேண்டாமா?"

"பணம் வேண்டுமென்றால் வரும்; வீடு வருமா?" என்று அவள் மாற்றுக் கேள்வி கேட்டாள்.

"வரும்! வரும்! எங்கே, இப்போது ஆயிர ரூபாய் வேண்டும்; வருகிறதா, பார்ப்போம்!" என்றான் நாராயணன். அடுத்த நாள் ஆயிர ரூபாய் தருவதாகச் சொல்லியிருந்தான்.

துளசி விடுவிடுவென்று உள்ளே போனாள். கைப் பெட்டி ஒன்றைக் கொண்டு வந்தாள். அதைத் திறந்து கட்டுக் கட்டாக நோட்டுக்களை எடுத்து வைத்தாள். "இந்தாருங்கள் அறுநூறு ரூபாய்; பாக்கி நானூறு இன்னும் ஆறு மாசத்தில் தருகிறேன்!"

நாராயணன் மலைத்துவிட்டான். இதென்ன செப்பிடு வித்தையா என்று ஆச்சரியப்பட்டுப் போனான். அவள் சிறுகச் சிறுகச் சேர்த்தது அது என்பதைத் தெரிந்து கொண்டபோது அவனுக்குக் கோபம் போய் விட்டது.

எப்படியோ பாக்கிப் பணத்துக்குக் காரியாலயத்தில் ஏற்பாடு செய்துவிட்டான். கிருகப்பிரவேசத்துக்கு நாளும் குறித்தாகிவிட்டது.

## 2

அன்று அவன் ஒரு தம்பிடி பாக்கியில்லாமல் கண்டிராக்டர் கணக்கைத் தீர்த்துவிட்டான். முந்நூறு ரூபாயை அவர் தள்ளிவிட்டார். வள்ளிசாக இருபத்தையாயிரமாகக் கணக்குப் பண்ணிக் கடைசித் தவணையாகக் கொடுக்க வேண்டிய ஐயாயிரத்தையும் கொடுத்து ரசீது வாங்கிக் கொண்டான். அவ்வளவு ரூபாயைச் சேர்த்து ஒரு பெரிய காரியத்தைச் சாதித்துக் கொண்டது அவனுக்கே ஆச்சரிய

மாக இருந்தது. "எல்லாம் ஈசன் செயல்" என்று கடவுளைத் தியானம் செய்தான்.

அவன் மன நிறைவோடு இருந்த சமயம் பார்த்துத் துளசி ஒரு சமாசாரம் சொல்லத் தொடங்கினாள். "கிருகப் பிரவேசத்துக்கு முன் இன்னும் ஒரு முக்கியமான காரியம் செய்யவேண்டும்" என்றாள்.

"இன்னும் ஏதாவது செலவு வைக்கப் போகிறாயா?" என்று கேட்டான் நாராயணன்.

"செய்ய வேண்டியதைச் செய்யத்தானே வேண்டும்?"

"என்ன செய்யச் சொல்லுகிறாய்?"

"இஞ்சினீயரிடம் சொல்லி ஒரு துளசி மாடம் செய்து தரச் சொல்ல வேண்டும். பின் பக்கம் நிலைக்கு நேரே அதை வைக்க வேண்டும்."

"ஆமாம்; அதை இவ்வளவு நாள் நீ நினைப்பூட்டவில்லையே! வெள்ளிக்கிழமை தோறும் யார் வீட்டில் துளசி மாடம் இருக்கிறதென்று தேடிப்போய்ப் பிரதட்சிணம் செய்கிறவள், முன்பே சொல்லவில்லையே!"

"அதனால் என்ன? அது கட்டிடத்தோடே சேர்ந்தது அல்லவே; எப்போது வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாமே."

"சரி; மேஸ்திரியைக் கேட்கிறேன்."

மேஸ்திரி தங்களிடம் முன்பே சிமிட்டில் செய்த துளசி மாடம் இருப்பதாகவும் அதைக் கொண்டு வந்து வைத்துவிடுவதாகவும் சொன்னான். அப்படியே கொண்டு வந்தும் வைத்தான். அதைத் துளசி பார்த்தாள். "இது வேண்டாம். என் இடுப்புக்கு மேலே உயரமாக இருக்க வேண்டும்" என்றாள்.

"தனியாகத்தான் கட்ட வேண்டும்" என்று மேஸ்திரி சொன்னதைக் கேட்ட நாராயணனுக்குக் கோபம் வந்துவிட்டது. "போடி, பைத்தியக்காரி, உனக்கு வேறு வேலை இல்லை; இந்த மாடம் எவ்வளவு அழகாக இருக்கிறது!

தும்பைத் தறித்துவிட்டு வாலைப் பிடிக்கிற மாதிரி இது வேண்டாமாம்; வேறு ஒன்று வேண்டுமாம்! இதற்கு என்ன கோளாறும்?''

''இது உயரம் போதாது.''

''உயரம் எதற்கு? இதில் துளசிச் செடியை வைத்தால் வளராதா?''

மேலே விவாதத்தை வளர்க்க அவள் விரும்பவில்லை. ''அடுப்பில் பாலை வைத்துவிட்டு வந்திருக்கிறேன்'' என்று குடியிருக்கும் வீட்டுக்குப் போய்விட்டாள்.

அன்று மாலை தன் கணவன் காரியாலயத்திலிருந்து வந்தவுடன் அவனுக்குச் சிற்றுண்டி வழங்கினாள்; இங்கிதமாகப் பேசினாள்; ''இங்கே பாருங்கள். இந்த ஓர் ஆசையை மாத்திரம் தடுக்காதீர்கள். உங்களுக்குப் புண்ணியமாகப் போகிறது. காரணத்துடன்தான் சொல்கிறேன். துளசி மாடம் உயரமாகத்தான் இருக்க வேண்டும்.''

''என்ன காரணம்?''

''அதைப் பிறகு சொல்லுகிறேன். சொன்ன பிறகு உங்களுக்குத் தெரியும். தயை செய்து என் விருப்பப்படி உயரமான துளசி மாடம் கட்டச் சொல்லுங்கள்'' என்னும்போது அவள் அழுதே விட்டாள்.

நாராயணன் மனம் இரங்கிவிட்டது. மேலே நூறு ரூபாய் போனால் போகிறதென்று அதற்கு ஏற்பாடு செய்து விட்டான்.

கிருகப்பிரவேசம் சிறப்பாக நடந்தது. அவளுடைய தாயார், தமையன், தமையன் மனைவி, அவனுடைய தங்கைகள், அவர்களின் கணவர்கள், வேறு பந்துக்கள் எல்லாரும் வந்திருந்தார்கள். வீடு களையாக இருக்கிறதென்று வந்தவர்கள் எல்லோருமே பாராட்டினார்கள். ''எல்லாம் இவளுடைய பிளான்தான்'' என்று புதுப் புடைவையும் தானுமாக நின்ற துளசியைச் சுட்டிக் காட்டினான் நாராயணன். அவள் நாணித் தலைகுனிந்தாள்.

புது வீட்டுக்கு வருவதற்கு முன்பே துளசி மாடத்தில் துளசிச் செடியை நட்டுவிட்டாள் துளசி. நல்ல களி மண்ணைக் கொண்டு வந்து போட்டு ஒரு செடியை நட்டுச் சுற்றிலும் விதையைத் தூவினாள். வீட்டுக்கு வந்த பிறகு, கொல்லைப்புறத்தில் சில துளசிச் செடிகளை நட்டாள். பூச்செடி, காய்கறி, மரம்—என்று இப்படித் தோட்ட வேலையில் ஈடுபட்டாள்.

முன்பெல்லாம் வெள்ளிக்கிழமைதோறும் துளசி மாடம் உள்ள வீட்டுக்குப் போய் வணங்கி வருவாள். இப்போது சொந்த வீடும் துளசி மாடமுமாக இருக்கும்போது வாரம் ஒரு முறைதானா வலம் வருவது? தினந்தோறும் காலையில் நீராடியவுடன் அதற்குத் தண்ணீர் ஊற்றுவாள். சுவாமி படத்துக்குச் சந்தனம் குங்குமம் இடும்போது துளசி மாடத்துக்கும் இடுவாள். நிவேதனம் செய்யும்போது எல்லாச் சுவாமிகளுக்கும் காட்டிக் கடைசியில் துளசியம்மனிடமும் காட்டிவிட்டுப் பிறகு காக்கைக்குப் போடுவாள். அஸ்தமித்தவுடன் விளக்கை யேற்றிப் புரையில் வைத்து வலம் வந்து வணங்குவாள்.

அவள் புக்ககம் வந்து ஒரு வெள்ளிக்கிழமையாவது துளசியம்மனை வணங்கத் தவறியதில்லை. புத்தகம் வந்த பிறகோ ஒரு நாளாவது வலம் வரத் தவறவில்லை.

நாராயணன் ஒரு நாள் அவள் பயபக்தியோடு துளசி மாடத்தில் விளக்கை யேற்றிவிட்டு வலம் வந்து வழிபடுவதைக் கூர்ந்து கவனித்தான். அவளுக்குத்தான் எவ்வளவு பக்தி!—அப்போது அவனுக்கு ஒரு செய்தி நினைவுக்கு வந்தது. அவள் புதிதாகத் துளசி மாடம் கட்டுவதற்கு ஏதோ காரணம் இருக்கிறதென்று சொன்னாளே! புது வீடு வந்த மகிழ்ச்சியில் அதை அவன் மறந்துவிட்டான். இப்போது அவள் துளசி யம்மனை வழிபடுவதை நன்றாகக் கவனித்தமையால் அது நினைவுக்கு வந்தது.

அன்று இரவு படுத்துக்கொள்ளும்போது அவளைக் கேட்டான். "அவன் தந்த சின்ன மாடம் வேண்டாம் என்று மறுத்துவிட்டு ஒற்றைக் காலில் இந்த உசத்தியான மாடந்தான் வேண்டுமென்று பிடிவாதம் செய்தாயே, ஏதோ சபதம் செய்தவள் போல! அதற்குக் காரணம் இருக்கிறதென்று சொல்லிக் கண்ணீர்விட்டு மாய்மாலம் செய்தாயே! என்ன காரணம்?" என்று கேட்டான்.

"மாய்மாலமா? அப்படிச் சொல்லாதீர்கள். காரணத்தைக் கேளுங்கள்; பிறகு உங்களுக்கே தெரியும்."—அவள் கதை சொல்ல ஆரம்பித்தாள்.

## 3

எனக்குக் கல்யாணம் செய்ய வேண்டுமென்று அப்பா எவ்வளவோ சங்கடப்பட்டார். அவர் உயிருடன் இருக்கும் போது செய்ய முடியவில்லை. அம்மா தவியாய்த் தவித்தாள். என்னைத் துளசியம்மனைப் பிரதட்சிணம் செய்து துளசியம்மன் சோபனத்தைத் தவறாமல் சொல்லச் சொன்னாள். அதற்குப் பிறகு நாலே மாசத்தில் உங்களை நான் அடைந்தேன்.

அம்மா துளசியம்மனை வழிபடச் சொன்னதற்கும் ஒரு காரணம் உண்டு. அதையும் சொல்கிறேன்.

அம்மாவுக்கு எப்போதுமே துளசியம்மன்பேரில் பக்தி. நாள்தோறும் துளசி மாடத்தை வலம் வந்து வழிபடுவாள். அவள் துளசியம்மன் சோபனம் சொன்னால், நாலு பேர் பக்தியோடு கேட்பார்கள். எங்கள் வீட்டு முற்றத்தில் சின்னத் துளசி மாடம் இருக்கிறது. நீங்கள் அதைப் பார்த்திருக்க மாட்டீர்கள். இந்தத் துளசியைத்தான் பார்த்திருப்பீர்கள். எனக்குத் துளசி என்று அம்மா பேர் வைத்ததே அவளுக்குள்ள பக்தியால்தான்.

நான் இரண்டு வயசுக் குழந்தையாக இருக்கும்போது தத்தித் தத்தி நடந்தேன். கால் முளைத்துவிட்டதனால்

முற்றம் முழுவதும் சுற்றித் திரிந்தேன். துளசி மாடத்தில் உள்ள துளசி என் கைக்கு எட்டும் உயரத்தில் இருந்தது. அதைப் பிய்த்தேன். அம்மா ஓடிவந்து என்னைத் தடுத்தாள். "உம்மாச்சி, ஆகாது" என்றாள். எனக்கு அந்த வயசில் என்ன தெரியும்? தினந்தோறும் செடியைப் பிய்த்தேன்.

ஒரு நாள் செடி பழையதாக இருக்கிறதென்று அம்மா அதை எடுத்துவிட்டு நன்றாகக் கொத்திப் புதிய செடி ஒன்றைக் கொண்டு வந்து நட்டாள். அதை அன்றைக்கே பிடுங்கி எறிந்துவிட்டேன். செடியை அடியோடு பிடுங்கிய தால் அம்மா இடி விழுந்து போனாள். "அடி பாவிப் பெண்ணே!" என்று பல்லைக் கடித்துக்கொண்டு ஓடி வந்து முதுகில் ஓங்கி அறைந்தாள். அடி தாங்காமல் நான் சுருண்டு விழுந்துவிட்டேன்.

அதுவே சாக்காக எனக்குச் சுரம் கண்டது. ஒரு வாரம் படுத்த படுக்கையாகக் கிடந்தேன். அதற்குள் வேறு ஒரு துளசிச் செடியைக் கொண்டு வந்து மாடத்தில் நட்டுப் பூஜை செய்தாள் அம்மா.

நான் பலவீனமாக இருந்தேன். சில நாள் கழித்துப் பழையபடி உலாவத் தொடங்கினேன். சில குழந்தை களிடம் சில விதமான பழக்கம் நிலையாக நின்றுவிடும். என்ன தடுத்தாலும் போகாது. எனக்கும் துளசியைப் பறிக்கும் பழக்கம் விடவில்லை. நேரே துளசி மாடத்துக் குப் பக்கத்தில் போனேன். அங்கே ஒரு ஸ்டூலைப் போட் டிருந்தார்கள். அதன் மேல் ஏறினேன். இரண்டு கையாலும் துளசிச் செடியைப் பிடுங்கி எறிந்தேன். மெல்ல நானே துளசி மாடத்தில் ஒவ்வொரு காலாக எடுத்துவைத்து ஏறி அதன்மேல் நின்றேன்.

அப்போது அம்மா வந்தாள். "இங்கே பாருங்கள், அக்கிரமத்தை!" என்று கூவினாள். அப்பா வந்து பார்த் தார். அம்மாவுக்குக் கண்ணில் நெருப்பு; அப்பாவுக்கோ வாயில் சிரிப்பு! "பார்த்தீர்களா, உங்கள் அருமைப்

பெண்ணை!" என்று தலையில் அடித்துக் கொண்டாள்.

"பைத்தியக்காரி, நன்றாகப் பார். உண்மைத் துளசியே துளசி மாடத்தில் நிற்கிறாள். அதைக் காணக் கண் இல்லாமல் உளறுகிறாயே!" என்று ஓடிவந்து என்னை மாடத்திலிருந்து எடுத்துத் தழுவி முத்தமிட்டார். அம்மா அடித்துவிடப் போகிறாளே என்ற பயத்தால் அவரே என்னை எடுத்தார்.

அப்பா சொன்னதைக் கேட்டதும் அம்மாவுக்கு ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை. அவர் சொன்னதிலும் உண்மை இருந்ததாகப் பட்டதோ, என்னவோ! அன்று எனக்கு ஒரு தண்டனையும் இல்லை.

இந்த வழக்கம்-அதாவது துளசிச் செடியைப் பறித் தெறியும் வழக்கம்-எட்டு வயசு வரையில் என்னிடம் இருந்தது. வயசு ஆக ஆக, செடியைப் பறிப்பதை விட்டு விட்டு, துளசி இலையைப் பறித்து வாயில் போட்டு மென்றேன்.

"விழுப்போடு தொடக் கூடாது" என்று அம்மா வைவாள்.

எனக்கு என்னவோ முற்றத்துப் பக்கம் போகும் போதெல்லாம் கை துறுதுறுக்கும். ஒருவரும் காணாமல் கொழுந்தைக் கிள்ளித் தின்றுவிடுவேன். அம்மா கண்ணில் பட்டால் திட்டுவாள்; அதை வாங்கிக் கட்டிக்கொள்வேன்.

பத்து வயசானபோது நானே திடமாகச் சங்கல்பம் செய்துகொண்டேன்; மாடத்துத் துளசியைப் பறிப்பதில்லை என்று என் மனசுக்குள் உறுதியாகச் சத்தியம் செய்து கொண்டேன்.

படித்தேன். பதினைந்து வயசில் அப்பா வரன் தேட லானார். கையில் பணத்தை வைத்துக்கொண்டு அலைந்தார். சொந்தத்தில் இரண்டு மூன்று பிள்ளைகள் இருந்தார்கள். ஒருவரும் சரிப்படவில்லை. கடைசியில் அவர் அலுத்துப்

போனார். நண்பர்கள் சொன்ன இடங்களுக்கெல்லாம் போனார். ஒன்றும் சித்தியாகவில்லை. அவர் எனக்குக் கல்யாணம் செய்யவில்லையே என்ற குறையோடே போய் விட்டார். ஆனால் அண்ணாவுக்கு மாத்திரம் முன்பே கல்யாணம் செய்து வைத்துவிட்டார்.

எனக்குப் பதினெட்டு வயசாகிவிட்டது. அம்மா புழுவாய்த் துடித்தாள். அண்ணா தம்முடைய உத்தியோகத் தொல்லைக்கு நடுவிலே வரன் தேடினார். கிடைக்குமென்று தோன்றவில்லை.

அப்போதுதான் ஒரு நாள் ஒரு பாட்டி வந்தாள். "ஏதோ சாபம் இருக்கிறது அதனால்தான் இப்படிக் கஷ்டப்படுகிறாய்" என்று அம்மாவிடம் சொன்னாள்.

"சாபமா? நான் மனம் அறிந்து ஒன்றும் செய்யவில்லையே!"

"பெரியவர்களைக் கேட்டுப் பார்" என்று சொல்லி அந்தப் பாட்டி போய்விட்டாள்.

அம்மா இரவில் தூக்கமில்லாமல் மனத்தைப் புண்படுத்திக் கொண்டாள். ஒரு நாள் அவளுக்கே தோன்றியது. 'பாட்டி சொன்னது உண்மைதான். துளசியம்மன் சாபந்தான் இவளுக்கு ஏற்பட்டிருக்கிறது; சந்தேகமே இல்லை பத்து வயசு வரையில் துளசியம்மனைப் பாடாகப் படுத்தி வைத்தாளே இந்தப் பெண். அதை மறந்து விட்டேன். இன்றைக்குச் சமர்த்தாகக் கெட்டிக்காரியாக இருக்கிறாள். இருந்து என்ன? செய்த பாவம் பட்டால் தானே தீரும்? படுகிறாள்' என்று அவள் பழைய நிகழ்ச்சிகளை நினைவுக்குக் கொண்டு வந்தாள்.

"சரி, சாஸ்திரிகளிடம் சொல்லி ஏதாவது பரிகாரம் செய்துவிடலாம்" என்று அண்ணா சொன்னார். சாஸ்திரிகள் சொற்படியே ஒரு வெள்ளிக்கிழமை பட்டுப் புடைவை வாங்கித் துளசியம்மனுக்குச் சாத்தி ஒரு சுமங்

கலிக்குக் கொடுத்தார்கள். அம்மா, "நீ பண்ணின பாவத்தை நீயே போக்கிக்கொள்ள வேண்டும். தினம் தவருமல் துளசியம்மனைப் பிரதட்சிணம் பண்ணு" என்று சொன்னுள்.

துளசியம்மன் சோபனத்தை நான் முன்பே அம்மாவிடம் கற்றுக் கொண்டிருந்தேன். அம்மா சொல்படி அன்று முதல் துளசியம்மனைப் பயபத்தியுடன் வழிபடத் தொடங்கினேன். சரியாக நாலு மாசத்தில் பலன் கிடைத்தது. எங்கள் ஊருக்கு யார் கல்யாணத்துக்கோ வந்த நீங்கள் எங்கள் அண்ணுவுக்கு அறிமுகம் ஆனீர்கள். பிறகு நடந்த கதையை நான் சொல்ல வேண்டுமா? அம்மா துளசியம்மன் கிருபை சத்தியமானது என்று நம்பினுள்; நானும் நம்பினேன். 'நம்பினுர் கெடுவதில்லை நான்கு மறைத் தீர்ப்பு.'

## 4

இதைக் கவனமாகக் கேட்டான் நாராயணன். "அதெல்லாம் சரி; துளசி மாடம் வைத்து வழிபடுவதற்குக் காரணம் சொல்லிவிட்டாய். அதை இவ்வளவு உயரமாகக் கட்ட வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தாயே! அதற்குக் காரணம் என்ன?" என்று கேட்டான்.

"அதுவா? நான் குழந்தையாக இருக்கும்போது செய்த பாவத்தை இங்கே குழந்தைகள் செய்தால்—? அதனுல் தான் உயரமாகக் கட்டச் சொன்னேன்."

"அதைப் பற்றி இப்போதென்ன கவலை?"

"உங்களுக்கு என்ன தெரியும்? துளசியம்மன் பெருமையே பெருமை!" என்று சொல்லித் தன் கையால் நாராயணன் கையை மெல்லத் தடவினுள் துளசி. அதில் தான் எத்தனை சுகம்!

"அப்படியா! துளசியம்மன் வாழ்க!" என்று உணர்ச்சியோடு நாராயணன் வாழ்த்தினுன்.

# முருகன் பணம்

முருகன் திருக்கோயிலில் அடிக்கடி ஏதாவது சொற் பொழிவு நடந்துகொண்டே இருக்கும். இராமாயணமோ, கந்த புராணமோ, பெரிய புராணமோ தொடர்ந்து ஒரு மாதம், இரண்டு மாதம் நடைபெறுவதும் உண்டு கோயில் தர்மகர்த்தர் மிகவும் கெட்டிக்காரர். எப்போதும் கோயி லில் ஜனங்கள் நடமாட்டம் இருக்கவேண்டும் என்பது அவர் ஆசை. அதற்காக யாரையாவது பேசக் கொண்டு வந்துவிடுவார். பெரிய மனிதர்களை அழைத்துத் தலைமை வகிக்கச் செய்து சொற்பொழிவாளரைப் பாராட்டச் செய்வார்.

கோயில் இருந்த இடம் கல்வி அறிவுள்ளவர்கள் அதிகமாக வசிக்கும் இடம் அன்று. தேர்தல் சமயத்தில் அங்கே ரணகளப்படும்; கட்சிப் பிரதி கட்சிகளின் போர் முழக்கம் காது செவிடுபடும். இத்தகைய இடத்தைப் புனிதமாக்கவேண்டும் என்பதும் தர்மகர்த்தாவின் எண் ணம். அவர் விருப்பம் மெல்ல மெல்ல நிறைவேறிவந்தது. மிகவும் சிறந்த கதா காலக்ஷேப வித்துவானாகிய கோபால சாஸ்திரிகள் அடிக்கடி அங்கே கதாப் பிரசங்கங்களை நடத்திவந்தார். அவரால் கோயிலுக்கும் கோயிலால் அவ ருக்கும் புகழ் உண்டாயிற்று.

கதா காலக்ஷேபம் ஆனாலும், சொற்பொழிவானாலும் அதற்குச் சம்மானம் செய்ய ஒரு வழி கண்டுபிடித்தார் தர்மகர்த்தர். எங்கும் நடைபெறுவதுதான் அது. ஒவ் வொரு நாளும் முக்கால்வாசிக் கதை நடைபெறும்போது சுவாமிக்குத் தீபாராதனை செய்து இரண்டு பெரிய தட்டு களை எடுக்கச் செய்வார். பெண்கள் பக்கம் ஒரு தட்டும்,

ஆண்கள் பக்கம் ஒரு தட்டும் போகும். அவ ரவர்கள் காலணுவோ நாலணுவோ போடுவார்கள். இப் படிச் சேரும் பணத்தைத் தொகுத்துப் பிரசங்க வரிசை முடியும்போது சில செல்வர்கள் தரும் பரிசையும் சேர்த்து வித்துவானுக்குச் சம்மானம் செய்வார். விளக்கு, விளம் பரம், ஒலிபெருக்கி ஆகியவற்றுக்கு ஆகும் செலவைமட்டும் அந்தப் பணத்தில் எடுத்துக்கொண்டு கணக்குக் காட்டி விடுவார்.

கதா காலக்ஷேபத்துக்கு வரவரக் கூட்டம் அதிக மாயிற்று. ஆனால் தட்டில்மட்டும் அதற்குத் தக்கபடி பணம் சேரவில்லை. குறிப்பிட்ட தொகைக்குக் குறையா மல் பிரசங்கிக்குக் கொடுக்கவேண்டுமென்று தர்மகர்த்தர் எண்ணுவார். வசூல் குறைவாக இருந்தால் கோயில் வரும் படியிலிருந்து போடும்படி இருக்கும். இப்படியும் சில சம யங்களில் நடப்பது உண்டு.

★

கந்த புராணத்தை நன்ருகச் சொல்லும் விரிவுரை யாளர் ஒருவரைத் தர்மகர்த்தர் நாடி ஒரு மாதம் விரி வுரைக்கு ஏற்பாடு செய்தார். அவர் இளைஞர். "எனக்கு முந்நூறு ரூபாய் தரவேண்டும்" என்ருர் அவர். அவர் பெயர் சிவகுமாரன். "தருகிருேம்; மேலே வந்தாலும் உங்க ளுக்கே கொடுத்துவிடுகிருேம். எல்லாம் உங்கள் அதிருஷ் டத்தைப் பொறுத்தது" என்ருர் தர்மகர்த்தர். அவர் மனத் துக்குள் ஆயிர ரூபாய் தரவேண்டும் என்று ஆசை. கந்த புராணப் பிரசங்க ஆரம்பத்துக்கு நாள் குறித்தாயிற்று; ஒரு மந்திரி வந்து ஆரம்பித்துவைப்பதாக ஏற்பாடு.

தர்மகர்த்தருக்கு ஒரு சந்தேகம். 'இவர் இந்தக் கோயி லுக்குப் புதியவர்; இளைஞராக வேறு இருக்கிருர். இயல் பாகவே காலணுவும் நயாபைசாக்களுமே அதிகமாகப் போடும் கூட்டம் வந்தால் என்ன செய்வது?' என்று எண்

ணினார். பிச்சைக்காரர்கள் நயாபைசாவைச் சபிப்பதுபோல அவரும் சபித்தார்.

அவருடைய நண்பர் ஒருவர், "இவருக்கு எத்தனை சம்மானம் செய்வதாகப் பேச்சு?" என்று கேட்டபோது, "ஆயிர ரூபாய் செய்யலாமென்று நினைக்கிறேன்" என்றார்.

நண்பர் ஆச்சரியப்பட்டுப்போனார்; "ஆயிர ரூபாயா? ஒவ்வொருவரும் தவறாமல் போட்டால்கூட அவ்வளவு சேராதே! இந்த வெற்றுக் கூட்டத்தை நம்பி இப்படி ஏற்பாடு செய்யலாமா?" என்று அவர் கேட்டார்.

"எல்லாம் முருகன் இருக்கிறான்; பார்த்துக்கொள்கிறான்" என்றார் தர்மகர்த்தர். "முருகன் பணத்திலிருந்து எடுத்துக் கொடுக்கலாம் என்றா?" என்று கேட்டார் நண்பர்.

"பார்க்கலாம்; அவன் எப்படி வழி விடுகிறானோ?"

★

கந்த புராணப் பிரசங்கம் மிகச் சிறப்பாக ஆரம்பமாயிற்று. முதல் நாள் தட்டு எடுக்கும் வழக்கம் இல்லை. தலைமை தாங்கிய மந்திரி அன்று கோயில்களைப்பற்றியும் கடவுள் உணர்ச்சியைப்பற்றியும் ஒரு மணி நேரம் வெளுத்துக்கட்டினார். அன்று முந்நூறு பேர் கூடியிருந்தார்கள்.

மறுநாள் இருநூறு பேரே வந்தார்கள். "முருகா! நீதான் அருள் செய்யவேண்டும்" என்று வேண்டிக்கொண்டார் தர்மகர்த்தர். இளைஞராகையால் சிவகுமாரன் கம்பீரமாகவே கதையை இசையுடன் சொன்னார். வந்தவர்கள் திருப்தி அடைந்தார்கள். தர்மகர்த்தர் மக்கள் எப்படிக் கதையை ரசிக்கிறார்கள் என்று கூர்ந்து கவனித்தார். பிரசங்கம் செய்பவர்களைவிட அவருக்குத்தான் நல்ல கூட்டம் சேரவேண்டுமே என்ற கவலை.

ஒரு கட்டத்தில் தீபாராதனை ஆயிற்று. தட்டு எடுத்தார்கள். தர்மகர்த்தரே ஆடவர் பக்கத்துத் தட்டை எடுத்

தார். அவருடைய நண்பர் அதைக் கவனித்தார். முதலில் தட்டில் ஓர் ஐந்து ரூபாய் நோட்டு விழுந்தது. நண்பருக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. அடுத்தபடி ஒரு முழு ரூபாய் விழுந்தது. பிறகும் முழு ரூபாய் ஒன்று. தொடர்ந்து ஐந்தாறு முழு ரூபாய்கள். நண்பர் மூர்ச்சை போட்டு விழவில்லை; அவ்வளவுதான். பின் வரிசைப் பிரமுகர்கள் எட்டணாப் போட்டார்கள். ஐந்து நயாபைசா, ஓரணா, இரண்டணா, நாலணா-இப்படியே தட்டில் விழுந்தன.

அன்று மொத்தம் கூட்டிப் பார்த்தபோது ஐம்பது ரூபாய் வசூல். "முருகன் அற்புதம் செய்கிறானே!" என்று தர்மகர்த்தரின் நண்பர் கூவினார்.

"ஆம், அவன் நினைத்தால் எதுதான் நடக்காது?" என்றார் தர்மகர்த்தர்.

அடுத்த நாள் இன்னும் அதிகமாக வசூல் ஆயிற்று. யாரும் நயாபைசாவே போடவில்லை. ஐந்து ரூபாயும் ஒரு ரூபாய்களும் விழும்பொழுது நயாபைசாப் போடுவது நாகரிகமாக இருக்குமா? ஒன்றும் போடாமல் இருந்தாலும் இருக்கலாம்; நயாபைசாவையா போடுவது? இந்த எண்ணத்தால் யாரும் ஓர் அணாவுக்குக் குறைவாகப் போடவே இல்லை. நாலணாக்களே அதிகம். கூட்டமும் வரவர மிகுதியாயிற்று. "அடடா? எவ்வளவு நன்றாகச் சொல்கிறார்!' என்று பணம் போட்டவர்கள் பேசிக்கொண்டார்கள்.

முப்பது நாளுக்கு மேலும் கதையை நீட்டவேண்டும் என்று பொதுமக்கள் ஆசைப்பட்டார்கள். "அது எப்படி முடியும்? அவருக்கு வேறு இடங்களில் கிடைக்கும் வரும்படியை நாம் கெடுக்கலாமா?" என்று தர்மகர்த்தரே சொல்லிவிட்டார்.

கேட்கும் ரசிகர்கள் தமக்குள் கூடி ஒரு யோசனை செய்தார்கள். பத்துப் பேராகச் சேர்ந்து தாங்கள் தனியே ஐந்நூறு ரூபாய் கொடுத்துவிடுவதாகவும், இன்னும் பத்து நாட்களுக்குக் கதையை நீட்டவேண்டுமென்றும் வேண்

டிக்கொண்டார்கள். பிரசங்கியாரிடம் மிகவும் சிரமப்பட்டு எடுத்துச் சொல்லி ஒப்புக்கொள்ளச் செய்வதாகத் தர்ம கர்த்தர் சொன்னபோது, அவர்களுக்கு உண்டான மகிழ்ச்சிக்கு அளவேது?

★

கந்தபுராணம் வள்ளியம்மை திருமணத்தோடு நிறைவடைந்தது. அன்று இரண்டாயிரத்துக்குமேல் கூட்டம். முதல் மந்திரி தலைமை தாங்கினர்; பல பெருமக்கள் பாராட்டிப் பேசினர்கள். ஆடை, மோதிரம், வெள்ளிப் பாத்திரம் என்று பல பரிசுகள் கிடைத்தன. "பொது மக்களின் ஒத்துழைப்பினல் பிரசங்கியாருக்குக் கிடைத்த சம்மானம் ரூபாய் மூவாயிரம்" என்று தர்மகர்த்தர் சொன்னபோது மக்கள் வியப்படைந்தார்கள். தர்மகர்த் தரே நாக்குழறி விம்மினர்; வார்த்தைகளை முழுசாகச் சொல்ல முடியவில்லை. வித்துவான் முந்நூறு ரூபாயில் ஒரு வெள்ளி வேல் வாங்கி வைப்பதாக அறிவித்தார். அதற்காகவும் மக்கள் அவரைப் பாராட்டினர்கள்.

மறுநாள் கணக்கை வித்துவானிடம் கொண்டு போய்ச் சமர்ப்பித்தார் தர்மகர்த்தர். அன்றன்று வசூலானது, தனியே செல்வர்கள் தந்தது ஆகிய எல்லாம் வரவினத்தில் இருந்தன. விளக்கு, ஒலிபெருக்கி, சில்லறைச் செலவு என்று செலவினங்கள் காட்டப்பட்டிருந்தன. 'தட்டில் முருகன் பணம்' என்று 250 ரூபாய் செலவினத்தில் இருந்தது. வித்துவான் எல்லாவற்றையும் பார்த்தார். அந்தச் செலவினம் இன்னதென்று விளங்கவில்லை. "இதென்ன, முருகன் பணம் என்று போட்டிருக்கிறதே?" என்று கேட்டார் சிவகுமாரன்.

"அதுதான் இத்தனை லாபம் வரச் செய்த முதல்; முருகன் பணம்" என்ருர் தர்மகர்த்தர்.

"எனக்கு விளங்கவில்லையே!"

"நீங்கள் இந்தக் கோயிலுக்குப் புதியவர்கள். தட்டில் எப்படிப் பணம் விழுமோ என்று அஞ்சினேன். நயா பைசாவாகப் போடும் கூட்டமே இங்கே அதிகம். ஆண்டவனிடம் பிரார்த்தித்துக் கொண்டேன். அவன் பணத்திலிருந்து பத்துப் பன்னிரண்டு எடுத்துச் சில நண்பர்களிடம் கொடுத்து அவர்களை முன் வரிசையில் உட்கார்த்தி வைத்தேன். நானே தட்டெடுத்து அவர்களிடம் நீட்டினேன். முதலில் அஞ்சு ரூபாய் நோட்டைப் போடச் செய்தேன். பிறகு ஒரு ரூபாய் நாணயங்கள் விழுந்தன. இவ்வளவும் முன்னே செய்து கொண்ட ஏற்பாடு. அதைப் பார்த்தவர்கள் நயாபைசாப் போட நாணினார்கள். அணாக்களாகப் போட்டார்கள்; ரூபாய்களும் போட்டார்கள். இதை எதிர்பார்த்தே இந்தத் தந்திரத்தைச் செய்தேன். முருகன் அது பலிக்கும்படி செய்தான். நான் எதிர்பாராத வகையில் அமோகமாகச் சம்மானம் கிடைக்கச் செய்தான். அவன் அருளும் உங்கள் அதிருஷ்டமும் சேர்ந்து கொண்டன." இப்படிச் சொல்லிவிட்டு ஆனந்தக் கண்ணீர் விட்டார் தர்மகர்த்தர்.

"உங்களையே தெய்வமாகக் கும்பிட வேண்டும்" என்று சொல்லி அஞ்சலி செய்த வித்துவான், "உங்கள் அபிமானத்தை என்னவென்று சொல்வது! முருகன் திருவருள் உங்கள் மூலமாக எனக்குக் கிடைத்ததென்றே நான் நம்புகிறேன். ஒரு வேண்டுகோள். ஆண்டவன் பணத்தை உபயோகித்துக் கொண்டதற்கு வட்டி வேண்டாமா?" என்று கேட்டார்.

"அதுதான் நீங்களே வேல் பண்ணி வைப்பதாகச் சொல்லி விட்டீர்களே!"

"இல்லை, இல்லை. அது வேறு விஷயம். இந்தாருங்கள்; இந்த நூறு ரூபாயையும் முருகன் காணிக்கையாக வைத்துக் கொள்ளுங்கள்" என்று நீட்டினார் கந்தபுராணப் பிரசங்கி.

# என்ன குற்றம்?

'ஆரஞ்சையும், தக்காளிப் பழத்தையும் தினந்தோறும் தின்று மாதத்துக்கு ஒரு பாட்டில் டானிக்கையும் காலி செய்து வாழும் பட்டணத்துப் பெண்களுக்கு இந்த வாளிப்பு உண்டா? நாடகத்தில் நடிக்கிறதைப் போலக் கால்முதல் தலைவரையில் போலி அலங்காரம்; போலி மினுக்கு. அந்தப் பெண்கள் உண்மையில் வாழவில்லை; பெண்களாக நடிக்கிறவர்கள் அவர்கள். இதோ இவள் இருக்கிறாள். இவள் சோப்புப் போட்டுத் தேய்த்துக் கொள்ளவில்லை. பளபள வென்று இருக்கிறாள். இவள் கைப்பட்ட பாத்திரம் துலங்குகிறது—' கோவிந்தன் உள்ளம் அவளைப் படம் பிடித்துக் கொண்டிருந்தது.

இருபத்தைந்து வயசுள்ள அந்த இளைஞன் அந்தச் சின்ன ஊரில் உள்ள சிறிய பள்ளிக்கூடத்தில் வாத்தியார். இன்னும் கல்யாணம் ஆகாதவன். அவன் கையில் பேருக்கு ஒரு புத்தகம் இருந்தது. கண், எதிரே இருந்த அவளைப் பார்த்துக் கொண்டிருந்தது. அவனுடைய கருத்தில் ஒரு பெரிய புயல் அடித்துக் கொண்டிருந்தது. அந்தப் பெண்ணோ மண்ணைக் கொண்டு கரிப் பாத்திரத்தைத் தேய்த்துக் கொண்டிருந்தாள். வேறு எதிலும் கருத்தை விடாமல் யோகி போல அந்த வேலையையே கவனித்துக் கொண்டிருந்தாள்.

அவள் அந்த வீட்டு வேலைக்காரி. கோவிந்தன் தானே சமைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். அந்தச் சிறிய கிராமத்தில் மாசம் இரண்டு ரூபாய்க்கு ஒரு தனி வீடு கிடைத்திருக்கிறது. ஒரு படுக்கை அறை, ஒரு கூடம் ஒரு சமையலறை, ஒரு முற்றம், ரேழி, புழைக்கடை,

வாசல் திண்ணை, கிணறு இவைகளுக்கும் குறைவில்லை. கூடத்துக்கு எதிரே முற்றம். ஓட்டு வில்லை வீடு அது.

தேவானை பதினெட்டு வயசுப் பெண். எப்போதும் சுறுசுறுப்பாக இருப்பாள். காலையிலே வந்து வீடு கூட்டி விட்டுப் பாத்திரத்தைத் துலக்கி வைத்துவிட்டுப் போவாள். மறுபடியும் மறுநாள்தான் வருவாள். அவனுக்குப் பள்ளிக்கூடம் பத்து மணிக்கு; அவள் ஏழு மணிக்கே எல்லா வேலையையும் முடித்துவிட்டுப் போய்விடுவாள்.

கோவிந்தனுக்குப் பள்ளிக்கூடத்தை விட்டால் வேறு வேலை கிடையாது. 'டியூஷன்' என்று யாருக்கும் அவன் சொல்லிக் கொடுப்பதில்லை. பள்ளிக்கூடம் போவது, சமைத்துச் சாப்பிடுவது, எதையாவது படித்துக்கொண்டிருப்பது, தூங்குவது—இந்த ரீதியில் அவனுடைய தினசரியை நடந்துகொண்டிருந்தது.

காலையில் பால் வருவதற்கு முன்பே டிகாக்ஷன் போட்டு வைத்துவிடுவான். சரியாக ஆறரை மணிக்குப் பால் வரும். அதைக் காய்ச்சி, ஆறே முக்கால் ஏழுக்குக் காபி சாப்பிடுவான். அப்படியே சமையலையும் செய்து முடித்துவிடுவான். சுடச்சுடச் சாப்பிட வேண்டும் என்று அவன் எண்ணுவதில்லை. சரியாக ஒரு மணிக்கு வந்து தான் சாப்பிடுவான். காலையில் பசித்தால் பிஸ்கோத்து, பழம் வாங்கி வைத்திருப்பான்; உண்பான்.

காலையிலே நீராடிவிட்டுச் சமைப்பதும் உண்டு; நீராடாமல் சமைத்து வைத்துவிட்டு, ஒரு மணிக்கு வந்து குளித்துச் சாப்பிடுவதும் உண்டு. ஞாயிற்றுக்கிழமைகளில் அவன் போக்கு எந்தத் திட்டத்திலும் அமையாது. அன்று எழுந்திருக்கவே ஏழு மணிக்குமேல் ஆகும். தனிக்காட்டு ராஜாவாகிய அவனைக் கேட்பவர்கள் யார்?

எதிர் வீட்டில் அவனுடன் வேலை பார்க்கும் வாத்தியார் ஒருவர் இருந்தார். அவருக்கு நெட்டை வாத்தியார் என்று ஊரே பெயர் வைத்துவிட்டது. அவர் பேர் மற்ற

ளர்களுக்கு மறந்தே போயிற்று. அவர் மாத்திரம் 'செல்லப்பா' என்று கையெழுத்துப் போடுவார். அவர் வீட்டிலிருந்து சிலநாள் கோவிந்தன் குழம்பு ரசம் வாங்கிக் கொள்வான். வாங்கிக் கொள்வதாவது! அவன்தான் சங்கோசப் பிராணி ஆயிற்றே. நெட்டை வாத்தியாரே வற்புறுத்தி, வாங்கிக்கொள்ளச் சொல்வார்.

இருபத்தைந்தே வயசான கோவிந்தனுக்கு இங்கே கட்டுப்பாடு எதுவும் இல்லை. எப்போதும் நாவல் வாசிக்கிறதும் கதை வாசிக்கிறதுமாக இருந்தான்.

தேவானையின் வளமான மேனியும் முக வசீகரமும் சுறுசுறுப்பும் கோவிந்தன் உள்ளத்தைக் கவ்வின. அவள் வேலைக்காரி; மாசத்துக்கு ஒரு ரூபா கொடுத்தால் போதும்; அவன் ஒன்றரை ரூபாய் கொடுக்கிறான். அதற்கே அவள் எவ்வளவோ ஆனந்தமடைகிறாள்.

தனி வீடு; என்ன செய்தாலும் கேட்பார் இல்லை. பணத்தால் எதையும் மறைத்துவிடலாம். அழகை அநுபவிக்கும் பருவத்தில் சும்மா இருப்பதில் என்ன பயன்?—அவன் உள்ளம் கிடந்து தடுமாறியது.

'என்ன யோசனை இது? நம் பெரியவர்களின் நிலை என்ன? ஒழுக்கம் என்ன? எல்லாவற்றையும் மறந்து இப்படி மனத்தை அலைய விடலாமா? ஒரு முறை தவறினால் பிறகு தூயவனென்ற நிலை வரமுடியாதே! இனி அவள் வரும்போது நாம் உள்ளே இருந்து படிக்கலாம்' என்று தீர்மானித்துக் கொண்டான். உடனே அபிராமி அந்தாதியை எடுத்துப் படிக்கலானான். அவள் பாத்திரங்களைத் துலக்கி வைத்து விட்டுப் போய்விட்டாள்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. வாசல் கதவைத் தாழ்ப்பாள் போட்டுக்கொண்டு வந்து சமையல் வேலையை ஆரம்பித்தான். ஒரு மணியில் எல்லாம் ஆயிற்று. அப்புறந்தான் குளித்தான். சாப்பிட்டான். படுக்கையை விரித்துப் படுத்துக்கொண்டான்.

தூக்கம் வருகிறதா? தேவானைதான் அகக்கண் முன் வந்து நின்றாள். அவன் மனம் சில சமயங்களில், 'தக்க சந்தர்ப்பத்தை நழுவ விடுகிறாயே' என்று கூறியது. சில சமயங்களில் பயந்து நடுங்கியது.

மறுநாள் திங்கட்கிழமை அவள் வந்தாள். பாத்திரங் களை எடுத்துப் போட்டான். என்னவோ தோன்றிற்று. வாங்கி வைத்திருந்த வாழைப் பழங்களில் இரண்டை எடுத்து வந்து, "இந்தா தேவானை" என்று கூப்பிட்டுக் கொடுத்தான். கொடுக்கும்போது அவள் கையில் படும்படி கொடுக்கவேண்டு மென்றே எண்ணி யிருந்தான். ஆனால், அப்படிச் செய்யாமல் ஏதோ ஒன்று தடுத்தது.

அவள், "எனக்கு எதற்கு, சாமி? நீங்கள் உற்றார் உறவினரை விட்டு இருக்கிறீர்கள். வாய்க்கு வேண்டி யதைப் பண்ணிப்போட யார் இருக்கிறார்கள்?" என்றாள்.

"இல்லை, இல்லை; வாங்கிக்கொள்" என்று சொல்லிக் கொடுத்தான். அவன் அவளுடைய புன்முறுவலை எதிர் பார்த்தான்; கண்வீச்சை எதிர்பார்த்தான். அப்படி ஏதும் அவளிடம் தோன்றவில்லை.

ஒவ்வொரு நாளும் அவன் உள்ளத்தில் ஒவ்வொரு போராட்டம். 'இவளை அனுப்பிவிட்டு, யாராவது கிழவியை வேலை செய்யச் சொல்லலாமே' என்று ஒருகணம் நினைப்பான். அடுத்த கணமே, 'பாவம்! இந்த ஏழைக்கு வேறு வேலை கிடைப்பது அரிது. இவள் நம்மை என்ன செய்கிறாள்? பார்க்க அழகாய் இருக்கிறாள். சபலத்துக்கு ஆளாகாமல் ஜாக்கிரதையாக இருக்க வேண்டியது நம் கடமை' என்று தோன்றும்.

இப்படி அவன் மனத்தில் எழுந்த புயல் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தது. அதோடு சேர்ந்தாற்போல் பயமும் வளர்ந்தது. கிராமத் தில் கட்டுப்பாடு அதிகம். ஏதாவது தவறு நேர்ந்து விட்டால் ஊரே கொதித்து எழுந்துவிடும்.

அவனுக்கு ஒன்றும் தெரியவில்லை. அவள் முற்றத்தில் வேலை செய்யும் போதெல்லாம் அவன் சங்கடமான நிலையில் இருப்பான். அவள் போன பிறகு ஆட்சேப சமாதானங்கள் எழும்; மறையும்.

இப்படியே போய்க் கொண்டிருந்தால் ஒரு வேலையும் செய்ய முடியாது என்று தோன்றிவிட்டது. ஒன்று செய்தான். ஒரு ஞாயிற்றுக்கிழமை நெட்டை வாத்தியாரிடம் போனான். "ஸார், ஒரு வேண்டுகோள்" என்றான்.

"என்ன அப்பா, புதிதாகப் பேசுகிறாயே!"

"நீங்கள் தினமும் காலையில் என்ன பண்ணுகிறீர்கள்?"

"என்ன பண்ணுவேன்? காலையில் எழுந்து பல் விளக்கிக் காபி குடிப்பேன்" என்று சொல்லிச் சிரித்தார்.

"அப்புறம் என்ன செய்வீர்கள்?"

"மூச்சு விடுவேன்; கொட்டாவி விடுவேன்; அவளோடு பேசுவேன்; பேப்பர் பார்ப்பேன்."

"அந்தப் பேப்பரை நான் இருக்கும் இடத்துக்கு வந்து பாருங்கள் என்று சொல்லத்தான் வந்தேன்."

"நீதான் பேப்பரைப் பார்க்கிறாயே! நான் வந்து படித்துக் காட்ட வேண்டுமா?"

"அதற்கு இல்லை. காலையில் சமையல் செய்யும்போது சோம்பலாக இருக்கிறது. வேலைக்காரி வந்து பற்றுப் பாத்திரத்தைத் தேய்த்து வைக்கிறவரையில் பொழுதே போவதில்லை. எதையாவது படிக்கலாம் என்றாலும் மனம் ஈடுபடுவதில்லை. நீங்கள் வந்தால் எதையாவது பேசிப் பொழுது போக்கலாம்."

கோவிந்தன் உண்மையைச் சொல்ல அஞ்சினான். "இங்கே காலையில் முக்கியமான காரியம் இருந்தால், நான் தொந்தரவு செய்யவில்லை" என்றான்.

"சே சே! இங்கே நான் என்ன வெட்டி முறிக்கிறேன்? வருகிறேன் போ" என்றார் அவர்.

'அப்பாடி!' என்று மனத்துக்குள் ஆறுதல் பெற்றுக் கோவிந்தன் போனான்.

ஒவ்வொரு நாளும் நெட்டை வாத்தியார் ஆறு மணிக்கு வந்துவிடுவார். ஒன்பது மணி வரையில் இருப்பார். அப்போது தேவானையும் வந்து பாத்திரம் தேய்த்துவிட்டுப் போய்விடுவாள். கோவிந்தன் சமையல் செய்வதற்கு முன் எதையாவது கதையைப் படித்துக் கொண்டிருப்பான். நெட்டை வாத்தியாரோடு பேசுவான். ஆனாலும் அவன் கடைக்கண் தேவானையை அளப்பதை நிறுத்தவில்லை. மனப் போராட்டம் மாத்திரம் எவ்வளவோ குறைந்து விட்டது. நெட்டை வாத்தியாராகிற பாதுகாப்பை, கவசத்தை, அவன் சம்பாதித்துவிட்டான் அல்லவா?

அன்று நெட்டை வாத்தியாரை அவர் மனைவி ஒரு கேள்வி கேட்டாள்: "ஏன் அப்படி ஒவ்வொரு நாளும் காலை நேரத்தில் எதிர்வீட்டுக்குப் போய் உட்கார்ந்து கொள்கிறீர்கள்? ஏதாவது இட்டிலி கிட்டிலி கிடைக்கிறதோ?"

"போடி பைத்தியம்! அவன் சமையல் பண்ணிச் சாப்பிடுவதே பிரம்மப் பிரயத்தனமாக இருக்கிறது. இட்டிலி வேறேயா? 'காலையில் வாருங்கள்; பேசிக் கொண்டிருக்கலாம்' என்று கூப்பிட்டான்; அதனால் போகிறேன்."

"எதற்காக உங்களைக் கூப்பிட வேண்டும்?"

"பொழுது போகவில்லையாம். கொஞ்சம் வந்து துணையாக இருங்கள் என்றான்."

"நல்ல துணை! அவன் என்ன குழந்தையா, இல்லை ராத்திரி காலமா? பயப்பட. அது கிடக்கட்டும். அந்தக் குட்டிதான் காலையில் வந்து வேலை செய்கிறாளே; தனியாக எங்கே இருக்கிறான்?"

"அதென்னவோ தெரியாது; கூப்பிட்டான், போனேன்."

பெண் உள்ளம் நுட்பமானது; ஆடவரின் பல வீனத்தைத் தெரிந்துகொள்ளும் ஆற்றலுடையது.

"சாயங்காலந்தான் போது போகாது; பேச ஆள் வேண்டும்; காலை வேளையில் எதற்குத் துணை?"

"இந்தக் கேள்விகளையெல்லாம் அவனைக் கேள்."

சிறிது நின்று பிறகு சிரித்தாள் அவள்.

"என்ன சிரிக்கிறாய்?"

"எனக்கு உண்மைக் காரணம் தெரிந்துவிட்டது. பாவம்! அவன் சிறுபிள்ளை. ஏதோ சம்பாதிக்கிறான். அந்தக் குட்டி சொட்டை வாளைக்குட்டி மாதிரி இருக்கிறாள். காசுக்கு ஆசைப்படுகிற சாதிதானே? என்றைக் காவது பல்லைக் காட்டியிருக்கும். அவன் பயந்து போய் உங்களைத் துணைக்குக் கூப்பிட்டிருக்கிறான்."

"என்னடி உளறுகிறாய்?" என்றார் வாத்தியார்.

"உண்மையைத்தான் சொல்கிறேன். நீங்கள் வேண்டுமானால் கேட்டுப் பாருங்கள்."

அன்று மாலை நெட்டை வாத்தியார் கோவிந்தன் இருந்த வீட்டுக்குப் போனார். அவன் கையில் ஏதோ புத்தகத்தை வைத்துக்கொண்டு, எதையோ யோசித்துக் கொண்டிருந்தான். நாசுக்குத் தெரியாத வாத்தியார் உள்ளே நுழைந்தவுடன், "என்ன கோவிந்தன், அந்தக் குட்டியைப் பற்றியா யோசித்துக் கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டார்.

அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. மிரள மிரள விழித்தான். "என்ன சொல்கிறீர்கள்?" என்றான்.

"அவள்தான் கேட்கச் சொன்னாள்" என்று வாத்தியார் இங்கிதம் தெரியாமல் பேசினார்.

"அவளா? யார்?"

"அதுதான் என் வீட்டுக்காரி. அந்தக் குட்டி ஏதாவது விஷமம் செய்தாளோ?"

கோவிந்தனுக்கு விடை கூறத் தோன்றவில்லை. அசட்டுச் சிரிப்புச் சிரித்தான்.

"உள்ளதைச் சொல்லப்பா!"

"அதெல்லாம் ஒன்றும் இல்லை. அவள் இளம் பெண்; நான் சிறுபிள்ளை. ஊரார் ஏதாவது சொன்னால் என்ன செய்வது என்று பயந்தேன்."

"சரி, சரி; உண்மை விளங்கிவிட்டது" என்று வாத்தியார் போய்விட்டார்.

மறுநாள் காலையில் அவர் கோவிந்தன் வீட்டுக்கு வழக்கம்போல வந்தார். வரும்போதே கடுகடுவென்று இருந்தார். அங்கே வேலை செய்துகொண்டிருந்த தேவானையை, "ஏ பிள்ளை, என்ன நீ ரொம்பப் போக்கிரியென்று கேள்விப்பட்டேனே!" என்று மிரட்டினார்.

அவள் திடுக்கிட்டாள். "என்ன சாமி, சொல்கிறீர்கள்?"

"சுரைக்காய்க்கு உப்பில்லையென்கிறேன். இந்த ஏழை நாய்களுக்கு இடம் கொடுத்தால், அடக்க ஒடுக்கமாக இருக்கிறதில்லை. ஆளுக்கு வலை போடப் பார்க்கிறது!"

அவர் இரைவதைக் கேட்டுக் கோவிந்தனுக்குப் பயமாக இருந்தது. அவளை அவசியமின்றிக் கடிந்துகொள்வது அவனுக்குப் பிடிக்கவில்லை. அவரோ கன்னாபின்னா என்று பேசினார். அப்படிப் பேச வேண்டாமென்று தடுத்தால் தன் மேல் சந்தேகம் உண்டாகும் என்று பயந்தான்.

வாத்தியார் நாக்கில் நரம்பு இல்லாமல் பேசினார். அவள் வாய் பேசாமல் பாத்திரங்களைத் துலக்கி வைத்து விட்டுப் போய்விட்டாள்.

"இந்த நாயை யெல்லாம் நீ வேலைக்கு வைத்துக் கொள்ளக் கூடாது."

"பாவம், ஏழை!"

"பாவமாவது கீவமாவது! அவள் சொல்வது உண்மை தான் போலிருக்கிறது. உனக்கும் கொஞ்சம் சபலம் கிபலம்..."

"சீ! என்ன பேச்சுப் பேசுகிறீர்கள்?"

"பின்னே, அவளுக்காகப் பரிந்து கொள்கிறாயே!"

கோவிந்தன் மேலே பேச முடியாமல் திண்டாடினான். 'ஏன் இவரைக் கூப்பிட்டோம்' என்றாகிவிட்டது.

அடுத்த நாள் வாத்தியார் தாமே உத்தரவு போட்டு விட்டார். தேவானை வந்தவுடன், "இந்தா, இனிமேல் நீ இங்கே வேலைக்கு வரவேண்டாம்" என்று கடுமையான குரலோடு கூறினார்.

அவள் அப்போதுதான் தலை நிமிர்ந்தாள். "அவர் அல்லவா அதைச் சொல்ல வேண்டும்?" என்று சாதாரணமாகச் சொன்னாள்.

நெட்டை வாத்தியாருக்குக் கோபம் பொத்துக் கொண்டது. "அத்திரி தகடிகை! அப்படிச் சொல்லு. அவரா சொல்ல வேண்டும்? என்ன ஐயா, இந்தக் கேலிக் கூத்து? நீ சொல் ஐயா?" என்று உறுமினார்.

கோவிந்தன் வெலவெலத்துப் போனான். எப்படியாவது இந்த இக்கட்டிலிருந்து விடுபட வேண்டுமென்று தவித்தான். "ஆமாம் அம்மா; நீ நாளை முதல் வரவேண்டாம். இந்தா உன் சம்பளம்" என்று சொல்லிப் பர்ஸி லிருந்து ஒரு ரூபாயை எடுத்து அவள்முன் வைத்தான்; கையிலே கொடுக்கத் துணிவில்லை. பதினைந்து நாளே ஆகியிருந்தாலும் போனால் போகட்டும் என்று ஒரு ரூபாயைக் கொடுத்தான்.

அவள் அதை எடுத்துக்கொண்டு போய்விட்டாள். வாத்தியார், "நான் வேறு வேலைக்காரியைப் பார்த்துத் தருகிறேன்" என்று சொல்லி, வெற்றி மிடுக்கோடு தம் வீட்டுக்குப் போய்விட்டார்.

கோவிந்தனுக்கு அன்று சோறே வேண்டியிருக்க வில்லை. அநியாயமாய் ஒருத்தியைக் குற்றவாளியாக்கித் தூக்கில் இட்டுவிட்டதுபோல வேதனைப்பட்டான். 'அவள் எள்ளளவும் தவறு செய்யாதவள். அவளை அப்படியெல்லாம் வைது துரத்தியது பாவத்திலும் பாவம், பெரும் பாவம்! இந்த மனிதர் ஏன் இப்படி ராட்சசரைப் போல

ஆகிவிட்டார்? என்னை இவர் காப்பாற்றுகிறாராம்! ஆம்; நான்தானே காப்பாற்றக் கூப்பிட்டேன்? கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது! அந்தப் பெண் எவ்வளவு சாது!'— அவளை நினைக்க நினைக்க அளவு கடந்த இரக்கமும், நெட்டை வாத்தியார்மேல் கோபமும் உண்டாயின.

இரண்டு நாள் கழித்துக் கோவிந்தன் ஊருணிப் பக்கம் குளிக்கப் போனான். அன்று ஞாயிற்றுக்கிழமை. குளித்துவிட்டு ஈர உடையுடன் வீட்டுக்கு வந்து கொண் டிருந்தான். "சாமி" என்று ஒரு பெண் குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தான்; தேவானை!

"என்னை வேண்டாம் என்று சொல்லி விட்டீர்களே; நான் என்ன குற்றம் செய்தேன் சாமி?" என்று பணிவாகக் கேட்டாள்; பணிவினூடே ஒரு பெருமிதமும் இருந்தது.

அவன் என்ன சொல்வான்? அவள் முகத்தை நிமிர்ந்து பார்க்க அவனுக்குத் திராணி இல்லை.

"நீ ஒரு குற்றமும் செய்யவில்லை அம்மா; குற்றம் செய்தவன் நான்தான்."—அதற்குமேல் அவனால் பேசமுடிய வில்லை. பேச முயன்றால் விக்கி விக்கி அழுதிருப்பான். அதைச் சொல்லிவிட்டு வேகமாக நடைபோட்டு வந்தான்.

வீட்டுக்கு வந்து உலர்ந்த உடையை உடுத்துக் கொண்டு பிரமை பிடித்தவன்போல் உட்கார்ந்திருந்தான். அவன் உள்ளத்தில் தேவானை நின்றாள். "நான் என்ன குற்றம் செய்தேன் சாமி?" என்று கேட்டாள். அந்தக் கேள்வி அவன் உள்ளத்தை ரம்பம் போட்டு அறுத்தது. ஓவென்று கதறவேண்டும் போல இருந்தது. அவனை அறியாமலே கண்ணில் நீர் ததும்பியது.